www.tamilarangam.net

80
18.11.1994

சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுகள் ஆறாண்டு நிறைவையொட்டி

நோர்வே தமிழ்க் கலாசார மையம் வழங்கும்

முத்தமிழ் விழா

ஒஸ்லோ, 18 நவம்பர் 1994
மாலை 18.00

நிகழ்வின் நிரல்

18.00
நடனம்

18.15
முகவரி தேடியே
நாடகம்

19.00
சுவடுகள் ஆண்டுமலர் வெளியீடும் விமர்சனமும்

19.30
சிறைக்கதவுகள்
நாடகம்

19.50
பரிசளிப்பும் இடைவேளையும்

20.20
தாவீதும் கோலியாத்தும்
நாட்டுக்கூத்து

21.15
இன்னொரு தேசம் இன்னொரு கனவு
கவியரங்கம்

21.45
ஒரு கை கொடு
நாடகம்

22.00
தேசம் பிரிந்த ராகங்கள்
மெல்லிசை நிகழ்ச்சி

அரங்கிலும் அருகிலும்

முகவரி தேடியே

மேடையில்: தீபா, சுகிர்தா, திலீபன், சிறீ, தயாநிதி, கண்ணன்

பிரதி: விமலநாதன் உதவி: ரவிக்குமார்
இசை: ரவிக்குமார்
நெறியாள்கை: விஜயேந்திரன்

சுவடுகள் ஆண்டுமலர் விமர்சனம்:

மைத்ரேயி

சிறைக்கதவுகள்

மேடையில்: தயாநிதி, சிறீ, குணசீலன், சந்திரகுமார், விஜயேந்திரன்

பிரதி: தமயந்தி
இசை: ரவிக்குமார்
நெறியாள்கை: விஜயேந்திரன்

தாவீதும் கோலியாத்தும்

மேடையில்: ஜெயராஜா, ஜோன் பீற்றர், குணசீலன், விமல்ராஜ்

பிரதி: அண்ணாவி.அமரர் கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி
இசை: குணசீலன் - கே.சுந்தர்
நெறியாள்கை: ஜெயராஜா

ஒரு கை கொடு

மேடையில்: நவாஸ், சிறீதனம், நகுலன், காண்டீபன், விமல்ராஜ்

பிரதி, நெறியாள்கை: அந்தோனி தியோபிலிஸ்
இசை: முரளிதரன்

நன்றிக்குரியவர்கள்!

சுவடுகள் ஆண்டுவிழாவைச் சிறப்புறச் செய்ய வந்த அனைத்து ரசிகர்கள்.

விளம்பரம் மற்றும் தனிப்பட்ட நன்கொடைகளால் விழாவையும் சிறப்பு மலரையும் சாத்தியப்படுத்தியோர்.

தமது நேர நெருக்கடிகளுக்குள்ளும் நாடகங்களில் பங்கேற்று உதவிய நடிகர்கள், ஒத்திகைகளுக்கு இடம் தந்துதவிய நண்பர்கள்.

தூரத்தை ஒரு பொருட்டாகக் கொள்ளாது இங்கு வந்து நாட்டுக்கூத்தை வழங்கும் ஸ்தவாங்கர்வாழ் ஈழக் கலைஞர்கள்.

குறுகிய கால அவகாசத்தில் மலரின் வடிவமைப்பைச் செய்துதவிய பிரேம்ராஜ்.

நாடகங்களின் இசையமைப்பிலும் ஒலியமைப்பிலும் உதவிய ரவிக்குமார், முரளிதரன், கே.சுந்தர் - குணசீலன், நாடகப் பாடல்களைப் பாடிய பாடகர்கள்.

விழா ஒழுங்குகளில் தமது உதவிகளை வழங்கியோர்.

கவியரங்கில் பங்கெடுத்த கவிஞர்கள்

போட்டிகளில் உற்சாகத்துடன் பங்கேற்றவர்கள்.

நன்றி சொல் மறந்தமைக்காக மன்னிக்க இருப்போர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த.பழமலய்



மீட்சி

எங்கள் ஊர் ஏரியில்
முங்கி மூழ்கிக் குடைந்து நீராடலாம்

யானை வாரி ஓடையில் இலுப்பை
நிழலில்
கட்டிப் புரண்டு சண்டையிடலாம்
கரிநாள் கூட்டம் கலைவது
தெரியாமல்,
முசுட்டெறும்புகள் கடித்தால்தான்
மூத்திரம் விட்ட மண்ணைத்
தேய்த்துக்கொண்டு
வீடு திரும்புவோம்.

எங்கள் குழுமூரில்
ஒருவரை ஒருவர் கூவிக்கொண்டு
வேலைக்குப் போவார்கள்.
காலமெல்லாம் உழைத்துத்
தேய்ந்தவர்கள்,
வீட்டுக்குக் காவலாய்த்
திண்ணையில் கிடப்பார்கள்.

இன்னும் நான்
நுழையாத சந்துகள், பார்க்காத
மனிதர்கள்,
ஈமொய்த்துக் கிடக்கும் பன்றித்
தொட்டிகள்,
தெருவோரக் கழிவுகள், அம்மணச்
சிறுவர்கள்.

ஊருக்குப் போனால், அன்று இரவே
குடிநீரால், நீர்ச்சுருக்கு' வதைக்கும்.
வெங்காயம் தின்னச் சொல்வார்
அப்பா.
புளியங்கொட்டை தேடி,
நசுக்கித் தருவாள், அம்மா.

கல்விக்கும், மருந்துக்கும், ஒரு
பொருள் வாங்கவும்
பயணம் போகவேண்டும்.

இதெல்லாம் பெரிதில்லை,
காற்றுக்கும், அது சொல்லி
மரங்களுக்கும்
என் பேர் தெரியும்.
இந்த நகரத்தில் போல,
நாங்கள் அங்கு யாரோ அல்ல.

இராமனுக்கு இருக்கலாம், எங்கும்
அயோத்தி.
எனக்குக் குழுமூர், குழுமூரில்தான்.

ஹாங்க் ரிக்ளர்

சிறுவர்களின் பாடல்

ஓ! சரஜீவோவின் சிறுவர்களே,
கவனியுங்கள், கற்றுக்கொள்ளுங்கள்
மறக்காதீர்கள், இது வரலாற்றுப்
பாடம்!

கிழக்கின் "புத்திசாலிகளாலும்"
மேற்கின் "ராஜதந்திரிகளாலும்"
ஜெனவாவிலும், நியூயோர்க்கிலும்,
அதிகாரத்தின் நீண்ட அறையில்
இரண்டு வருடமாய்
உங்கள் தலைவிதி
தீர்மானிக்கப்படுகிறது.
உங்களுக்காகக்
கவலைப்படுகின்றனர் - ஆனால்
சொந்த நலனுக்காக
முடங்கிவிடுகின்றனர்
விவாதம், ஏற்பு, ஏமாற்றுதல்
ஒப்பந்தம், திசைதிருப்புதல், "அமைதி
ஏற்படுத்துதல்"
வீணாய்ப் போன
விளையாட்டுகளுடன்
அவர்கள் காத்திருக்கின்றனர்.
மூளையற்ற செர்பியர்களின்
கேலிக்கூத்துடன் சிரித்தபோதும்
மேலும் கிராமங்களை ஒழித்து,
உயிர்களை அழித்து
பெண்வதையுடன்,
கொலைகளுடனும்
வெறுப்பின் விதைகளை
விதைக்கின்றனர்.

ஓ! சரஜீவோவின் சிறுவர்களே,
இவர்கள் ஏன் காத்திருக்கின்றனர்?
வரலாற்றின் சாதாரண பதில்
இதோ:

உங்கள் சாவுக்காகக்
காத்திருக்கின்றனர்

தமிழில்: அ.ஜ.கான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபிமன்யு

அன்புலகிற்கு அவரொரு குழந்தை!
அறிவுலகிற்கு அவரொரு பொக்கிஷம்!!

"ஏ.ஜே"

ஏஜே என எல்லாராலும் அன்பாகவும், பண்பாகவும் அழைக்கப்படும் ஏ.ஜே.கனகரத்தினா அவர்களுக்கு அண்மையில் அறுபது வயது பூர்த்தியானது.

1958ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை முடித்துக்கொண்ட இவர், சில ஆண்டுகள் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும், யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்துவிட்டுப், பின்னர் கூட்டுறவுத் துறையில் கடமையாற்றினார். 1976ம் ஆண்டு நடுப்பகுதியில் இருந்து யாழ் இலக்கியவுலகின் புகழ்பெற்ற பல எழுத்தாளர்களது கதைகள் - கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கில வாசகர்களுக்கு அறிமுகமாக்கிய பெருமை இவரையே சாரும் என்றால் அது மிகையாகாது. "மத்து" என்ற இவரது கட்டுரைத் தொகுப்பிற்கு 1971ல் சாகித்திய மண்டல விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அலை வெளியீடான "இலக்கியமும் மாக்சிசமும் - சில நோக்குகள்" என்ற நூலையும் எழுதிப் பலரின் பாராட்டையும் பெற்றார். 1980களில் யாழ்ப்பாணத்தில் இருந்து வாரந்தோறும் வெளிவந்த "சற்றடே றிவியு" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஆசிரியர் குழுவிலிருந்து இவர் எழுதிய கட்டுரைகள் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றதுமன்றி, தமிழ் மக்களின் இனப்பிரச்சனை பற்றியும், துன்பதுயரங்கள் பற்றியும் ஐரோப்பிய நாடுகள் புரிந்துகொள்ளப் பத்திரிகையூடாகப் பங்காற்றியவர். இந்திய - இலங்கை ராணுவங்களின் காட்டுமிராண்டித் தனங்களையும், அடாவடித்தனங்களையும் தன் எழுத்துகள் மூலம் உலகிற்கு எடுத்துச் சொன்னவர். அதற்காகத் தனது பேனாவினைக் கூரிய வாளாகப் பயன்படுத்தியவர். மேலும் "அலை", "லங்கா கார்டியன்" சஞ்சிகைகளிற்கும் அரசியல் - இலக்கிய - நாடக விடயங்கள் பற்றி நிறையவே எழுதியுள்ள இவர், ஓவிய, திரைப்படத் துறைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இயல்பாகவே நிறைய வாசிக்கும் பழக்கத்தைக் கொண்ட இவர் ஒரு சிறந்த, நேர்மையான விமர்சகரும்கூட.

"கடுகு சிறிது, காரம் பெரிது" என நம்மிடத்தில் ஒரு பழமொழி உண்டு. இப்பழமொழி ஏஜே அவர்களுக்கு நன்கு பொருந்தும். அன்பு - உண்மை - நேர்மை -எளிமையே அவரது வாழ்வின் சத்தியங்கள். புகழ்ச்சியை விரும்பாத, அடக்கமான ஒரு மனிதர். அண்மையில் லண்டனில் உள்ள அவரது நெருங்கிய நண்பரொருவர் ஒரு சிறுவிடுமுறையில் லண்டன் வந்து, அங்குள்ள நூலகங்களைப் பயன்படுத்திச் செல்லுமாறு அவரைக் கேட்டபோது, அவ்வழைப்பினை ஏற்க மறுத்துக் கொண்டார். தனது நாட்டில் தனது மக்களுடனும், அவர்களது பிரச்சனைகளுடனும் தான் வாழவேண்டும் என்ற நோக்கமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்பது எனது நம்பிக்கை. ஒரு குழந்தையைப் போல கள்ளங் கபடமின்றி எல்லோர் மீதும் அன்பு செலுத்துகிற இவர், ஒரு பரந்த இதயம் கொண்டவர்.

விகடத்துவமாகவே எல்லோரிடமும் பேசும் தன்மை கொண்ட இவர், ஒரு நல்ல விகடகவியும்கூட! அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் யாவரும் தங்கள் வாழ்வில் ஒரு உன்னதமான மனிதனைச் சந்தித்திருக்கிறார்கள் என்றால் அது பொய்யாகாது. அறிவும், ஆற்றலும், ஆழமும் நிறைந்த இவர் அன்புலகிற்கு ஒரு பொக்கிஷம்! இவர் இன்னும் நீண்டகாலம் நலத்தோடு வாழவேண்டும் என்பதும், இன்னும் நிறைய எழுதவேண்டும் என்பதுமே எங்கள வேண்டுகோள்களாகும்!

www.tamilarangam.net

சாள்ஸ்

ஆறாவது ஒழுங்கைக் கடைசி வீடு

மழைபெய்து ஓய்ந்துவிட்டது. பூத்துக்கிடந்த கிளுவை மரங்களில் மழைநீர் தொங்கி வளைந்து கிடந்தன. சந்தி மூலையிலிருந்த வைரவர் கோயிற் சூலத்தில் செவ்வரத்தம் பூ குத்தப்பட்டிருந்தது. கோயிற்கூரை புதிதாய் வைக்கோலால் வேயப்பட்டிருந்தது. இந்த ஆறாவது ஒழுங்கையின் செம்மண்ணை இழுத்துக்கொண்டு தண்ணீர் ஓடத்தொடங்கிவிட்டது. குன்றும் குழியுமாய் நிலம். பார்த்துப் பார்த்து மெல்ல நடக்கின்றேன்.

இந்த மண்ணை மிதித்த கடந்த நாற்பது வருட வாழ்க்கையில், முடிந்த மூன்று வருடங்கள் இந்த ஒழுங்கை மண்ணை மிதிக்காதே என்று தடுத்துவிட்ட தொல்லைகள்..... இந்த மண்ணைவிட்டுப் பிரியேன் என்றிருந்த என்னைக்கூட..... துரத்தியது யுத்தம்.
காஞ்சூரைக் காடாய் கண்டிரோட்டை அண்டிக் கிடந்த இந்தக் கிராமத்தை உருவாக்க தெரியப்பட்ட முதல் இருபது பேரில் நானும் ஒருவன். இளந்தாரியாய் வெளிக்கிட்டு கிழடுதட்டும்வரை இந்த மண்ணோடு ஒட்டி வளர்ந்த என்னைப் புடுங்கி எறிந்த பேய்களை நான் என்னென்பேன். தோல் சுருங்கி, கண்மங்கி, மயிர்முழுவதும் நரையாகி, நடைதளர்ந்து தள்ளாடும் இந்த நேரத்திலா இது எனக்கு வரவேண்டும்.

நானும் என் பிள்ளைகளும் பேரர்களும் உழுது திரிந்த வயற்காடும், வீடும்.... என் அயலட்டையையும் மீண்டும் தரிசிக்கும் அவசரம் எனக்கு. எப்போதும் அறுக்கையாய் அடைக்கப்பட்டுக் கிடக்கும் மாட்டு அம்பலம்' வீட்டு வேலி, ஓவென்று கட்டைகளிற் தொங்கும் கம்பிகளுடன் கிடந்தது. மாடுகளும் இல்லை, கன்றுகளும் இல்லை. நெடுந்தீவு அந்தோனி' வீட்டில் யாரும் இல்லை. அவன் ஐந்தாம் வாய்க்காலுக்குக் குடிபோயிருப்பான். சின்னப்பிரகாசம் மகனுடன் இந்தியா போனவன். வீடு கவனிப்பாரற்றுத்தான் கிடக்கும்..... என் கண்ணுக்கு எதுவும் தெரிவதாய் இல்லை. இந்த ஒழுங்கையும் தெருவும் எவ்வளவாய் உருக்குலைந்து கிடக்கிறது.

ஆறாவது ஒழுங்கைக் கடைசி வீடு. அது என் வீடு. சிறுகச் சிறுகச் சேர்த்துச் சேர்த்துக் கட்டிய வீடு. என் கல்வீடு கம்பீரமாய் நிமிர்ந்துதான் நிற்கிறது. விறாந்தை வளையில் ஏணை கட்டி என் பேரக்குழந்தைகள் ஆடிய வீடு.
இருண்ட வானம் வெளுத்து சூரியன் உச்சியில் சுட்டுக்கொண்டு நின்றான். படலையடி கொஞ்சம் மாற்றப்பட்டுள்ளது. சூரியன் சுடாத வளவு இது. நிழல் தந்த அந்த நாவல் மரம் தறிக்கப்பட்டு வெறும் கட்டையாய் வீழ்ந்து கிடந்தது. அந்தப் படலையைத் திறந்து வளவிற்குள் போனேன்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சாள்ஸ் தற்போது நெதர்லாந்தில் வசித்து வருகிறார். அஆஇ சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவர். மனைவி, இரு குழந்தைகள்.

www.tamilarangam.net

பின்பக்க கழிவாற்றங்கரையில் வளர்ந்து கிடந்த மந்துக்காடு இப்போது இல்லை. ஆற்றை நிறைத்து கலங்கிய தண்ணீர் சுழித்துச் சுழித்து ஓடிக்கொண்டிருந்தது. வீட்டிற்கு முன்னால் கொடி எலுமிச்சை தடிகளிற் படர்ந்து கிடந்தது. வளவு முழுவதும் மாறித்தான் போச்சு. மூன்று வருஷங்களில் எல்லாமே மாறிவிட்டது. அடிவளவிலிருந்த கக்கூசு கட்டப்பட்டிருக்கிறது. கிணற்றடியில் புதிதாய் வாழைகள் நடப்பட்டு செழித்துக் கிடக்கின்றன. மாமரங்கள் நன்றாய் வளர்ந்து பூத்து மணக்கின்றன. தென்னங்கன்றுகள் குலைதள்ளி வட்டுவெடித்து ஓலைகள் நிலம்தொட்டுக் கிடக்கின்றன.

என் கிராமத்துக் காற்றை நான் சுவாசிக்கத் தொடங்கிவிட்டேன். ஏதோ இழந்துபோன ஒன்றை திரும்பப் பெற்றதாய் எனக்கொரு திருப்தி. என் இயலாமை மெல்ல மெல்ல விலகி இளமையுறுவதாய் நான் உணர்கிறேன். நான் பூமணியை கலியாணம் கட்டி வீட்டிற்குக் கூட்டிவந்த வேளை இருந்த பூரிப்பு இன்று எனக்கு. எனது வீடு, எனது நிலம், எனது தேசம்.

இந்த ஆறாவது ஒழுங்கையில் முன்னால் இருந்த வீடுகள் எரிக்கப்பட்டபோது, தருமு வீட்டுக் கலியாணமும் செத்த வீடும் ஒரே பந்தலில் நடந்த அன்றைக்குத்தான் நாங்கள் பின்பக்க ஆற்றைக் கடந்து ஓடினோம். ஆற்றைக் கடந்து, கடலைக்கடந்து வாழ்ந்த வாழ்க்கையில் எல்லாமே வெறுமைதான்.....

என்பாட்டிற்கு வளவைச் சுற்றிக்கொண்டு வீட்டு வாசலுக்கு வந்தேன்.

"புள்ளை கோமளம், கோமளம்" கூப்பிட்டுப் பார்த்தேன். வீட்டில் எந்த ஆளரவமும் இல்லை. வீடு பூட்டிக் கிடந்தது. விறாந்தையில் கிடந்த சாக்குக் கட்டில் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து வந்து மாமர நிழலில் போட்டுப் படுத்தேன். இன்று எனக்கு இது நிம்மதியான நித்திரை.-

"அப்பு.. அப்பு ஆரப்பு நீ" என்னைத் தட்டி எழுப்பிய அந்தப் பிள்ளையை கண்களை இடுக்கி, கை இரண்டையும் புருவத்துக்குத் துணையாக்கிக் கூர்ந்து பார்த்தேன். எனக்கு அடையாளம் தெரியவில்லை.

"ஆரப்பு நீ ஏனணை இதிலை வந்து படுத்திருக்கிறாய்?" மீண்டும் அந்தக் கேள்வி என்மீது பெரும் பாறையாய் வந்து விழுந்தது. இது நான் கொத்திப் பிரட்டிப் பண்படுத்திய மண். என் வளவு. நான் கட்டிய வீடு. என்னால் இவற்றைச் சொல்ல முடியவில்லை. இந்த மூன்று வருடம் என்னைக் கொன்றுவிட்டது.

"புள்ள கோமளம் எங்கயணை?" என்றேன்.

"அப்பு இப்ப ரெண்டரை வரிசமா இந்த வீட்டிலை நாங்கள்தான் இருக்கிறம். கோமளம் ஆரெண்டு எனக்குத் தெரியாது. ஆனா இது கோமளத்தின்ரை வீடு எண்டு அயலாக்கள் சொல்லியிருக்கினம். ஆக்கள் விட்டிட்டு ஓடின வீடுகளிலையும், வெளிநாட்டுக்குப் போன ஆக்களின்ரை வீடுகளிலையும் அகதிகளாய் வந்த எங்களைப் போல ஆக்களைக் குடியிருத்தியிருக்கினம். நாங்கள் வடமராட்சியிலை அகதிகளாய் இருந்து வந்தனாங்கள்"

"கோமளம் என்ரை மூத்த மகள்" சொல்ல வாயெடுத்தேன் முடியவில்லை.

என் மகள் மருமகன் பேரக்குஞ்சுகள் எங்கே? எங்காவது அகதியாய் இன்னொரு வீட்டிலா? அல்லது இன்னொரு நாட்டிலா? எங்கள் குருவிக்கூடு ஏன் பிய்த்து எறியப்பட்டது?

"நீ கோமளத்துக்கு சொந்தமாண அப்பு?" மீண்டும் விசாரித்தாள்.

"புள்ளை இந்தக் கிணத்திலை ஒரு வாளி தண்ணி அள்ளித் தாறியா?" என்றேன்.

மெதுவாய் என்னைப் பிடித்துக் கூட்டிப்போய் வாளியில் தண்ணியள்ளி ஊற்றினாள். நான் இரண்டு கைகளையும் ஏந்தி கைமண்டையில் என் தாகம் தீரக் குடித்தேன்.

"புள்ள நான் போறனணை" அவள் என்னை மிக அனுதாபமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். படலையைத் தாண்டி தறிக்கப்பட்டுக் கட்டையாய்க் கிடந்த அந்த நாவல் மரத்தில் கொஞ்சநேரம் இருந்தேன். பின்னர் எழுந்து என் கால்போன போக்கில் நடந்தேன்.

20.10.94

செ. யோகராசா

ஈழத்து இலக்கிய வளர்ச்சியும் பேராசிரியர் கைலாசபதியும்

போராசிரியர் க. கைலாசபதி நினைவாக இருவருடங்களுக்கு முன்னர் பன்முக ஆய்வில் கைலாசபதி (சவுத் ஏசியன் புக்ஸ் 1992) என்ற காத்திரமான ஆய்வுக்கட்டுரைகள் கொண்ட நூலொன்றினை வெளியிட்டிருந்தது. பதின்மூன்று நோக்குகளில் கைலாசபதியின் பணிகளை எடை போட முடியும். அந்நூலில் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு கைலாசபதியின் பங்களிப்பு என்ற (தனியொரு) தலைப்பில் கட்டுரை எதுவும் இடம் பெறாதமையும் ஞாபகம் வருகின்றது. கைலாசபதி போல் நவீன ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியும் ஏறத்தாழ அறுபதுகளை எட்டிய நிலையில் இவ்வாறு கைலாசபதியைக் காண்பது என்பது ஒருவித பொருத்தப்பாடுடையதுமாகலாம்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு கைலாசபதியின் பங்களிப்பு (1957 - 1982) பற்றிப் பின்வரும் அடிப்படைகளில்நோக்குவது பொருத்தமானது.

அ) பத்திரிகைத்துறை
ஆ) எழுத்துத்துறை
இ) பல்கலைக்கழகத்துறை

பத்திரிகைத்துறை என்கின்ற போது தினகரன் பத்திராதிபராக விளங்கி கைலாசபதி ஆற்றிய பணியே (1957 - 1961) இங்கு என்பது பலருமறிந்தவொரு விடயமாகும்.

தினகரன் ஊடாக ஈழத்துப் பத்திரிகை உலகினுள் கைலாசபதி நுழைகின்ற போது ஈழத்துப் பத்திரிகை உலகம் எவ்வாறு காட்சியளித்தது என்பதனைச் சற்று சிந்திக்க வேண்டும். சுருங்கக் கூறின் ஈழத்துப் பத்திரிகைகள் தமிழகப்பத்திரிகைகளின் இன்னொரு பதிப்பாக விளங்கின எனலாம். மாயாவி, எல்லார்வி வாசவன் முதலானோரின் கதைகள் சேதுராமனின் அதிர்ஷ்ட எண்□ானம் முதலான கட்டுரைகள், தமிழக நூல்களின் மதிப்புரைகள் என்பனவே தினகரனை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இன்னொரு விதமாகக் கூறின் ஈழத்து எழுத்தாளரின் படைப்புக்கள் இடம் பெறுவது அபூர்வமே. சுருங்கக் கூறின் இங்குள்ள எழுத்தாளர்களுக்கு கதை எழுதத் தெரியாதெனக் கருதப்பட்ட காலம் அது. அவர்கள் படிப்பிலும் சாதியிலும் குறைந்தவர்கள் என்று நோக்கப்பட்ட காலம் அது. தினகரன், மனோரதிய் பாங்கான கதைகளையும், வீரகேசரி நகைச்சுவைக் கதைகளையும் வெளியிட்ட காலம் அது. (சுதந்திரன் மட்டமே விதி விலக்கு) மேற்கூறிய நிலையில் ஈழத்துப் பத்திரிகை உலகம் விளங்கிய போது தான் கைலாசபதியின் வருகை நிகழ்கிறது. நிலமை மேலது கீழாய் கீழது மேலாய் மாறுகிறது. ஈழத்துப் பத்திரிகை உலகில் ஈழத்து எழுத்தாளர்களும் (டானியல், இளங்கீரன்,டொமினிக் ஜீவா, நந்தி, எஸ். பொ. சொக்கன் வா. அ. இ) கவிஞர்களும் (தான்தோன்றிக் கவிராயர், நீலாவணன்) கலைஞர்களும் (சிவஞானசுந்தரம்,யூனுஸ்) அரசோச்ச ஆரம்பிக்கிறார்கள். உடன் விளைவாக ஈழத்து இலக்கியச்சொல் நெறி ஆரோக்கியமான தளத்தில் செல்கிறது. (தேசிய இலக்கியம் முற்போக்கு, சமூக நோக்கு, யதார்த்தம் மண்வாசனை என்ற விதங்களில்) நவீன ஈழத்து இலக்கியம் தொடர்பான கொள்கைகளும், கோட்பாடுகளும் மெல்ல, மெல்ல கருவாகி உருவாகின்றன. உள்ளும் வெளியும் இருந்த இலக்கிய நண்பர்கள் என்ற தாதிகளின் உதவியோடு ஈழத்து இலக்கியம் என்ற குழந்தை நலம் பேணும் மருத்துவிச்சியாகின்றார் கைலாசபதி. ஈழத்து எழுத்தாளர் சமூக அங்கீகாரம் பெறுகின்றனர். ஈழத்து எழுத்தாளர் தரம் மட்டுமன்று வாசகர் தரம், பத்திரிகையாளர் தரம் என்பனவும் இலக்கிய அந்தஸ்துக்குரிய நிலையினை எட்டுகின்றன. கைலாசபதி தினகரன் பத்திராதிபராக விளங்கிய காலம் இலக்கிய உலகின் பொற்காலமாகும். என்பது அவரது இலக்கிய எதிரிகளாலும் கூட வற்புறுத்தப்பட்டு வருகின்றதன்றோ?

ஈழத்து இலக்கிய ஆய்வாளர், ஈழத்து இலக்கிய விமர்சகர் என்ற விதத்தில் கைலாசபதியின் பங்களிப்பு எத்தகையது? சுருங்கக் கூறின் ஈழத்து ஆய்வுலகும் விமர்சன உலகும் பாராட்டுரைகள், கூறியது கூறல், ரசனையில் மூழ்கல் முதலான இயல்புகளைப் பெற்றிருந்த வேளையிலேயே கைலாசபதியின் இலக்கிய முயற்சிகள் இடம் பெறத்தொடங்கின. தமது கட்டுரைகளூடாக கைலாசபதி நவீன ஈழத்து இலக்கியத்திற்குரிய பண்புகளை இனங்காணச் செய்தார். அவை தமிழகத்தையும் எட்டச் செய்தார். தமது கட்டுரைகளூடாக கைலாசபதி ஈழத்து இலக்கியம் பற்றிய உணர்வு நாவலர் காலத்திலிருந்து உருப்பெற்று வளர்ந்த வரலாற்றினை அறியச்

www.tamilarangam.net

செய்தார். ஈழத்து இலக்கிய பாரம்பரிய வேர்களைத் தேடினார். நாவலரும், சி. வை. தாமோதரம்பிள்ளையும், பாவலர் துரையப்பாபிள்ளையும், சரவணமுத்துப்பிள்ளையும், விபுலானந்தரும் கைலாசபதியால் வலிமையும் வனப்பும் மிக்கவர்களாயினர். இவர்களது பணிகளின் உயர்வும் தாழ்வும் வாழ்வும் வனமும் விஞ்ஞான ரீதியான அணுமுறைக்குள்ளாயின. ஈழத்து சிறுகதை வளர்ச்சி பற்றி 1953ல் கைலாசபதி எழுதிய கட்டுரையே இன்றுவரை பைபிள் போல பலருக்கும் உதவுகின்றது. (இந்நிலைப்போக்கு கைலாசபதியின் விமர்சன ஆற்றலினை ஒரு விதத்திலும் புதிய ஈழத்து விமர்சன உலகின் வறுமை நிலையினை இன்னொரு விதத்திலும் காட்டுகிறதல்லவா?) இலங்கையர் கோனின் வெள்ளிப் பாதசரம் பற்றிய கைலாசபதியின் மதிப்பீடும் வியந்துரைக்கப்பட வேண்டியதே. (அது இன்றுவரை நூல் தொகுப்பினுள் இடம் பெறாமை விசனத்துக்குரியதாகும்..) விரிவஞ்சி வேறு உதாரணங்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றன. அதே வேளையில் ஈழத்து நூல்களுக்கு கைலாசபதி வழங்கிய சில முன்னுரைகளும் முக்கியமானவையாகின்றன.

இனி கைலாசபதியின் பல்கலைக்கழகப் பணிகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வாறு உரமூட்டின என்பது பற்றிச் சுருக்கமாகச் சிந்திப்போம். பேராதனை பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக ஆரம்பித்து (1961) கொழும்பு, வித்தியாலங்கார பல்கலைக் கழகங்கள் எனப்பரந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத் தலைவர், பேராசிரியர், பிடாதிபதி என்றவாறு நிறைவு (1982) காண்கிறது அவரது பல்கலைக்கழக வாழ்வு.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு சென்ற வேளையிலே சுய பாஷைக் கல்விக் கொள்கை காரணமாக (முதற் தடவையாக) பல மாணவர்கள் வருகின்ற வாய்ப்பும் ஏற்படுகிறது. எனவே இலக்கிய நாட்டம் கொண்டிருந்த பலர் (செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், செங்கையாழியான் என்றவாறு) வருவதும் அவர்கள் கைலாசபதியின் ஆளுமைக்கு, ஆளுகைக்கு உட்படுவதும் பலரும் அறிந்த விடயங்களாகும். பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஈழத்து பழைய இலக்கியங்களில் கவனஞ்செலுத்த, கைலாசபதி ஈழத்து நவீன இலக்கியங்களில் ஈடுபாடு கொள்ள ஈழத்து இலக்கியம் பற்றிய பார்வை வளர்ச்சி விசாலிப்பும், முழுமையும் அடையும் நிலை ஏற்படுகிறது. பேராசிரியர் வித்தியானந்தனின் ஈழத்து நாடக பின்னோக்கிய பாய்ச்சலிலும் கைலாசபதிக்கு ஓரளவு பங்குண்டு என்று கூறுவதில் தவறில்லை.

கொழும்புப் பல்கலைக்கழகம் தனித்து இயங்க ஆரம்பித்த சூழலில் கைலாசபதி அங்கு வந்து சேர்கின்றார். தமிழ்ச் சிறப்பு நெறியை பின்பற்றிய மாணவர்க்கு முதற்தடவையாக (1968) ஈழத்து இலக்கியம் ஒரு வினாத்தாளாகின்றது. பேராசிரியர் பூலோகசிங்கத்திடம் அதனைப் பயின்ற மாணவர்க்கு கைலாசபதியின் ஆற்றுப்படுத்தலும் கிட்டாமலில்லை. பாவலர் துரையப்பாபிள்ளையும், பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் மாணவரது ஆய்வுக்குட்பட்ட போது கைலாசபதியின் வழிகாட்டல் உதவுகின்றது!

மாணவரை ஊக்கப்படுத்துவது என்பது வெளியிலும் நிகழ்கிறது. ஈழத்து நூற்கண்காட்சி கொழும்பில் நடைபெற்ற போது மாணவராகிய நாமும் உதவியாளரானோம். கலைப்பூங்கா வானொலி நிகழ்ச்சிகளில் நாமும் பங்குபற்றினோம். ஈழத்து இலக்கிய முன்னோடிகள் தொடர்பான வானொலி உரைத்தொடரில் மாணவராயிருந்த நாமும் உரையாற்றினோம். இவற்றிற்கான உந்துசக்தி கைலாசபதியே என்பதனைக் கூறவேண்டியதில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலும் கைலாசபதியின் உயர்வும் அங்கு ஈழத்து இலக்கிய வளர்ச்சி பல படிகள் தாண்டிப் பாய்வதற்கு களம் அமைத்தன. தமிழ் சிறப்புக்கலை மாணவர் பலரும் ஈழத்து இலக்கியங்கள், புலவர்கள் பற்றியே சிந்தித்தனர். அதுமட்டுமன்று, முதுகலை மாணவர் பலரும் கூட குமாரசாமிப் புலவர் தொடக்கம் ஈழத்து புனைகதை வரையில் ஆய்வு செய்தனர். தொடர் கருத்தரங்குகள் பல நிகழ்ந்தன. நாவலர் நூற்றாண்டு விழா, நாட்டாரியல் கருத்தரங்கு முதலியன நடைபெறுகின்றன. அங்கு பேராசிரியர் சிவத்தம்பியும், இந்திரபாலாவும் கைலாசபதிக்கு வந்து வாய்க்கின்றனர்.(இங்கு மட்டுமன்று பேராதனைப் பல்கலைக்கழகம் தொடக்கம் அதற்கு முன்னரும் கைலாசபதியின் இலக்கியப் பணிகளுக்குப் பின்னாலுள்ள உந்து சக்திகளுள் பேராசிரியர் சிவத்தம்பி மிக முக்கியமானவராவார். அன்னாரின் அறுபதாண்டும் ஈராண்டின் முன்பே நிகழ்ந்து முடிந்தது.

இவை மட்டுமல்ல பல்வேறு நோக்குடைய சங்கங்கள், சபைகள் என்பனவற்றுடன் கைலாசபதி கொண்டிருந்த தொடர்புகளினூடாகவும் ஈழத்து இலக்கியம் வளம் பெறுகிறது. இங்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தொடர்பு பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை. நாவலர் நூற்றாண்டு விழாச் சபை வெளியிட்ட நாவலர் நூற்றாண்டு மலர்(1979) இன்றுவரை ஒரு நூற்றாண்டு மலர் எவ்வாறு அமைய வேண்டுமென்பதற்கான நடைமுறை விமர்சன நூலாக விளங்கி வருகின்றது. (விபுலானந்தர் நூற்றாண்டு மலர்களை மதிப்பிடுவோர் அதனை ஒரு விமர்சன அளவுகோலாகக் கொள்ளலாம்).

அம்மலரின் பதிப்பாசிரியர் கைலாசபதியே. யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவை பாரதி பற்றிய காத்திரமான கருத்தரங்கு நடாத்த வழிகாட்டியவர் கைலாசபதியே. அப்பேரவையினூடாக ரவீந்திரன் முதலான ஆய்வாளர் வெளியுலகிற்குத் தெரியவந்ததில் கைலாசபதிக்குப் பெரும் பங்குண்டு. ஈழத்து தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் - கலைப்பூங்கா தொடக்கம், ஈழத்து மெல்லிசைப் பாடல்கள் வரை - இலக்கியத் தரமுடையனவாக விளங்கியதில் - விளங்குவதில் - கைலாசபதிக்கும் கணிசமான பங்குண்டன்றோ!

சுருங்கக் கூறின் ஈழத்து இலக்கியம் *ஈழத்து இலக்கியம்* ஆனதிலும் அது தமிழகத்தின் கவனத்தை ஈர்த்ததிலும் அது தமிழ் இலக்கிய வரலாற்றின் முக்கிய கூறாகியதிலும் கைலாசபதிக்குப் பெரும் பங்குள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை. *ஈழத்து இலக்கிய முன்னோடி* என்ற நூலை வெளியிட்ட கைலாசபதி தானும் அவர்களுள் ஒருவராகிவிட்டார் அல்லவா?

■

சுகுமாரன்

கண்ணாடிக்கு அப்பால்

காமிராவுக்குப் பின்
எப்போதும் பிறத்தியாரின் கண்கள்.
காமிரா முற்
நான் சுனவான்.

கண்ணாடி முற் நான் மட்டும்.
எனவே
விதவிதமாய்ச் சிரிக்கலாம்
புதுமுகங்கள் அணியலாம்.

கண்ணாடி முற்
நான் கோமாளி
காமிராப் பதிவா
கண்ணாடிப் பிம்பமா,
எதில் நான் நிஜம்?
இல்லை,
இரண்டும் இல்லை.

ஒன்றில் நான் ஜடம்
மற்றதில் நான் சலனம்.

காமிராவில் பதியாத சலனத்துக்கும்
கண்ணாடியில் நிலைக்காத
பிம்பத்துக்கும்
இடையில் இருக்கிறேன்
நிஜமான நான்.

என்னை இன்னொரு நபராக உணர
எனக்குப் பொருத்தமான சாதனம்
புகைப்படமல்ல,
நிலைக்கண்ணாடிதான்.

புகைப்படத்தில்
நான் ஜடம்.
கண்ணாடியில்
நான் சலனம்.

எவ்வளவு முயன்றாலும்
காமிரா முற்
புன்னகை செயற்கையாகிறது.
எப்படித் தவிர்தாலும்
கண்ணாடி முற்
புன்னகைக்கத் தோன்றுகிறது.

காமிரா முற்
இயக்கப்படுகிறேன்
கண்ணாடி முற்
இயல்பாய் இயங்குகிறேன்.

எனது புஈகப்படம்
எனினும்
யாரும் பார்க்கலாம்.
எனவே



சோலைக்கிளி

சுவர்கள் நடந்துவரும் அறை

உன் மூச்சுக்குள் வரவா
நான் குடியிருக்க.
அழகு வெள்ளைப் பூக்களில்
குளிர்காலைச் சுகத்தில்
குந்திப் பின்னெழும்பி
பின்னெரு பூவில்
குந்தி எழும்பி குந்தி
பறக்கும் சிறு பூச்சே!

இது பெரிய உலகந்தான்
ஆனாலும் எனக்கு இருக்க
இடமில்லை.
எறும்பின் வயிற்றுக்குள் போயிருந்து
வாழ்வதற்கும்
விண்ணப்பம் செய்துள்ளேன்,
இன்னும் பதிலில்லை.

நானிருக்கும் அறைக்குள்
சுவர்கள் நடக்கின்றன.

தினசரியும் அவைநடந்து என்னை
நசுக்க
வருகின்றன
வெறியோடு.

எழும்பி ஓடினால்
வாசல் உதைக்கிறது.
தெருவில் நடந்து மரத்திற்குக் கீழ்
நின்றால்,
என்னைக்
காகம் துரக்க வருகிறது, சிறு பூச்சே -
உன் மூச்சுள்
ஒரு குட்டிச் சுவர்வைத்து
சிறு இல்லம் அமைக்க
தயவுசெய்து இடம்தா,
நீ பூக்குந்திப் பின்னெழுந்து,
பூக்குந்திப் பின்னெழுந்து
போவதற்குள் நிரந்தரமாய்,
பதில்சொல்லு என் தலையில் வந்து
குந்தி.



www.tamilarangam.net

ஆ. வேலுப்பிள்ளை



மணிமேகலை பற்றிய சர்வதேச ஆய்வரங்கு

பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளை(58) போராதனை இலங்கைப் பல்கலைக் கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றவர். மொழியிய லறிஞர் பேராசிரியர் T. Burrow வின் மாணவரான பேராசிரியர் ஆ. வேலுப் பிள்ளை தற்சமயம் சுவீடன் உப்சலா பல் கலைக் கழகத்தில் பணி புரிகின்றார். தமிழ் வரலாற்றிலக்கணம், தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், தமிழர் சமய வரலாறு ஆகியவை இவருடைய நூல்களுட் குறிப்பிடத்தக்கவையாகும். குறிப்பிட்டுக் கூறக்கூடிய இவருடைய ஆய்வுக் கட்டுரைகள்: Commonness between Malayalam and Jaffna Dialect of Tamil, Opposition and Contrast in Tamil, The Hyponymy and Hierarchcal Structure of Lexemes in Tamil, Coordination in Tamil, Cleft Sentences in Tamil, Modality in Jaffna Tamil, Number in Jaffna Spoken Tamil, Locative Terms in Tamil - A Semantic and Historical Study.

சுவீடன் நாட்டிலுள்ள உப்சாலாப் பல்கலைக்கழகம் தமிழ் ஆய்வில் அக்கறை செலுத்தி வந்துள்ளது. வட ஐரோப்பிய நாடுகளில், பல்கலைக்கழக மட்டத்தில், உப்சாலாவில் மட்டுமே, தமிழ்மொழி பயிலக்கூடிய வாய்ப்பு உள்ளது. இப் பல்கலைக்கழகத்திலுள்ள ஆசிய - ஆபிரிக்க மொழிகள் நிறுவனத்திலுள்ள இந்தியவியல் பகுதியில், தமிழ்மொழியும் ஒரு பாடமாக உள்ளது. 1991ஆம் ஆண்டுவரையில், ரூத் வால்டீன்(Ruth Walldin), என்ற அம்மையார், தமிழ்மொழி ஆய்வாளராக விளங்கி, தமிழ் கற்பித்தும் வந்தார். இப்போது தமிழ் கற்பிப்பவராக, கிளாஸ் ஹாக்றென்(Klas Hagren) என்பவர் விளங்குகிறார்.

உப்சாலாப் பல்கலைக்கழகத்திலுள்ள சமய ஆய்வுகள் பீடத்திலுள்ள சமயவரலாற்றுத்துறையின் ஒரு பிரிவு, இந்தியாவில் தோன்றிய சமயங்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளது. அப் பிரிவுக்கு பீட்டர் ஷால்க்(Peter Schalk), பேராசிரியராக உள்ளார். இப் பிரிவு தென்னிந்தியச் சமயவரலாற்றில் சிறப்பாக, தமிழர் சமயவரலாற்றில் பல ஆய்வுகளை நிகழ்த்தி வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக, இப் பிரிவு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள கலைப்பீடத்துடன் நெருங்கிய தொடர்புகளைப்பேணிவருகிறது. இப்பிரிவின் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக, பண்டைக்கால, இடைக்கால தமிழ்க்கல்வெட்டுகளும் தமிழ் இலக்கியங்களும் ஆராயப்பட்டுவருகின்றன. தமிழ் உலகம் எங்கும் நடைபெறும் தமிழ் ஆய்வுகளைப் பற்றிய செய்திகளைச் சர்வதேசரீதியில் பாிவர்த்தனை செய்வதற்கென, பீட்டர் ஷால்க், ஆ. வேலுப்பிள்ளை என்னும் இருவரையும் செயலர்களாகக் கொண்ட எலெக்ரோனிக் மெயில் இலக்கம் (Tamil, Studies @ relhist. uu.se) இயங்கிவருகிறது.

பௌத்த சமயப்புலமையாளரான பீட்டர் ஷால்க், கடந்த சில ஆண்டுகளாக, தமிழ்ப்பௌத்தம் பற்றித் துருவித்துருவி ஆராய்ந்து வருகிறார். தமிழர்களிடையே பௌத்தம் பூரணமாக மறைந்து விட்டாலும், பலநூற்றாண்டுகளாக , தமிழர்களுள் ஒரு சாரார் பௌத்தத்தைப்

www.tamilarangam.net

பேணிவந்துள்ளமையை, தக்க வரலாற்றுச் சான்றுகளுடன் எடுத்துக் காட்டும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார். 1992ஆம் ஆண்டு, இந்தச் சமயவரலாற்றுத்துறையும் சென்னையிலுள்ள ஆசிய ஆய்வுகள் நிறுவனமும் இணைந்து, தமிழ்ப்பௌத்தம் பற்றி ஒரு சர்வதேசக் கருத்தரங்கை நடத்தின. அக்கருத்தரங்கிலே தரமான கட்டுரைகளாகத் தெரிவு செய்யப்பட்டவற்றை, மேலும் செம்மைப்படுத்துவதற்காக, 1993ஆம் ஆண்டு, உப்சாலாப் பல்கலைக்கழகச் சமயவரலாற்றுத்துறை ஒரு சிறப்புக் கருத்தரங்கை நடத்தியது. தமிழ்நாட்டிலிருந்து தொல்வியல் அறிஞர்கள் இருவரும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி உதவினர்.

இலங்கையிலே ஒருவகை இனரீதியான மதஉணர்வு மேலோங்கிக் காணப்படுகிறது; சிங்களமும் பௌத்தமும் ஒன்று என்றும் பௌத்தப் பாரம்பரியம் சிங்களவர்களுக்கே சொந்தமென்றும், இலங்கை முழுவதும் பௌத்தச் சின்னங்களைப் பேணிவருவதற்குச் சிங்கள மக்களைக் குடியேற்ற வேண்டுமென்றும் கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. தமிழ்ப்பௌத்தம் பற்றிய ஆய்வு பௌத்தமும் தமிழர் பாரம்பரியத்தில் ஒரு பகுதி என்பதை எடுத்துக் காட்டும். தமிழர்களில் ஒரு சாரார் - சிறப்பாக, இலங்கைத் தமிழர்களுள் ஒரு சாரார் - பல நூற்றாண்டுகளாக , தனித்துவமான முறையில் பௌத்த சமயத்தைப் பேணி வந்துள்ளனரெனக் காட்டுவதன் மூலம், தமிழர் பிரதேசங்களிலுள்ள பௌத்த சின்னங்களுக்கான உரிமை, தமிழர்களுக்கே என்ற வாதம் நிரூபணமாகும். வெள்ளரசமரம், புத்தர் சிலை, பௌத்த சின்னங்கள் தமிழர் பிரதேசங்களில் காணப்பட்டால், அவை, தமிழர் வரலாற்றில் மறக்கப்பட்டுவிட்ட ஒரு அத்தியாயத்தை துலக்குவனவாகவே கொள்ளப்படவேண்டும். அவற்றைப் பாதுகாக்கும் சாட்டில் பிறர் வந்து குடியேறி தமிழர்களை வெளியேற்றும் கொடுமைக்கு நியாயம் இல்லாமல் போய்விடும்.

தமிழ்ப் பௌத்தத்துக்கான சான்றாதாரங்களாக, பௌத்த தொல்வியற் சின்னங்கள், பௌத்த கல்வெட்டுக்கள், பௌத்தர் இயற்றிய நூல்கள் என்பன தமிழர்களிடையே யிருந்து வெளிவந்துள்ளன. பௌத்தர்கள் இயற்றிய தமிழ் நூல்கள் சில இருந்தமை பற்றித் தெரியவந்துள்ள போதிலும், மணிமேகலை என்ற இலக்கிய நூலூம் வீரசோழியம் என்ற இலக்கண நூலூமே இன்று எமக்குக் கிடைக்கின்றன. இலக்கணநூலிலும் அதற்கு இன்னொரு பௌத்தர் எழுதிய உரையிலும் சில செய்திகள் காணப்படுகிற போதிலும், தமிழ்ப் பௌத்தம் பற்றி விரிவான ஆய்வுக்கு அங்கே இடமில்லை. மணிமேகலை 4578 அடிகள் கொண்ட நீண்ட காப்பியமாகக் காணப்படுவதனால், அங்கே தமிழ்ப் பௌத்தம் பற்றி விரிவாக ஆராயலாம்.

தமிழ் ஆய்வை இலக்காகக் கொண்டு 1966ஆம் ஆண்டிலிருந்து, உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் நடந்துவருகின்றன. அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலும் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது. இத்தகைய மகாநாடுகளில் தமிழ்ப் பௌத்தம் பற்றியோ, மணிமேகலை பற்றியோ, நுணுக்க ஆய்வுகளுக்கு வாய்ப்புகள் குறைவு. இத்தகைய மகாநாடுகள் திருப்தி தராத நிலையில், தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் உலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் நான்கினைத் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் நடத்தினர். மணிமேகலைக்குச் சர்வதேச ஆய்வரங்கு நடத்தும் முயற்சி உலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மகாநாடுகளை ஒரு வகையில் ஒத்தது.

மணிமேகலை பற்றிப் பல அடிப்படை விடயங்களில் ஆய்வுக்கு இடமிருக்கிறது. மணிமேகலை நூலாக்கம், அதன் காலம், அது புலப்படுத்தும் பௌத் நெறிவகையும் இலக்கிய வகையும், அதன் புவியியற் செய்திகள், சங்கத மொழி, பாதக மொழி என்பவற்றிலிருந்து அது தமிழ்ப் படுத்த சொற்களும் சொற்றொடர்களும், அதன் வரலாற்றுப் பின்னணி, அதன் சமயக் கோட்பாடுகள், பல்வேறு கோணங்களிலிருந்து அது பயன்படுத்தும் மொழி முதலிய விடயங்கள், சர்வ தேசக் கருத்தரங்கு கவனஞ்செலுத்த இருக்கிறது.

1995ஆம் ஆண்டு மே மாதம் 18 - 22 ஆம் திகதிகளுக்கு, இந்த ஆய்வரங்கு உப்சாலாவில் நடைபெற இருக்கிறது. தமிழ் மொழி, தமிழர் சமயம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள

ஐரோப்பிய, அமெரிக்க, இஸ்ரேல் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த அறிஞர்கள் பலர் பங்குபற்ற உள்ளனர். தமிழ் நாட்டிலிருந்தும், இலங்கையிலிருந்தும் அறிஞர் சிலர் வர உள்ளனர். சர்வதேச மட்டத்திலே, கருத்தரங்கு விளம்பரப் படுத்தப்படுவதனால், ஆர்வலராகவும், அறிஞராகவும் உள்ள பிறரும் பங்குபற்ற வாய்ப்பு உண்டு.

தமிழ்ப் பௌத்தத்தைப் புரிந்து கொள்வதிலுள்ள ஆர்வம், மணிமேகலை பற்றிய சர்வதேச ஆய்வரங்குக்கு வழிவகுத்துள்ள போதிலும், மணிமேகலை பற்றி மேலைத்தேய நிபுணர்களின் பங்களிப்புகளோடு நடத்தப் பெறும் நுண்ணாய்வு, பண்டைக்கால, இடைக்காலத் தமிழ் நூல்களின் நுண்ணாய்வுக்கு வழிதுறைகளைக் கண்டறிய உதவுமென்று நம்பலாம்.■

பொள்ளாச்சி நசன்

வேதனைகளுக்கிடையிலெழும் சாதனைகள்

சிற்றிதழ்கள் என்பது மிகக்குறைந்த எண்ணிக்கையில் அச்சாகி, கலை, இலக்கிய, கலாச்சார, இயக்க, அரசியல் செயற்பாடுகளில் ஏதேனும் ஒன்றை பாலமாக இருந்து, வாசகர்களுக்கு மூளைச் செறிவேற்றுகிற, வியாபார நோக்கமற்ற இதழ்களைச் "சிற்றிதழ்கள்" எனலாம்.

நாடு, மொழி, இனம் என்ற வேறுபாடுகளுக்கிடையிலும், அடிப்படை வசதிகளற்ற நிலையிலும், ஏகப்பட்ட பிரச்சனைகளை எதிர்கொண்ட போதும் இவைகளின் தோற்றம் தவிர்க்க முடியாதது; கவனிக்கப்பட வேண்டியது. மிகக் குறைந்த காலத்துக்குள் நின்றுபோனாலும், இவைகளின் தாக்கம் ஆழமானது; பயனாகுவது.

சொந்த மண்ணிலிருந்து பெயர்ந்து சென்றவர்களின் ஆழ்மனப் படைப்பாக்க உந்துதலின் வெளிப்பாடாக, சொந்த மண்ணில் அடக்குமுறைக்கு எதிராக பீறிட்டு எழும் குரலாக, நுட்பங்களின் ஆழம்வரை சென்ற கருத்துச் செறிவுடையனவாகக் காணப்படுவது இச்சிற்றிதழ்கள். மொழியும், கலாச்சாரமும் சிதைக்கப்படும்போது மிஞ்சுகிற தமிழ்த்தன்மை சிதைவுறாது பாதுகாக்க இவ்விதழ்கள் உதவுகின்றன. இயக்கத்தின் இலக்கிற்கேற்றவாறு இயங்குபவர்களைக் கூர்மைப்படுத்தவும், அவர்களுக்கிடையே தொடர்பேற்படுத்தவும் சிற்றிதழ்கள் உதவுகின்றன. புலம்பெயர்ந்த தமிழர்களின் கலை, கலாசாரப் பாதுகாப்பிற்கு அடித்தளமாகவும், அவர்களுக்கு மொழி பயிற்றுவிக்கும் ஆசானாகவும் இவைகள் அமைகின்றன. படைப்பாளிகளை உருவாக்குவதும் அவர்களுக்குப் பயிற்சிக்களன்களாக அமைவதும், அவர்களின் தனிப்பட்ட சிறப்புக்குக் காரணமாக அமைவதும் சிற்றிதழ்கள்.

அநேகமாகத் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் பல்வேறு வகையான சிற்றிதழ்கள் வெளியாகின்றன. கவிதாசரண், சாரதா, சிந்தனையாளன், எழுகதிர், அன்றில், வெளி, சலனம், கனவு, விருட்சம், கணையாழி, நிகழ், நிறப்பிரிகை, புறப்பாடு, நப்போல்வளை, புதிய குரல், பாரதி சுட்டும் விழிச்சுடர், அரங்கேற்றம், இனி, மக்கள் தமிழகம், குதிரைவீரன்பயணம், உன்னதம், நடுகல், மௌனம், புதிய நம்பிக்கை, சிற்றிதழ் செய்தி என்று ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கு மேற்பட்ட சிற்றிதழ்கள் வெளியாகின்றன. இவைகளின் நோக்கும், போக்கும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு, வரிசைப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும். தமிழகத்தின் அனைத்துச் சூழல்களையும் இதன்வழி அறியமுடியும்.

இதேபோல வெளிமாநில/ வெளிநாடுகளிலும் தமிழ்ச் சிற்றிதழ்கள் வெளியாகின்றன. அவுஸ்திரேலிய முரசு, அக்கினிக்குஞ்சு, அஆஇ, ஈழநாடு, ஈழகேசரி, உயிர்ப்பு, ஊதா, எரிமலை, ஐரோப்பிய முரசு, ஓசை,

தமிழகத்தின் சிற்றிதழ்களைச் சேகரித்து, நூலகம் அமைத்து, இதழ்களின் தொடர்பிற்காகச் "சிற்றிதழ்ச் செய்தி ஆய்வு இதழ்" என்ற இருமாத இதழை நடத்தி வருகிறார் பொள்ளாச்சி நசன். தற்போது புலம்பெயர்ந்த தமிழர்களால் வெளியிடப்படும் சஞ்சிகைகளையும் சேகரித்து வருகிறார்.

**தொடர்புகள்:
1,சம்பத் நகர்,
சூளேஸ்வரன்பட்டி,
பொள்ளாச்சி 642 006, தமிழ்நாடு,
இந்தியா.**

www.tamilarangam.net

கடல், சக்தி, சஞ்சீவி, சிந்து, சிந்தலை, சுவடுகள், சுமைகள், தமிழ்ஏடு, தமழன், தமிழருவி, தமிழியம், தளிர், தாகம், தாயகம், தூண்டில், தேடல், தேனீ, பனிமலர், புதுமை, நான்காவது பரிமாணம், நிழல், நாணல், மனிதம், மரபு, மீட்சி, மௌனம், அந்தமான் முரசு, குன்றின் குரல், படி, கொந்தளிப்பு, புதிய இலக்கியம், கவிதை, தோழன், உதயம் என்று பல்வேறு இதழ்கள் வெளியாகின்றன. பெரும்பாலான இவ்விதழ்கள் அச்சு நேர்த்தியும், வியாபார/ விளம்பர நோக்கத்தை முதன்மைப்படுத்தாது தரத்தை முதன்மைப்படுத்தியும், தன் சொந்தப் பொருட்செலவில் பரவலாக்கியும் வருகின்றன. பல இதழ்கள் பொருளாதாரச் சிக்கலில் ஒன்றிரண்டு இதழ்களோடு நின்றுபோனாலும் இதன் தொடக்கமும் பயணமும் கவனிக்கப்பட வேண்டியதே. சிற்றிதழ்கள் என்பது மிகக்குறைந்த பக்கங்களையுடைய இதழ்கள் என்றாலும், அதன் தொடர்ச்சியான பயணம் என்பது சந்தேகத்துக்குரியதே. பொருளாதாரப் பிரச்சனைகளாலும், செறிவான கருத்துகள் கிடைக்காமையாலும், குழுவினரின் சிதைவினாலும், தரமான வாசகர்கள் அமையாமையாலும், அரசு/ அதிகார நெருக்குதல்களினாலும் இதன் பயணம் தடைப்படுகிறது. பயணங்கள் தடைப்பட்டாலும், நினைவுகள் நீறுபூத்த நெருப்பாய் நின்று, சாதகச் சூழலில், மீண்டும் வடிவெடுப்பது சாத்தியமானதே. தொடக்கப்பட்டுப் பயணிக்கும் இச்சிற்றிதழ்கள் அந்த மண்ணுக்கும், சுற்றுச் சூழலுக்கும், அரசு, அதிகார நடைமுறைகளுக்கும், கலை இலக்கிய நிகழ்வுகளுக்கும் பதிவேடுகளாக இருக்கின்றன. வணிகநோக்கமின்றி நேருக்குநேர்கண்டு, ஆழமாகப் பதிவாக்கும் இத் தமிழ்ச் சிற்றிதழ்கள் தமிழின்/ தமிழரின் வரலாற்று உண்மைகளுக்குச் சான்றுகளாகின்றன. உலகளாவிய பார்வையில் - வெளியாகும் இச் சிற்றிதழ்கள் சேகரிக்கப்பட்டால் - அது உலகளாவிய தமிழர்களின் வரலாற்றுக்கு அடித்தளமாக - கவிதை, கதை, கட்டுரை என்று இலக்கிய வடிவங்களின் வளர்நிலை காட்ட - உதவும். எனவே உலகளாவிய பார்வையில் சிற்றிதழ்கள் தொகுக்கப்படுவதும், பாதுகாக்கப்படுவதும், அதன்வழி ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களும் ஆக்கப்பட வேண்டியதும் அவசியமானதாகும். கோடிக்கணக்கான மக்கள் வாழும் இவ்வுலகில், தரமாகச் சிந்திப்பவர்கள் மிகக் குறைவு; இவர்களில், தான் சிந்திப்பவற்றை எழுத்து வடிவாக்குபவர்கள் அதைவிடக் குறைவு; இவர்களில் அவ் எழுத்துகளை அச்சு வடிவாக்குபவர்கள் அதைவிடக் குறைவு. இவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இப்படி ஒன்றிரண்டு இதழ்களே தோன்றி, ஒன்றிரண்டு இதழ்களுக்குள் நின்றுபோனாலும் - இவர்களின் தோற்றம் பெருமைப்பட வேண்டியது; பாதுகாக்கப்பட வேண்டியது. இவைகள் சோதனைகளுக்கிடையிலும் சாதனை படைப்பவைகள்.■

முல்லை அமுதன்



கோயிலைத் தான்
கட்டச் சொன்னேன்.
தீபத்தை மட்டும்
ஏற்றி விட்டு
போய் விடுகிறாய்.
எனி
தெய்வத்திற்கு
எங்கு போவேன்
1. 9. 93.



கடலின் மீனை
தரையில்
வாழவைப்பதில்
தோற்றுப்போனதாய்
சொல்கிறாய்.

பசிக்கிறது என்று
பசுவைக் கொல்கிறாய்.
மனித தர்மம் பற்றி
அடிக்கடி
பேசி முரண்பட்டு போகிறாய்.

பிறகு
உன் துப்பாக்கிக்கு
பசிக்கிறது
என்று
மனித உயிர்களைத் தேடுகிறாய்.
19. 3. 94.

முற்றத்து மாமரமே
நீ
காற்றுக்குப் பயந்து
இலைகளை
உதிர்த்துவிட்டு நிற்பது . . .
அடிக்கடி
எங்களை
பதுங்கு குழிக்குள்
அனுப்பிவிட்டு நிற்கும்
அம்மாவையல்லவா
ஞாபகப்படுத்துகிறாய்.
18. 4. 94.

வெள்ளை உடை உடுத்தி
வருகின்ற
வெண்ணிலவே
இன்றாவது
உன் வெள்ளை உடையின்
அர்த்தம்
சொல்லி விட்டுப் போ.
3. 3. 94.

www.tamilarangam.net



மக்கட் தொகைப் பெருக்கம்தான் வறுமைக்கான காரணமா?

இன்று மக்கட் தொகைப் பெருக்கத்தை ஏகாதிபத்தியங்கள், உள்நாட்டுத் தரகுமுதலாளிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் குட்டிபூர்ஷுவா எழுத்தாளர்கள் என அனைவரும் சுட்டிக்காட்டி இதுவே வறுமைக்குக் காரணம் என எச்சரிக்கிறார்கள்.

இந்த வாதங்களின் ஊடாக மக்கள் தொகையைக் கட்டுபபடுத்த மகாநாடுகளை நடாத்தி சர்வதேச ரீதியாக வறுமைக்கு வேறு விளக்கம் கொடுக்கிறார்கள்.
மக்கட் தொகைப் பெருக்கம், சுற்றுச் சூழல் மாசுபடுதல், வறுமை, நோய்கள் என அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதே. ஒவ்வொரு மனிதனும் அதன் கூட்டு அமைப்புமே மனிதகுலம் என நாம் காணமுடியும். மக்கள் தொகை என்பது சமூக விஞ்ஞானம் மற்றும் இயற்கை விஞ்ஞானத்துடன் நிர்ணயம் செய்கிறது.
மக்கள் தொகை பூமி, கண்டம், நாடு, நகரம், கிராமம் எனப் பரந்துள்ளது. இதன்மீது பாதிப்பைச் செலுத்துவது இறப்பும் பிறப்புமாகும். பிறப்பின் மீதும் இறப்பின் மீதும் பொருளாதாரம் பாதிப்பைச் செலுத்துகிறது.
மனிதனது வரலாறு நீண்டு நெடியது. அதன் கால அளவு இன்னமும் துல்லியமாக நிர்ணயிக்கப்படாத நிலையில் உள்ளது. மனிதனின் தோற்றம் குரங்கில் இருந்து வந்ததை இன்று பல ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.
மனிதனுக்கும் விலங்குக்கும் இடையேயான சிறப்பான வேறுபாடு உழைப்பேயாகும். உழைப்பை எப்போது விலங்கு மனிதன் நாடிச் சென்றானோ அப்போதே அவன் ஏனைய விலங்குகளில் இருந்து மாறுபடத் தொடங்கினான். எல்லா விலங்குகளும் இயற்கையை நம்பி உள்ள நிலையில், மனிதன் மட்டும் உழைப்பை நம்பி வாழும் நிலைக்குத் தன்னை மாற்றி வந்துள்ளான். இது காலகட்டத்துடன் மாறுபட்டபோதும், வளர்ந்துசென்றவண்ணம் உள்ளது.
மனிதக் குரங்குகளில் முதலில் உழைப்பைக் கண்டுபிடித்தது பெண் மனிதக்குரங்கே என்பதை நாம் காணமுடியும். மனிதக்குரங்குகளின் வாழ்க்கையில் ஏனைய விலங்குகளுடன் ஏற்பட்ட வாழ்வுக்கான போராட்டங்களும், அதில் பெண் மனிதக்குரங்குகள் ஈடுபட்ட அதேவேளை குழந்தைகளைப் பராமரிப்பதிலும் ஈடுபட்டு, ஓரிடத்தில் நிலைக்கப்பெற்றனர். அப்போது ஆண்களால் வேட்டையிடப்படும் விலங்குகளின் அநாதரவான குட்டிகளையும் பெண்கள் வளர்த்ததையும், தானிய வகைகளின் சிதறல்கள் நிலத்தில் மழபடி உற்பத்தியான நிலைகளில் பெண்கள் அவற்றைக் கண்டறிந்து, இயற்கைக்குப் புறம்பாக உற்பத்தியில் ஈடுபட்டனர். அந்த வசதி பெண்களிடமே இருந்தது. மிகமோசமான, நெருக்கடியான வாழ்வுக்குள் மனிதன் வாழ்ந்த காலத்தில் பெண்ணின் இந்த அரிய கண்டுபிடிப்பு பெண்ணைத் தலைமைதாங்கும் இடத்துக்கு இட்டுச் சென்றது. பெண்வழிச் சமுதாயம் உருவாக இதுவும் ஒரு காரணமாகும். ஆனால் பின் சுரண்டலுடன் பெண்ணின் உரிமை பறிக்கப்பட்டு ஆண்வழிச் சமூகமாக மாறியது.
இயற்கையுடனான மனிதனின் உறவு, அதன்பின்னான அவனது ஏனைய உறவுகளையும் நிர்ணயம் செய்தது. இதை மார்க்ஸ், "மனித வரலாறு அனைத்தின் முதல்முற்கோள் உயிர்வாழும் மானிடத் தனிநபர்களின் இருத்தலே. இவ்வாறு நிலைநாட்டப்படவேண்டிய முதல் மெய்நடப்பு இந்தத் தனிநபர்களின் வாழ்க்கை அமைப்பும், இயற்கையின் இதர கூறுகளுடனான அவர்களது பிந்திய உறவும் ஆகும்" (மாக்ஸ், ஏங்கல்ஸ் - தொகுதி 1) என்கிறார்.
மனிதன் பதினைந்துலட்சம் ஆண்டுக்குமுன் வாழ்ந்தவன் என்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மனிதனது தோற்றம் வெப்பமண்டல நாடுகளில் ஆரம்பித்தது எனவும் நிறுவப்பட்டுள்ளது.
இன்றுள்ள மனித இனம்கூட அழிந்துவிடும் எனத் தரவுகள் புலப்படுத்துகிறது. பூமி நெருப்புக்கோளமாக இருந்து குளிர்ந்து, பின் பனிப்பாறைகளைக் கொண்டிருந்தது. இதன்மீதான சூரிய வெப்பம் பனிப்பாறைகளை உருக்கித் தரைகளை உருவாக்கியது. இன்று பூமி தொடர்ந்து வெப்பமாற்றத்துக்கு உட்படுகிறது. எரிமலைகளாக வெளிப்படும் பூமியின் மையம் இன்றும் நெருப்பாகவே உள்ளது. சூரியனும் குளிர்ந்து வருவதால் ஒரு காலத்தில் பூமி மீண்டும் குளிர்ந்து பனிக்கட்டி யுகமாக மாறிவிடலாம். குளிர்ச்சி அதிகரிக்க மனிதன் மத்தியதரைக் கோட்டைநோக்கி இடம்பெயர்ந்து, அங்கும் விறைப்பு ஏற்பட விரைவில் அழிந்துவிடுவான் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதை

www.tamilarangam.net

மாற்றும் அல்லது புதிய தரவுகள் சிலவேளை பூமியை சூடாக வைத்திருக்கலாம். அல்லது மனிதன் பனியுகத்தில் வாழும் வகையில் பரிணாமம் அடையலாம். ஆனால் இவற்றுக்கான தரவுகள் இப்போது இல்லை.

இந்த நிலையில் மக்கள் பெருக்கம் என ஏன் சிலரால் பீதியூட்டப்படுகிறது? இன்றுள்ள வறுமைக்குக் காரணம் மக்கள்த் தொகைப் பெருக்கமா, நிச்சயமாக இல்லை.

ஆதிமனிதன் சிறுசிறு கூட்டங்களாக இருந்தபோதும், பல்லாயிரம் சதுரமைலுக்கு ஒருவனாக இருந்தபோதும், ஒரு சதுரமைலுக்கு ஒருவனாக வந்தபோதும், இதைவிடக் குறைவான பரப்புக்கு ஒரு மனிதன் என வந்தபோதும் மனிதஇனம் தொடர்ந்து உயிர்வாழ்கிறது.

மனிதன் ஆதிகாலத்தில் உயிர்வாழ்வதற்காகப் போராடியபோது, அவனின் உணவு இயற்கையைச் சார்ந்திருந்தபோது பற்றாக்குறைகளைச் சந்தித்தான். அப்போது அவனின் ஆகக்கூடிய குழுவின் வயதுவந்தோர் எண்ணிக்கை 20, 30 ஆகவும், இதேயளவு குழந்தைகளுமாக இருந்தது. இக்குழுக்கள் சந்தித்த உணவு நெருக்கடியும், இயற்கையைச் சார்ந்திருந்தமையும் இந்த எண்ணிக்கைக்குக் குழுக்களை நிர்ப்பந்தித்தன. அன்று மக்கள் தொகைப் பிரச்சனை, உணவின் மீதான பிரச்சனையாகவே இருந்தது. இதன்பின் மீன்பிடி, விவசாயம், மிருகவளர்ப்பில் ஈடுபடுத்தித் தன்னை ஓரிடத்தில் நிலைப்படுத்த முடிந்தபோது தனது ஆயுளைக் கூட்டவும், தனது இனத்தைப் பெருக்கவும் ஓரளவு முடிந்தது. இது ஒரு நிலையான பெரிய அலகுகளாக மாறியபோது உற்பத்தியில் உபரியைப் பெறத் தொடங்கினான். அப்போது மனிதன் இயற்கையைச் சார்ந்திருப்பதை விடுத்து உழைப்பை நாடியதுடன் உபரியைச் சேகரிப்பதுடன் உருவான சமுதாய அலகுகள் மக்கட் தொகைப் பெருக்கத்தையிட்டு அங்கலாய்க்கவில்லை. தேவையான உபரியும், அதைப் பெற உற்பத்திக்கென மனிதனது இரு கைகளும் உள்ளவரை மக்கள் தொகைப் பெருக்கம் உபரியை உயர்த்தியது. இவ்வுபரி மீதான தனிச் சொத்துரிமை உருவானபோதுதான் மனிதனைச் சுரண்டுவதன் மூலம் உபரியைப் பெருக்கவும் முடிந்தது. இத்தனிச் சொத்துரிமையின்மீது உழைப்பை நல்காது மனிதனை அடிமையாக மாற்றிய இந்நிகழ்விலிருந்து, உழைப்பவனுக்குக் கொடுப்பதை மறுக்குமளவுக்கு மனிதன் சென்றான். இதனால் உழைப்பவனுக்கு ஏழ்மை சொந்தமாகியது.

இந்த வடிவம் காலம்காலமாகத் தொடர்ந்து இன்றுவரை தொடர்கதையாகவே உள்ளது. உபரிமீதான தனிச் சொத்துரிமை அடிப்படைத் தேவையைப் பறித்ததன் மூலம் உற்பத்தியில் உபரிப் பெருக்கத்தை உழைக்காதவன் மேலும் பெருக்கிக் கொண்டான்.

ஒரு மனிதன் உலகில் பிறக்கும்போதே இரு கால், இரு கைகளுடன் பிறக்கிறான். இது ஒரு சிறப்பான விடயம். ஏனெனில் அவன் தனது கைகள் மூலம் உழைக்கிறான். அப்படி உள்ளபோது ஏன் வறுமைப்படவேண்டும்? இரு கைகளாலும் உழையாத ஒருவன் எப்படிப் பணக்காரனாக இருக்கமுடியும்?

19ம் நூற்றாண்டில் சிக்காக்கோ தொழிலாளர்கள் எட்டுமணி வேலைநேரத்தைப் போராடிப் பெற்றபோது அவன் உழைப்பின் கோரிக்கைகள் அன்றைய விஞ்ஞான வளர்ச்சியுடன் அமைந்ததாக இருந்தது. இன்று நூறு வருடங்கள் கடந்தபின் விஞ்ஞான வளர்ச்சி உற்பத்தியைப் பல மடங்காக மாற்றியபின்கூட மனிதன் எட்டுமணிநேர வேலை செய்யவேண்டி உள்ளது.

ஒரு முதலாளி அன்று ஆயிரம் பேரைக் கொண்டு பெற்ற உற்பத்தியை இன்று பத்துப் பேருடன் பெறக்கூடும். ஆனால் வேலை நேரம் எப்போதும் ஒன்றாகவே உள்ளது. மனிதனின் வாழ்க்கைத் தரமும் ஒன்றாகவே உள்ளது. ஆனால், முதலாளியின் வாழ்க்கைத் தரம் கற்பனை பண்ணக்கூட முடியாத வகையில் பெருகியுள்ளது.

ரோமப் பேரரசில் ஒன்றரை முதல் இரண்டுலட்சம்வரை அடிமைகளை வைத்து ஒருவன் உழையாதவனாக இருந்துள்ளான். இதேபோன்றே பழைய அரசுகள் அனைத்தும் அடிமைகளையும், மக்கள் மீதான வரிகளையும் வைத்துத் தொடர்ந்துள்ளன.

அடிமைகளின் உற்பத்தியை அனுபவித்த சுரண்டும் வர்க்கம் அடிமைகளை உற்பத்தி செய்வதில் கூடிய கவனம் செலுத்தியது. அடிமைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, உற்பத்தியைக் கூட்டியது. இந்த அடிமைகளை உற்பத்தி செய்வதில்கூட வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. மாம் ஸென் என்ற அடிமைகளைப்பற்றிய நியாயப்படுத்தலுக்கான தத்துவஞானி கூறுகிறார், “பசுமாட்டைப் போன்றே அடிமைகளையும் தங்கள் வீட்டில் வளர்க்கவில்லை, மாறாக அடிமைச் சந்தையில் வாங்கினார்”. இதேநேரம் மகோன் பின்வரும் ஆலோசனையை வழங்கினார், “அடிமைகளை வளர்க்கவேண்டாம், 22 வயதுக்குமேல் இவர்களை வாங்கலாம்”. ரோமில் இருந்த சில அடிமைச் சொந்தக்காரர்கள் அடிமை “வளர்ப்பை” ஆதாயமாகக் கருதினர். இவ்வாறு மக்களது உழைப்பைச் சுரண்டக் கையாளப்பட்ட வழிமுறைகள் இன்று பண்பால் மாறுபட்டு அதே வழியில் தொடர்கின்றன.

இந்த அடிமை உடைமைச் சமூகத்தில் இருந்து வெளியேறப் போராடிய அடிமைகள் நீண்ட பல போராட்டங்களின் பின் தங்களைத் தீர்மானிக்கும் உரிமையை ஓரளவு பெற்றுக்கொண்டனர்.

இவர்கள் சுரண்டல்கரருக்கு எதிராக போராடத் தொடங்கிய நிலைமைகளில் மக்கள் தொகைப் பிரச்சனையைச் சுரண்டும் வர்க்கம் காலத்துக்குக் காலம் முன்வைத்தது. இதற்காகக் குடும்பக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தப் பல்வேறு வழிகளைக் கையாண்டறர். ஒருசில மதங்கள் (உ.ம்: புத்தமதம்) திருமணம் செய்யாது இருத்தலையும், திருமணங்களை மட்டுப்படுத்தலையும் செய்தன. விதவைகளின் மறுமணத்தைச் சில மதங்கள் கண்டித்தன. பெரிய கிராமத்தை அமைத்து ஆண்களைத் தனிமைப்படுத்தினர். இப்படிப் பல வழிகள் கையாளப்பட்டன. இதேபோலக் கர்ப்பத்தடை மருந்துகளை ரோமானியப் பேரரசின் கடைசிக் காலத்தில் கையாண்டனர்.

காலத்துக்குக் காலம் தொற்றுநோய்கள் மக்களை அழித்தன. பெரிய யுத்தங்களால் மக்கள் கொல்லப்பட்ட நிலைகளில் மக்கள்ப் பெருக்கத்தைச் சுரண்டும் வர்க்கம் ஊக்குவித்தது.இது இன்றும் தொடர்கதையாகவே உள்ளது. மனிதனது கைகள் உற்பத்தியில் தனித்து ஈடுபட்ட நிலையில் மனிதப் பெருக்கம் உற்பத்தியைப் பெருக்கியது.

(தொடரும்)

www.tamilarangam.net

ப.திருநாவுக்கரசு

ஓவியர் வீர.சந்தானத்தின் சமீபகால ஓவியங்கள்

'முகில்களின்மீது நெருப்பு' தொகுப்பில் கொடுங்கோலர்களின் செயலை விவரித்த சந்தானம் தற்போது தனது தூரிகையை ஆணாதிக்க வெறியில் பெண்ணினம் படும் பாட்டையும் சூழலியலையும் சித்தரிக்கத் தொடங்கி இருக்கிறார்.



ஓவியர் வீர.சந்தானம்

கிட்டத்தட்ட 12 தைலவண்ண ஓவியங்களும், 15 இந்தியன் இங்க்கினால் வரையப்பட்ட கோட்டோவியங்களும் புதிய பொருளை எடுத்தாண்டிருக்கிறது. பெண்ணினவாதம் பற்றி அதிகளவு கருதவைத்த நிகழ்வுகள்: சிதம்பரம் பத்மினி பாலியற் பலாத்காரம், வாசாத்தியில் பழங்குடிப் பெண்கள்மீது பாலியற் பலாத்காரம், இதுபோன்றே ஒரத்தநாடு, ஹோசூர் போன்ற இடங்களில் நடந்த தொடர்ச்சியான பெண்கள் மீதான கொடுமை என்பன தன்னை இதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்கவைத்த நிகழ்வுகள் என்கிறார்.

ஓவியம் 1இல் உள்ள காட்சி, சட்டமிடப்பட்ட பல படங்களில் பெண்களின் உருவம் தெளிவாகத் தெரிவதும் முகமழிக்கப்பட்டும் தாறுமாறாகக் கிடக்கிறது. கித்தானின் ஓரத்திலுள்ள ஒரு சட்டகத்தில் இருந்து ஒரு மரம் பூமியை வெடித்துக் கிளம்புகிறது. அதன் அதிர்வே மற்ற அழகான சட்டங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருப்பபூக் குலைத்திருப்பதைக் காண்பிக்கிறது.

படம் 2இல் நாற்காலியில் அமர்ந்திருக்கும் மனிதன். அவன் தலையில் சுதந்திரம் என்ற பூக்காடு. பக்கத்தில் உள்ள மேசையில் பூச்சாடி அல்லது குறோட்டன்ஸ். அதன் கீழ்ப்பாகம் பெண்ணின் முகம். நாற்காலியின் கால்கள், ஆண்முகமாகவும், குறோட்டன் ஸ்டூலில் கால்கள் பெண்முகமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆண் எல்லாவித வசதிகளையும் அனுபவித்துக்கொண்டும், பலவித சிந்தனைகளைப் பெறுபவனாகவும்; பெண் குறோட்டனைப் போல அமுக்கி - அடக்கப்பட்ட பேன்சாய் செடியாக்கப்பட்டுள்ளதை

பதிப்புத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ப.திருநாவுக்கரசு நீண்டகாலமாகவே ஈழத்துப் படைப்பாளிகளிலும், படைப்புகளிலும் அக்கறை கொண்டவர். இவரது தாமரைச்செல்வி பதிப்பகம், ஓவியர் புகழேந்தியின் ஓவியங்களை நூல் வடிவில் வெளியிடத் திட்டமிட்டுள்ளது.

www.tamilarangam.net



நாற்காலியில்
அமர்ந்திருக்கும் மனிதன்.
அவன் தலையில்
சுதந்திரம் என்ற பூக்காடு.
பக்கத்தில் உள்ள
மேசையில் பூச்சாடி
அல்லது குறோட்டன்ஸ்.
அதன் கீழ்ப்பாகம்
பெண்ணின் முகம்.
நாற்காலியின் கால்கள்,
ஆண்முகமாகவும்,
குறோட்டன் ஸ்டூலில்
கால்கள்
பெண்முகமாகவும்
சித்தரிக்கப்பட்டுள்ளது.
ஆண் எல்லாவித
வசதிகளையும்
அனுபவித்துக்கொண்டும்,
பலவித சிந்தனைகளைப்
பெறுபவனாகவும்; பெண்
குறோட்டனைப் போல
அமுக்கி - அடக்கப்பட்ட
பேன்சாய்
செடியாக்கப்பட்டுள்ளதை
தெரிவிக்கிறது

2

1

சட்டமிடப்பட்ட பல
படங்களில் பெண்களின்
உருவம் தெளிவாகத்
தெரிவதும்
முகமழிக்கப்பட்டும்
தாறுமாறாகக் கிடக்கிறது.
கித்தானின் ஓரத்திலுள்ள
ஒரு சட்டகத்தில் இருந்து
ஒரு மரம் பூமியை
வெடித்துக் கிளம்புகிறது.
அதன் அதிர்வே மற்ற
அழகான சட்டங்கள்
அடுக்கிவைக்கப்பட்டி-
-ருப்பதை
குலைத்திருப்பதைக்
காண்பிக்கிறது.



www.tamilarangam.net



ஒரு கட்டிலில், ஓரத்தில் பெண்முகம்: கட்டிலும் முழுமையாகச் சித்தரிக்கப்படவில்லை. பெண்ணும் அதுபோன்றே முகம் மட்டும் முழுமையாகச் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. கீழே கட்டிலின் கால்கள் அனைத்தும் உடைந்து அடுக்கப்பட்டுக் காணப்படுகிறது.



தைலவண்ண ஓவியங்கள் அனைத்தும் முன்னைய வண்ணங்களைப் போலல்லாமல் நீலம், மஞ்சள், அடர்பச்சை போன்றவற்றைக் கொண்டு புதிய வேகத்தில் சூழலியல் பற்றிப் பேசுகின்றன.

தெரிவிக்கிறது என்கிறார்.
மூன்றாவது படத்தில் ஒரு கட்டிலில், ஓரத்தில் பெண்முகம்: கட்டிலும் முழுமையாகச் சித்தரிக்கப்படவில்லை. பெண்ணும் அதுபோன்றே முகம் மட்டும் முழுமையாகச் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. கீழே கட்டிலின் கால்கள் அனைத்தும் உடைந்து அடுக்கப்பட்டுக் காணப்படுகிறது.
தைலவண்ண ஓவியங்கள் அனைத்தும் முன்னைய வண்ணங்களைப் போலல்லாமல் நீலம், மஞ்சள், அடர்பச்சை போன்றவற்றைக் கொண்டு புதிய வேகத்தில் சூழலியல் பற்றிப் பேசுகின்றன.
"நான் கிராமத்துக்காரன். எப்போதும் பயிர் பச்சைகளுடன் வாழ்ந்து வருபவன். நகரவாழ்க்கையில், இந்தப் பச்சை நிறத்தை, உயிர்த்துடிப்பைக் காண்பதே அரிதாகிவிட்டது. ஆகவே எங்கள் பழைய வாழ்க்கையினை எங்கள் சூழலுக்கு ஏற்ப உருவாக்குவதற்கே குறோட்டன்ஸ் வளர்க்கிறேன். இதில் பணக்காரர் வளர்ப்பதற்கும் எங்களுக்குமான வேறுபாட்டை உங்களால் இயல்பாக உணரமுடியும். இதனால்தான் எனது ஓவியங்கள் அனைத்திலும் ஏதாவது ஒரு மூலையில் குறோட்டன்ஸ் தலைகாட்டும். எஸ்டேட்டுகளுக்காக மரங்களை வெட்டுவது, கடலில் கழிவுகளைக் கொட்டுவது, அணுஉலைக்கூடம், விவசாயத்தில் நச்சு மருந்துகள், உரங்கள் போன்றவையெல்லாம் இன்றைய தமிழகத்தை மழையில்லாமல் சூழலை மாசடைய வைத்திருக்கிறது. இதைக் கண்டித்தே எனது ஓவியங்கள் தற்போது இவைகளைப் பேச ஆரம்பித்திருக்கிறது" என்கிறார் இவர்.■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுகுமாரன்

பொய் அதிகம் உன்னிடம்
சொல்கிறாள் மனைவி.
திரும்பிப் பார்த்தேன்
அவள் நிழல்
இரண்டாய்ப் பிரிந்து நெளிந்தது.
ஒன்றில் அரிச்சந்திரனின்
பிணக்கோல்
மற்றதில் காந்தியின் முறிந்த கைத்தடி

பொய் ஏன் சொல்கிறேன்?
உண்மை
ஊர்ந்து நகரும்.
பொய்
ஊடுருவிப்பாயும்.

பொய் எதனால் சொல்கிறேன்?
முகத்தின் ஒப்பனை
கலையாமலிருக்க.

பொய் எப்படிச் சொல்கிறேன்?
அலகு குத்தி நாக்கசைத்து.

எது
எனது முதல் பொய்?

எதுவாயினும்
முதல் பொய் குற்றமற்றது.

ஆனால்
அது மூலம்.

வயது வளரப்பொய்களும் வளர்ந்தன
நகங்களைப் போல.
பொய் வளரத் தேவைகளும்
வளர்ந்தன.
விரல்களைப் போல.

தருமன் முதல் தஸ்லீமா வரை
பொய் சொல்லாதவர் எவர்?
அயோத்தி முதல் ஆகாயம் வரை
பொய் இல்லாத இடம் எது?
புறித நூல் முதல் அரசாங்கக்
காகிதங்கள் வரை
பொய் பேசாதது எது?

ஐயா,
என் மனைவியிடம் சொல்லுங்கள்.

இது
பொய்களின் பொற்காலம்
இங்கே
பொய்யாத வாழ்க்கை பொய்.

ஆனாலும் அதிகம் உன்னிடம்
சொல்கிறாள் மனைவி.
புரிகிறது.

ஒரு பொய் நனைந்து வெளியேறும்
போது
நாக்கு
அரை அங்குலம் எரிந்து
சுருங்குகிறது.

பொய்கள் தேங்கிய தருணத்தில்
நாக்கே பொசுங்கிப் போகலாம்.
அன்று
நான் ஜ்வாலையின் உண்மையாக
ஒளிர்வேன்.

உண்மை தாய்முலை
பொய் சுட்டை விரல்.

உண்மை பாலைமணல்
பொய் மழைத்துளி.

உண்மை மூச்சு
பொய் கீழ்ச் சுவாசம்.

உங்கள் குசுவுக்கு
நீங்களே மூக்கைப்
பொத்துவதுண்டா?

சொல்லுங்கள் . . .
பொய் சொல்லாமல். ■

www.tamilarangam.net

தரமான ஹலால் இறைச்சி,
மற்றும் உணவுப் பொருள்களுக்கு



SIDDIQUI

NORKJØTT OG MAT A/S

Nordbygt 37 B 0190 Oslo TLF: 22 17 98 69

www.tamilarangam.net

சந்திப்பு: ச.மா.பன்னீர்ச்செல்வம்
புகைப்படங்கள் க.இரத்தினராஜசிங்கம்

தமிழ்நாட்டில் அகதிமுகாம்கள் சிறைமுகாம்களாகிவிட்டன!



ஆழியார் நகர் அகதி முகாம், கோவை, தமிழ்நாடு

ஜெயலலிதாவின் அரசுக்கு இலங்கைத் தமிழர்கள் ஒரு வேண்டாத விருந்தாளிகள். இந்த வேண்டாத விருந்தாளிகளை எப்படி வெளியேற்றுவது என்பது ஜெயலலிதாவுக்கு ஒரு தலைவலியாகவே இருந்திருக்க வேண்டும். அதன் வெளிப்பாடுதான் ஏப்ரலில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஜெயலலிதா பேசிய பேச்சு. "இலங்கைத் தமிழ் அகதிகள்தான் தமிழ்நாட்டில் கொலை கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களை வெளியேற்றிவிட்டால், மாநிலத்தில் அமைதி திரும்பிவிடும்" என்று கோபாவேசத்துடன் அவர் கூறியதைத் தெளிவாகவே உணர்ந்துகொண்ட காவல்துறையினர், அகதிகளைக் கடந்த ஐந்து ஆறு மாதங்களாகப் படுத்திய பாடு கொஞ்சநஞ்சமல்ல.

அகதிகளுக்கான சர்வதேச சட்டங்களும், நெறிமுறைகளும் தமிழ் அகதிகளுக்குச் சாதகமாகவே இருப்பதால், நேரிடையாகப் பலவந்தப்படுத்தி, அகதிகளை நாடுகடத்த முடியவில்லை. ஆகவே, மறைமுகமான நிர்ப்பந்தங்கள் மூலம் தமிழ் அகதிகளை, ஈழக்கரைகளை நோக்கி விரட்டிவருகிறது தமிழ்நாடு அரசு.

எந்த ஊரில் கொள்ளை நடந்தாலும், அகதிமுகாம்களை சுற்றிவளைத்து, "கொள்ளையர்களை"த் தேடுகிறது தமிழ்நாடு காவல்துறை. மேலும் காலை எட்டு மணிக்கு முன்பு முகாம்களைவிட்டு வெளியேறக்கூடாது என்றும், அப்படியே காலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எட்டு மணிக்குமேல் வெளியே சென்றிருந்தாலும் மாலை ஆறு மணிக்குள் திரும்பவேண்டும் என்றும் காவல்துறையினர் கெடுபிடி செய்கின்றனர். இதனால் அன்றாட வயிற்றுப்பாட்டுக்கு வெளியில் சென்று வேலை செய்து நாலுகாசு சம்பாதிக்க முடியாத சூழ்நிலையையும் உருவாக்கிக் கெடுபிடி கொடுக்கிறது அரசு. அத்துடன் நில்லாது, மாதந்தோறும் அகதிகளுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் உதவித் தொகைகளையும் வேண்டுமென்றே வேண்டுமென்றே காலம்கடத்தி, அகதிகளைக் கேவலப்படுத்தும் நோக்கில் கொடுத்துவருகிறது.

இந்தமாதிரியான நெருக்கடிகளையும் அவமானங்களையும் தாங்கமுடியாத அகதிகள் இன்று கப்பலேறத் தொடங்கிவிட்டனர். செப்டம்பரில் சுமார் 3,000 அகதிகள், இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதுவொருபுறமிருக்க, இந்தியாவில் சமீபத்தில் வேகமாகப் பரவிய பிளேக் நோயால், அகதிகள் அனுப்பப்படுவது தாமதப்பட்டுள்ளது. தமிழ் அகதிகள் மூலம் இலங்கையிலும் பிளேக் பரவிவிடலாம் என்ற அச்சத்தில், அகதிகளைத் தற்போது திருப்பி அனுப்பவேண்டாம் என்று இலங்கை கூறிவிட்டதால் ஜெ.அரசு அகதிகளை நாடுகடத்துவதைத் தற்காலிகமாக ஒத்திவைத்துள்ளது. தமிழ்நாடு அரசு சர்வதேச நெறிமுறைகளுக்கு மாறாக ஈவிரக்கமின்றி நடந்துகொள்ளும் அதேநேரத்தில் அகதகிளின் நலனில் அக்கறை கொள்வோரும் இல்லாமலில்லை. அகதிகள் பிரச்சனையில் ஆர்வம் காட்டிவரும் "ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக"த்தின் பொருளாளர் சா.செ.சந்திரகாசன், மற்றும் தடா போன்ற அச்சுத்தும் சட்டங்களின் மத்தியிலும் தமிழீழ விடுதலை பற்றிப் பிரசாரம் செய்துவரும், "தமிழ் தமிழர் இயக்க"த்தின் பொதுச் செயலாளர் தியாகு ஆகியோரைச் சந்தித்துக் கருத்துக் கேட்டோம்.

சா.செ.சந்திரகாசன்
பொருளாளர்,
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம்

தமிழ்நாட்டில் சில இடங்களில் நடைபெற்ற கொள்ளைகளில், தவறான வழிகாட்டுதல்களுக்கு உட்பட்ட ஈழ இளைஞர்கள் சிலர் சம்பந்தப்பட்டிருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த அகதிகள் அனைவரையுமே மிரட்டுவதும், மறைமுக நிர்ப்பந்தம் கொடுத்துத் தாயகத்துக்கு விரட்டுவதும் எங்களை வேதனை கொள்ளச் செய்கிறது.

சர்வதேசச் சட்டங்களுக்கு மாறாக எங்களை நிர்ப்பந்தப்படுத்தித் தாயகத்துக்கு அனுப்ப ஜெயலலிதா அரசு முனைகிறது. இதுவொரு தவறான அணுகுமுறையாகும். தமிழ்நாட்டில் கொலை கொள்ளை நடப்பதற்கு நாங்களா காரணம்? எங்களைச் சமூகவிரோதிகள் போன்று காவல்துறையினர் நடத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் சில இடங்களில் நடைபெற்ற கொள்ளைகளில், தவறான வழிகாட்டுதல்களுக்கு உட்பட்ட ஈழ இளைஞர்கள் சிலர் சம்பந்தப்பட்டிருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த அகதிகள் அனைவரையுமே மிரட்டுவதும், மறைமுக நிர்ப்பந்தம் கொடுத்துத் தாயகத்துக்கு விரட்டுவதும் எங்களை வேதனை கொள்ளச் செய்கிறது. எங்களது பிரச்சனையில் தமிழ்நாடு அரசு மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

1984ல் சிங்கள ராணுவம் தமிழ் மக்களை அடித்துத் துரத்தியபோது, பெருமளவில் தமிழ் மக்கள் தமிழ்நாட்டுக் கரைகளைத் தஞ்சம் அடைந்தனர். அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர், அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேசி, ஈழத் தமிழ் அகதிகள் தாராளமாகக் கல்விபெற ஏற்பாடு செய்தார். இந்திய மருத்துவக் கவுன்சிலுடன் போராடி, மருத்துவக் கல்லூரியில் 20 மாணவர்களையும், இஞ்சினியரிங் கல்லூரியில் 40 மாணவர்களையும், பி.எஸ்.சி. வேளாண்மையில் 10 இடங்களையும் தொழிற் கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்து கொடுத்தார் எம்.ஜி.ஆர். அத்துடன் மேல்நிலைப் பள்ளிக் கல்வியைத் தாராளமாக அனுமதித்தார். ஆனால் ஜெயலலிதா அரசு இந்தச் சலுகைகளையெல்லாம் ரத்துச் செய்துவிட்டது. அத்துடன் எந்தவொரு கல்வி நிறுவனமும் +1 மற்றும் +2 வகுப்பில் ஈழத் தமிழருக்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் வாய்மொழி உத்தரவு போட்டுள்ளதாம். இதனால் ஈழத்தமிழர்களின் கல்வி, தமிழ்நாட்டில் முழுமையாகத் தடைப்பட்டுள்ளது. எங்களை வெளியேற்ற வேண்டும் என்ற மறைமுக நிர்ப்பந்தத்தில் கல்வி மறுக்கப்படுவதும் ஒருவகை.

மேலும் அகதிகளின் சில தேவைகளைப் பூர்த்திசெய்ய, அகதி முகாம்களிலேயே செயற்பட்டுவந்த தொண்டு நிறுவனங்களையும் தமிழ்நாடு அரசு வெளியேற்றியுள்ளது. மருத்துவம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு ஆகியவற்றைப் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் கவனித்து வந்தன. இப்போது தொண்டு நிறுவனங்களும் செயல்பட முடியாத நிலையில், அகதிகள் விஷயத்தில் மனிதாபிமானத்தோடு செயல்பட யாரும் இல்லை.

மேலும் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் - 10 வருடங்களுக்குமுன்பு - வழங்கப்பட்ட 150 ரூபாய்தான் இன்றும் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. காலை எட்டு மணிக்கு முன்பும், மாலை ஆறு மணிக்குப் பிறகும், அகதிமுகாம்களில் இருந்து யாரும் வெளியேறமுடியாது. சொல்லாமல் கொள்ளாமல் வெளியில் செல்லும் இளைஞர்கள் விடுதலைப் புலிகளாகக் கருதப்பட்டு, துன்புறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு பல்வேறு துன்பங்களையும், மனத்துயரையும் பொறுக்க முடியாமல்தான், தமிழ்நாடு அரசின் மறைமுக நிர்ப்பந்தத்திற்கு சம்மதித்து தாயகத்துக்குச் செல்லத் தொடங்குகின்றனர் அகதிகள். ஈழத்தில் அமைதியும் நிரந்தரத் தீர்வும் ஏற்பட்டால், இங்குள்ள அகதிகள் தாமாகவே தாயகத்துக்குத் திரும்பிப் போய்விடுவார்கள். அதுவரையும் இவர்கள் கண்ணியத்தோடும், மரியாதையோடும் நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

www.tamilarangam.net



பூலுவப்பட்டி அகதி முகாம், கோவை, தமிழ்நாடு

தியாகு
பொதுச் செயலாளர்,
தமிழ், தமிழர் இயக்கம்

சர்வதேசச் சட்டம், மனித உரிமைப் பிரகடனம், அகதிகள் தொடர்பான நெறிமுறைகள் ஆகியவற்றின்படி, இலங்கைத் தமிழ் அகதிகள் அவர்களாகவே விரும்பி, திரும்பிச் செல்லும்வரை தமிழகத்தில் தங்கியிருக்க உரிமை உண்டு.

ஈழத்தில் போர் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது என்பதும், அங்கு இயல்பான வாழ்க்கை இல்லை என்பதும் கண்கூடான உண்மை. இந்த நிலையில் அகதிகள் தாமே விரும்பி, திரும்பிச் செல்வதற்கான வாய்ப்பே இல்லை. அவர்களை நேரிடையாகவும் சுற்றடியாகவும் நெருக்கி நிர்ப்பந்தித்து, நெட்டித் தள்ளுவதுபோல் திருப்பி அனுப்புகின்றன, மத்திய மாநில அரசுகள்.

இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றன. இந்தக் கொள்கையும் நடைமுறையும் சர்வதேசச் சட்டங்களுக்கும் நெறிமுறைகளுக்கும் முரணானவை.

இந்த அகதிகள் பிரச்சினைக்கு மற்றொரு பரிமாணமும் உண்டு. இனப்படுகொலையில் இன்னலுற்று, ஆதரவும் ஆறுதலும் வேண்டி வந்த ஈழத் தமிழர்களை வரவேற்று, அரவணைத்துப் பராமரிப்பது இங்குள்ள தமிழ் மக்களின் தேசிய உரிமையும் கடமையுமாகும். தமிழ் இனத்தின் தேசிய உரிமை மறுக்கப்படுவதும், மீறப்படுவதும் தமிழ் அகதிகள் பிரச்சனையிலும் வெளிப்படுவதைக் காணலாம். ஈழத்தமிழ் அகதிகளை வரவேற்று அரவணைப்பதுடன், அவர்களை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படாமல் தடுப்பதற்காகவும் தமிழ் மக்கள் போராடவேண்டும் என்பது "தமிழ் தமிழர் இயக்க"த்தின் கருத்து.

இந்தப் போராட்டம் வேறு யாருக்கோ இரங்கியும் பரிந்தும் நடத்தப்படும் போராட்டமல்ல. மாறாக இது தமிழ் மக்கள் தங்கள் தேசிய உரிமையை நிலைநாட்டிக் கொள்வதற்கான போராட்டமும் ஆகும்.

திருப்பி அனுப்பும் பிரச்சனை ஒருபுறமிருக்க, இங்குள்ள ஈழத்தமிழ் அகதிகள் குற்றவாளிகள் போலவும், சிறைக்கைதிகள் போலவும் நடத்தப்படுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. தமிழ்நாட்டில் அகதி முகாம்கள் சிறைமுகாம்களாகவே மாற்றப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளுக்காவது, தமிழ்நாடு அரசு சில உரிமைகளைச் சட்டத்தின் மூலம் வழங்கியுள்ளது. அத்தகைய உரிமைகள்கூட தமிழ் அகதிகளுக்குக் கிடையாது.

மனித உரிமைகளில் அரசியல் உரிமைகளும், குடியியல் உரிமைகளும் அடங்கும். எனவே அகதிகளுக்கு மனித உரிமைகள் உண்டென்றால், அவர்களுக்கு அரசியல் உரிமைகளும் இருக்கவேண்டும்.

ஈரான் அகதிகளும், பாலஸ்தீன அகதிகளும் ஏனைய பல நாட்டு அகதிகளும் இந்த நாட்டில் அரசியல் உரிமைகளை அனுபவித்துவரும்போது, ஈழத்தமிழ் அகதிகளுக்கு மட்டும்தான் இந்த உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

அரியானா அமைச்சர் ஒருவர் விமானத்தில் பணிப்பெண்ணிடம் கலாட்டா செய்தார் என்பதற்காக, எல்லா அமைச்சர்களையும் பெண் பித்தர்கள் என்று கூறிவிடலாமா? அகதிகளில் யாராவது ஒருசிலர் சட்டத்தை மீறிக் குற்றம் புரிந்தார்களாயின், அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் அதையே சாக்கிட்டு ஈழத்தமிழ் அகதிகள் அத்தனை பேரும் குற்றவாளிகள் என்று முத்திரை குத்தி, அவர்கள் மறுப்பதற்கு வாய்ப்பேதும் இல்லாதபோது குற்றச்சாட்டுகளை அடுக்குவது, இதை ஒரு முதல்வரே செய்வது அழகல்ல.

தமிழ் தமிழர் இயக்கமும், அதனை ஓர் அங்கமாகக் கொண்ட தமிழ் தேசத் தன்னுரிமை முன்னணியும், ஈழத்தமிழ் அகதிகளை முறையாகவும் சட்டவிதிகளின்படியும், உரிய கண்ணியத்துடனும் நடத்தவேண்டும் என்றும் வலுக்கட்டாயமாக அவர்களைத் திருப்பி அனுப்பக்கூடாது என்றும் தொடர்ந்து குரல்கொடுத்தும் போராடியும் வருகின்றன.

www.tamilarangam.net

சி.சிவசேகரம்

வடிவ வழிபாடும் நவீனத்துவமும் தொடர்பாகச் சில வரிகள்

உருவமா உள்ளடக்கமா என்ற விவாதம் தமிழிலக்கியப் பரப்பில் இரண்டு தசாப்தங்கட்கும் முன்பு உக்கிரமாக நடைபெற்றது. இவ்விதம் நடைபெற்ற சூழலின் விளைவாக உருவமும் உள்ளடக்கமும் தம்மிடையே ஒரு பகை முரண்பாட்டை உடையன என்ற எண்ணம் ஏற்பட்பது. இதன் பயனாக உள்ளடக்கத்தையே அடிப்படையானதாகக் கொண்டவர்களான முற்போக்குவாதிகள் மத்தியில் அதுவே போதுமானது என்ற வாதம் வலிவு பெற்றது. இதன் விளைவான பிரதான இழப்பு முறிபோக்கு இலக்கியத்தினதே. மாக்ஸிய அழகியற் சிந்தனைகளை விருத்தி செய்வதற்குச் செலவிடப்பட வேண்டிய முயற்சி சிறிது திசை திரும்பியமை ஒரு முக்கியமான இழப்பு. பல ஆற்றல் மிக்க படைப்பாளிகள் மத்தியில், சரியான அரசியற் கோஷங்களை முன் வைப்பதுடன் திருப்தியடையும் ஒரு போக்கு உருவானமையும் இன்னொரு முக்கியமான இழப்பு. முற்போக்கு இலக்கியவாதிகள் இப்போக்கிற்கு முற்றாகவே பலியாகிவிடவில்லை. இவ்விவாதத்தின் போக்கில் ஏற்பட்ட தவறுகளைக் களைந்து முற்போக்கு இலக்கியத்தை உருவமும் உள்ளடக்கமும் என்ற இரு கால்களில் நடக்க வைக்கும் தேவையை அவர்களிற் பலர் விரைவிலேயே உணர்ந்து விட்டனர்.

மாக்ஸையும் எங்கல்ஸையும் லெனினையும் விட அதிகளவில் கலை இலக்கியம் பற்றிய அக்கறை காட்டியவர் மாதுசேதுங். மக்களுக்காகக் கலை இலக்கியங்களைப் படைப்பதற் தேவையையும் கலை இலக்கியத்தின் வர்க்கத்தன்மையையும் பற்றி மிகவும் தெளிவாகவே கூறிய அவர், படைப்புக்களின் அழகியலையும் மிகவும் வலியுறுத்தினார். மாக்ஸிய விமர்சனம் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் ஒரே சமயத்தில் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி, ஒரு படைப்பின் முக்கியத்துவத்தை அதன் உடனடியான சூழலிலும் அதற்கு அப்பாலும் வைத்து மதிப்பிடும் தேவையும் உள்ளது. இவ்வாறான விஷயங்களை மிகுதியாக எளிமைப்படுத்துவது ஆபத்தானது. வரட்டுச் சுதந்திரங்களை வைத்துக் கலை இலக்கியங்களை மதிப்பிடுவோர் நல்ல மாக்ஸியவாதிகளாக இருக்க முடியாது.

உள்ளடக்கத்தை விட உருவமே முதன்மையானது என்ற கருத்து அழகியலை முதன்மைப்படுத்துவதாகத் தன்னை நியாயப்படுத்திக் கொண்ட போதும், அதற் முனைப்பு, கலை இலக்கியவாதியின் சமுதாயப் பொறுப்பையும் கலை இலக்கியங்களது வர்க்கத் தன்மை அரசியல் முனைப்பு போன்றவற்றையும் பூரணமாகவே நிராகரிப்பதாக இருந்தது. கலை கலைக்காகவே', கலைஞன் சுதந்திரமானவன்' என்பன போன்ற கோஷங்களால் அலங்கரிக்கப்பட்ட இப்போக்கு, மாக்ஸிய விரோதத்தைத் தழுவிக்கொண்டதில் வியப்பில்லை. இன்று முதலாளித்துவ சமுதாயத்தின் சீரழிவு, சகல கலை இலக்கிய வடிவங்களையும் பற்றிக் கொண்டுள்ளது. கலைகளும் கலைஞர்களும் விற்பனைப்பண்டங்களாகி வருகின்றனர். இவ்விதமான சூழலில் தூய கலைவாதம், அழகியல் வாதம் போன்ற கோட்பாடுகள் பழமையைத் தழுவி நிற்கும் போது இறந்து போன பொற்காலம் பற்றி ஏக்கப் பெருமூச்செறிகின்றன. சிலசமயம் நவீனத்துவத்தின் பேரில் நிசவாழ்வினின்று விலகி ஓடும் முயற்சிகளில் இறங்குவன. வேறு சில சமயங்களில் தனிமனிதச் சுதந்திரம் தனி மனிதத்துவம் என்ற விதமான பேர்களுடன் தனிமனிதனது இருப்பைச் சமுதாயத்தினின்று வேறுபடுத்தி அதிமுக்கியத்துவமுடையதாகக் காட்ட முற்படுவன.

எவ்வாறாயினும், கலை இலக்கியங்களின் சமுதாயப் பண்பை நிராகரிக்கும் படைப்பாளிகளும் விமர்சகர்களும் முதலாளித்துவத்தின் விளைவான சீரளிவைத் தடுக்கப் போரிடும் வலிமையற்றோராகவே உள்ளனர்.பலர் மாக்ஸியத்தையும்

www.tamilarangam.net

முற்போக்கு இலக்கியத்தையும் மிகுதியாக வெறுப்போராக இருந்து வந்தமைக்கு முற்கூறிய இயலாமையும் சிறிது பங்களித்துள்ளது.

ஒரு ஆக்கம் கலைப்படைப்பாவதற்கு அது அரசியற் தன்மையுடையதாக இருப்பது தடையாக இருக்க முடியுமாயின், தூய கலை இலக்கியவாதிகள் தாம் கொண்டாடும் பல மாக்ஸிய விரோதப் படைப்பாளிகளை நிராகரித்தாக வேண்டும். இலக்கியத்தின் நோக்கம் சத்தியத் தேடல் என்று ஒரு கோஷமும் காலத்திற்குக் காலம் எழுந்து வந்துள்ளது. சத்தியத் தேடற்காரர்களது இயல்பான மானுட அகச்சார்பைக் கணிப்பில் எடுத்துக் கொண்டாற் கூட, இவர்கள் சத்தியத்திற்கு எவ்வளவு நெருக்கமாகப் போகிறார்கள் என்பது கொஞ்சம் பிரச்சனையான விடயம்.

கலை இவக்கியங்களிலான ஈடுபாட்டைச் சாத்தியமாக்க ஆய்வு அவசியம். எனவே, பொழுது போக்கு என்ற பண்பு, கலை இலக்கியங்களுடன் இணைவது தவிர்க்க முடியாததாகிவிடுகின்றது. பொழுது போக்கு எனும் போது அதை அன்றாட வாழ்வின் நெருக்குவாரங்களினின்றும் விலகித் தப்பியோடும் ஒரு காரியமாகவே காண இடமுண்டு.போதைப்பொருள் நுகர்வும் களியாட்டங்களும் விளையாட்டுக்களும் கூட இவ்வாறு தப்பிச் செல்ல உதவுவனவே. கலை இலக்கியங்களின் பங்கும் இத்தகையதாக இருக்க வேண்டுமா? அழகியலை வலியுறுத்துவோரும் கலை கலைக்காகவே என்று வாதிப்போரும் சத்தியத் தேடற்காரர்களும் அவ்வாறு கூறமாட்டார்கள். முதலாளித்துவ வியாபார இலக்கியங்கள் பொழுது போக்கை மிகுதியாக வலியுறுத்துவது இயல்பானதே. சமுதாய நெருக்கடி மிகுந்த யுகமொன்றில் கலை இலக்கியங்கள் சமுதாயத்தின் முரண்பாடுகளையும் போராட்டங்களையும் சமுதாய மாற்றத்திற்கான தேவைகளையும் தவிர்க்க முனையும் போது அக்கலை இலக்கியங்கள் அவற்றின் நோக்கம் என்னவானாலும், தப்பியோடும் காரியத்திற்கே துணை போகின்றன. தப்பியோடுவதற்கு உதவுகிற கருவி மட்டுமே வேறுபடுகிறது. அழகியல் எனற பேரால் அக்கருவி சிலசமயம் அலங்கரிக்கப்படுகிறது. ஆயினும் யதார்த்தத்தை நிராகரிந்ந முற்படுமளவில், அது சமுதாயப் பொறுப்புகளினின்று தன்னை விலக்கிக்கொள்கிறது. உருவத்தை முதன்மைப் படுத்தல், இவ்வாறு, உள்ளடக்கத்தின் சமுதாய முக்கியத்துவத்தை நிராகரிக்கிறது. இதன் துணை விளைவுகளில் ஒன்றும் நமது கவனிப்புக்கு உரியதாகின்றது. இது நவீனத்துவம் தொடர்பானது. புதிய கலை வடிவங்கட்குத் தம்மளவிலேயே முக்கியத்துவம் அளிக்கும் போக்கையே இங்கு குறிக்கிறேன்.

கலை கலைக்காகவே என்ற கோட்பாட்டின் போது நவீனத்துவமும் தன்னளவிலேயே முக்கியமான ஒன்றாகி விடுகையில் இப்புதுமை வாதம் ஆழமற்ற படைப்புக்களைத் தமது வடிவத்தின் அடிப்படையில் நியாயப்படுத்த உதவுகிறது. தமிழிற் சமகாலப் புதுக்கவிதை தன் தொடக்க நிலையில் அயல்மொழி இலக்கியங்களிலிருந்து உள்வாங்கப்பட்டு அரைகுறையாக விளங்கிக் கொள்ளப்பட்ட ஒரு எழுத்து வடிவமாக இருந்தமை நினைவு கூரத்தக்கது.அதைக்காத்திரமான இலக்கிய வடிவமாக்க முடியுமோ என்ற ஐயம் அந்தச் சூழலில் இயல்பாகவே இருந்தது. இன்னமும் புதுக்கவிதை அதன் தொடக்க காலக் கோளாறுகளினின்று முற்றாக விடுபடவில்லை. ஹைக்கு' என்ற ஜப்பானியக் கலைவடிவம், அதன் சாரத்தை இழந்து, தமிழில் அவதிப்படுகிறது. இது போலவே, அதியதார்த்த வாதமும் இன்று கருத்துக்குழப்பமான கவிஞர்களுக்கு ஒரு வசதியான வாகனமாகி விட்டது. கவிஞர் சோலைக்கிளி தனது அதியதார்த்தவாதக் கவிதைகள் சிலவற்றில் காட்டிய அற்புதமான ஆளுமையும் வலிமையான உணர்வுச் சித்தரிப்பும் அவரது பின்னய கவிதைகள் பலவற்றில் இல்லை. அவரது நல்ல கவிதைகள் பெற்ற வரவேற்பின் விளைவாகக் கண்மூடித்தனமாகப் படிமங்களை இறைத்துக் கவிதை உற்பத்தி செய்வோரின் தொகை அதிகரித்துள்ளது. நவீன ஓவியத்திற் போன்று பம்மாத்து மிக எளிதாகவே இயலுமாகியுள்ளஒரு இலக்கிய வடிவமாக இத்தகைய படிமக் கவிதைகள் அமைந்து விட்டன. இவற்றை விமர்சிக்கப் பலரும் தயங்குவதற்கான காரணம், நவீன ஓவியங்களை விமர்சிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளுடன் உறவுடையது.

விமர்சனத் துறையிலும் இத்தகைய பம்மாத்துகள் தலை காட்டாமல் இல்லை. மேற்கிலிருந்து பெறப்பட்ட ஆய்வு முறைகள், அவை மேற்கிலேயே செல்வாக்கிழந்து போன பின்னரும் கூட, தமிழகத்தில் கொடிகட்டிப் பறக்கிற நிலமைகளை நாம் அறிவோம். இங்கெல்லாம் எளிமையான, தெளிவான சிந்தனைக்கும் ஆய்வுக்கும் பிரதியீடாகச் சிக்கலானதும் குழப்மானதுமான சொற்சிலம்பங்கள் அமைந்து விடுகின்றன. கலை இலக்கிய ஆய்வுகளையெல்லாம் ஒற்றைப்பரிமாணத்தில் முற்போக்கு-பிற்போக்கு, மரபுசார்ந்த-மரபுசாராத, பழைமைவாத-நவீனத்துவ எற்ற மாதிரி மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட சூத்திரங்களால் எளிமையாக ஆராய முடியாது தான். எனினும், சிக்கலான தன்மை சரியான முடிவுகட்கு உத்தரவாதமில்லை. எளிதான ஒரு செய்முறையின் வரையறைகள் என்ன என்பதை அடையாளம் காட்டி, அதன் குறைபாடுகளைத் தாம் தெரிந்த மாற்று முறை எவ்வாறு என்று விளக்கும் ஆற்றலைப் புதுமைக்காகப் புதுமையை நாடும் புதுமைக்காரர்கள் எவருமே இதுவரை புலப்படுத்தவில்லை.

இவ்விடங்களிலெல்லாம் கலை இலக்கியத்திலும் விமர்சனத்திலும் புதியவடிவங்கள் அவை புதியன என்பதாலும் வழமைக்கு மாறானவை என்பதற்காகவுமே போற்றப்படுகின்றன. உள்ளடக்கத்தை விடப் புறத்தோற்றமே மிகுதியான முக்கியத்துவத்தைப் பெறுவது விசனத்திற்குரியது. புதிய வடிவத்தின் மூலம் உள்ளடக்கத்தின் ஆழத்தை எவ்வாறு அதிகரிக்கலாம், அதில் எத்தகைய புதிய பண்புகளைப் புகுத்தலாம் என்பனபற்றிய தெளிவு இல்லாமலும் குழப்பத்துடனும் படைப்புகள் வருவதால் அவை சமூகப் பிரக்ஞை உள்ள படைப்பாளிகள் பலரால் பகைமையுடன் நோக்கப்படுகின்றன. இதுவும் நல்லதல்ல. ஒரு குறிப்பிட்ட கலை வடிவம் அதன் தொடக்க நிலையில் விரும்பத்தகாத ஒரு சிந்தனைப் போக்குடன் இணைந்து வரவும் விருத்தி பெறவும் முடியும். அவ்வடிவம் சமூகப் பிரக்ஞை உள்ள படைப்பாளியால் எவ்வாறு கையாளப்படக் கூடும், அதன் மூலம் முற்போக்கான சிந்தனைகளைப்

www.tamilarangam.net

பரத்துபட்ட மக்களிடம் கொண்டு செல்ல முடியுமா என்பனவே முற்போக்கான படைப்பாளியின் அக்கறையாக இருக்க வேண்டும். சில கலைவடிவங்கள், சில புத்திஜீவிகள் தமது அதிமேதாவித் தனத்தைப் பறைசாற்றவும் தமக்குள்ளேயே பேசி மகிழவும் மற்றோரை மட்டம் தட்டவும் பயன்படுமாயின், அவை அவ்வாறே பயன்படுக. எனினும், ஒரு புரட்சிகரப் படைப்பாளி எதையும் பரிசோதனை செய்து பார்க்கத் தயங்க வேண்டியதில்லை.

குறிப்பிட்ட ஒரு கலை வடிவத்தின் சாத்தியப்பாடுகள் என்ன, அதன் வரையறைகள் என்ன என்பன பற்றிய அறிவை நடைமுறை மூலமே நாம் பெற முடியும். சில வதுவங்கள் மூலம் பிற்போக்கானதும் சீரழிவானதுமான சிந்தனைகள் மட்டுமே பரப்பப்படுகின்றனவாயின் அவ்வடிவங்கள் மக்களைச் சென்றடைகிற பட்சத்தில் அவற்றை முற்போக்குவாதிகள் மேலும் திறமையுடன் திறமையுடன் தமக்கேற்பப் பயன்படுத்த முடியாதா என்பது ஒரு கேள்வி. அவ்வாறு முடியாத சூழ்நிலை இருப்பின் முற்போக்குவாதிகள் எத்தகைய மாற்றுவடிவத்தைப் பயன்படுத்தலாம் என்பது இன்னாரு கேள்வி. எவ்வாறாயினும், புதுமை, புதுமை என்று மார்தட்டிக் கொண்டு வருகிற ஒவ்வொன்றையும் ஓடிச் சென்று தழுவிக் கொள்ள அவசியம் இல்லை. உடனடியாகவே கிரகிக்க முடியாத ஒன்றையிட்டு மிரளவும் அவசியம் இல்லை. முற்போக்குக் கலை இலக்கியவாதிகளது பாசறை, எந்தக் கலை இலக்கிய வடிவத்தினையும் தனதாக்கிக் கொள்ள ஆயத்தமாக உள்ள அதே வேளை, எந்த ஆயுதம் தனது இலக்கிற்கு அதிகம் பயனுள்ளதும் அதிக ஆற்றலுடன் பயன்படக் கூடியதும் என்பது பற்றித் தெளிவாக இருப்பின் போதுமானது.

புதியது என்பதை மட்டுமே தகுதியாக்கி மற்றவர்களுக்குப் புரியாமல் இருப்பதையே தமது செயற்பாட்டின் வலிமையாகக் கொள்வோர் கலை இலக்கியத் துறைகளிலும் விமர்சனத் துறையிலும் என்றும் இருந்து வந்துள்ளனர். இனியும் இருப்பர். அவர்கள் மூலமும் பயனுள்ளது ஏதேனும் விளையுமாயின் விளைக. அதே வேளை, விமர்சகர்களும் விளக்கம் தருவோரும் தெளிவான நிதானமான மதிப்பீடுகளைச் செய்வது படைப்பாளிகட்கும் நல்லது, பார்வையாளர்கட்கும் நல்லது.நவீனத்துவம் என்பது புறத்தோற்றஞ் சார்ந்தது மட்டுமல்ல.

■

சாரல்நாடன்



"ஊரான ஊரிழந்தேன்
ஒத்த பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நா மறந்தேன்"

1944ல் பிறந்த சாரல்நாடன், திருமணமானவர்; ஒரு மகனும், ஒரு மகளும். தலைமைத் தொழிற்சாலை அதிகாரியாகப் பணிபுரியும் இவர் தேசியக் கலாசாரக் கொள்கைத் திட்டக்குழு அங்கத்தவரும், மலையக கலை இலக்கியப் பேரவையின் தலைவருங்கூட. சி.வி. சில சிந்தனைகள், தேசபக்தன் கோ.நடேசய்யர், மலையகத் தமிழர், மலையக வாய்மொழி இலக்கியம் என்பன வெளிவந்த இவரது நூல்கள்.

புகலிட இலக்கியம்

மனித வரலற்றில் புலப்பெயர்ச்சி ஒரு பொது நிகழ்வாக நூற்றாண்டுகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. பொருளாதாரமே இதற்கான மிகப் பிரதான காரணமாக இருந்து வந்துள்ளது. மத சுதந்திரம் பேணுவதற்காகவும், அரசியல் சுதந்திரம் பேணுவதற்காகவும் புலப்பெயர்ச்சிகள் 18ம் நூற்றாண்டில் இடம்பெறத் தொடங்கின; பயனாகப் புது நாடுகள் உருவாகின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐம்பதுகளின் பின்னால்
இலங்கையில் படிப்படியாக
இனமுறுகல்' வளர்ந்தோங்கி
எண்பதுகளில் நாடுதழுவிய
கலவரமாக உருவெடுத்தது.
ஆட்சியாளரின் விரோத
நடவடிக்கைகளில் வெறுப்புற்ற
தமிழ் இளைஞர்கள் ஆயுதம்
தாங்கிப் போராட்டம்
மேற்கொள்ளத் தொடங்கினர். 2.

பத்தொன்பதாம் நூற்றாண்டில்
இலங்கையில் குடியேறிய
இந்தியர்கள் - தமிழ், மலையாளம்,
இந்தி, தெலுங்கு, அரபு மொழி
பேசும் இனத்தவர்கள் - இன்று
"மலையகத் தமிழர்" என்று
இனம்காணப்படுகின்றனர்.
புலப்பெயர்ச்சி இடம்பெற்ற
ஆரம்பகாலப் பகுதியில் இவர்களது
வாழ்வும் புகலிட வாழ்வாகவே
அமைந்திருந்தது.

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்த பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நா மறந்தேன்"

என்ற வாய்மொழிப் பாடலும்,

"ஆளுக்கட்டும் நம்ம சீமை
அரசிபோடும் நம்ம சீமை
சோறுபோடும் கண்டிச் சீமை
சொந்தமினு என்னாதீங்க"

என்ற வாய்மொழிப் பாடலும்
இதற்குச் சிறந்த உதாரணங்கள்.
எனினும், இப்புலப் பெயர்ச்சி
இலங்கையில் ஆளுவோரின்
அனுமதியுடனும்
அனுசரணையுடனும்
நடைபெற்றது. எனவே, தமது
கலாசாரத்தை அவர்கள்
தொடர்ந்து பேண முடிந்தது. இன்று
இலங்கையில் தம்மை ஒரு தேசிய
இனமாகக் கருதவேண்டிய
அவசியத்தைத் தோற்றுவிக்க
முடிந்தது.
ஆரம்பகாலப் பாடல்கள்
இவர்களது புகலிட வாழ்வைச்
சித்தரிப்பினும், தம்மை
இலங்கையில்
நிலைப்படுத்திக்கொள்ள
ஆரம்பித்தபின்னரே இலக்கியத்
தோற்றத்தில் இச்சமூகத்தினரின்
பங்களிப்பைக் காணமுடிகிறது.
அதுசமயம் மலையக இலக்கியம்
என்று அது அறியப்படலாயிற்று.

3.

அரசாங்கத்தின் அனுமதிபெற்று
இலங்கையிலிருந்து அவுஸ்திரேலிய
- குயீன்ஸ்லாந்துக்கு 475 சிங்களவர்
புலம்பெயர்ந்தனர். இவர்கள்
அனைவரும் ஆங்கிலம்
அறிந்திருந்தனர். 1882ல்
அவுஸ்திரேலியாவில் கரும்புத்
தோட்டத்துக்கே இவர்கள்
புலம்பெயர்ந்தனர். இவர்கள் தம்மை
எந்த ஒரு காலகட்டத்திலும்
இனம்காட்டக்கூடிய சூழ்நிலை
உருவாகவில்லை.
இந்தியர்கள் கடல்கடந்த பல
நாடுகளில் இவ்விதமே
புலம்பெயர்ந்து வாழ்கின்றனர்.
தம்மை அவ்வவ் நாடுகளின்
பிரஜைகளாக ஆக்கிக்
கொண்டுள்ளனர்.
இன்று இலங்கையிலிருந்து
வெளியேறி கடல்கடந்த நாடுகளில்
தமிழர், முஸ்லிம், சிங்களவர்
வாழுகின்றனர். இவர்களில் கடல்



கடந்த நாடுகளில் -

"எரியவும் வேண்டும்
ஒளிரவும் வேண்டும்
புயலினுள் ஏறவும் வேண்டும்
யாரால்தான் முடிந்தது?
நெருப்பேந்தா
வீரர்கள் எத்தனை?
விட்டில்களாய்
வீழ்ந்தார் எத்தனை?
அணையார் எத்தனை?
என்னுள்ளும் புதையுண்ட
கதைகள்தாம் எத்தனை....."
(முகம்கொள் - கி.பி.அரவிந்தன்)

என்று வாழுகிற காலத்தின்
நெருக்கடியை மீளவும் தாயகத்தில்
வாழத்துடிக்கும் நிலைகருதி
நெஞ்சுறுதியோடு எதிர்கொள்கிற
தமிழ்ப் படைப்புகளிலே
காண்கிறோம்.
"புகலிட இலக்கியம்" படைத்தும் -
படைப்பதற்கென்றே ஐம்பத்திரண்டு
சிறிறேடுகளைத் தொடக்குவித்தும்
தங்களது பணியாற்றுபவர்கள் தமிழ்
பேசும் மக்களே.
இப்படைப்புகளில் ஈழத்தமிழரின்
உணர்வுகளும், புகலிடம் தேடிய
நாடுகளின் அனுபவங்களும்
தெறித்து விழுகின்றன.
கடல்கடந்து புகலிட வாழ்வு
நடாத்தும் தமிழர்கள் இலங்கையின்
அரசியல் சமூகப் பிரச்சனைகளை
மிகவும் தீவிரமான மொழிகளில்
வெளிப்படுத்துகின்றனர். அரசியல்
நிகழ்வுகளின் போக்குகளைப் பற்றிய
விமர்சனங்களாகவும் - தாய்நாடு
பற்றிய ஏக்கங்களைச் சித்தரிக்கும்
வெளிப்பாடாகவும் அமையும்
இப்புகலிட இலக்கியம், தொடர்ந்தும்
அந்தந்த நாடுகளில் படைக்கவும்,
படிக்கவும் படுமா என்பது
சந்தேகமே. ஏனெனில்,

"ஒருமொழி படிக்க மறுத்த எம்மவர்
நாக்கில் பிரெஞ்சு, ஜேர்மன்,
ஆங்கிலம், ஸ்பானிஷ
யாரைநோக எகே போய் முட்டுவது"
(வ.ஐ.ச.ஜெயபாலன்)
என்ற கவிதை வரிகள்
வெளிப்படுத்தும்.
அந்நிய நாட்டில் அகதிகளாக
வாழுகின்ற துர்ப்பாக்கிய
நிலைமையிலும் - தமது சமூக
கலாச்சார வேர்களை மெல்ல
மெல்ல இழந்துவிடும் வரலாற்றுப்
போக்கை - மாற்றியமைத்திடும்
கோபாவேசத்துடன்
வெளிவந்துகொண்டிருக்கும்
"புகலிட இலக்கியம்" காலத்தின்
தேவை.
இந்தத் தேவையிருக்கும் வரையிலும்
"புகலிட இலக்கியம்" வளரும் -
தமிழுக்கும் வளமூட்டும்.
இன்றையவரை நோக்குகையில்
கவிதை இலக்கியத்துக்கு நிறையவே
பங்களிப்புச் செய்யப்பட்டிருக்கிறது
என்பதில் ஐயமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தனி ஜீவா

பத்திரிகையாளரும், நாடகக்கலைஞருமான அந்தனி ஜீவா மலையக இலக்கிய சஞ்சிகையான செங்கோல்' என்ற சஞ்சிகையின் இணையாசிரியராகவும் பணியாற்றுகிறார். கொழுந்து' என்ற சஞ்சிகையை வெளியிட்டுள்ளார். மலையக இலக்கிய வளர்ச்சிக்காக மலையக வெளியீட்டகம் மூலம் பத்து நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவரது அக்கினிப் பூக்கள்' என்ற நாடகம் தொழிலாளர் வர்க்கப் பிரச்சனைகளைச் சிறப்பாகச் சித்திரித்துள்ளது. 12தடவை மேடையேறியுள்ளது. அலைகள்' என்ற நாடகம் அரசின் விருதுகளைப் பெற்றுள்ளது. கொழும்பிலும், மலையகத்திலும் வீதி' நாடகத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தியுள்ளார். எழுத்தைத் தன் வாழ்வாகவும் தொழிலாகவும் கொண்டுள்ள இவர் மலையகக் கலை இலக்கியப் பேரவையின் செயலாளராவார்.

"ஈழத்துத்தமிழிலக்கியத்தில் மலயக இலக்கியம் புதுரத்தம் பாய்ச்சியது."

- பேராசிரியர் அமரர் கைலாசபதி.

மலையகச் சிறுகதைகள்

அத்தகைய இலக்கியத்தின் சிறப்புக்குக் காரணமான மலையகச் சிறுகதைகளாகும்.மலையகச் சிறுகதைகள் ஒவ்வொன்றும் வரலாற்றுத் தகவல்களைத் தரும் ஆவணமாகும். தமிழில் சிறுகதைத் துறை சிறப்பான வளர்ச்சி பெற்றது. மணிக்கொடி சஞ்சிகையின் காலத்தில் தான் 1933ம் ஆண்டு தொடக்கம் வெளிவரத் தொடங்கிய மணிக்கொடியின் தாக்கம் இலங்கையிலும் பரவியது. மணிக்கொடி எழுத்தாளர்களின் முக்கியமானவர்களாகக் கருதப்படும் புதுமைப்பித்தனின் படைப்புகள் மலையக எழுத்தாளர்களுக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியது.

மலையக ஆக்க இலக்கியத் துறைக்கு வித்திட்ட பெருமை கோ.நடேசய்யர் அவர்களையே சாரும். கோ.நடேசய்யர் தஞ்சாவூரில் அரசாங்கப் பணியில் இருந்து விட்டு, பின்னர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி, பத்திரிகை சந்தா திரட்ட இலங்கை வந்துள்ளார். பின்னர் 1920ல் இலங்கை வந்து "தேசநேசன்" என்ற பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் சொந்தமாக தேசபக்தன்' என்ற நாளிதழை நடத்தியுள்ளார். பத்திரிகையாளராகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஐயர் மலையக மக்களின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்தது மாத்திரமல்லாது, பிரிட்டிஷ ஆட்சியில் மோசமாகச் சுரண்டப்பட்ட மலையகத் தொழிலாளர் மத்தியில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் நட்சத்திரமாகத் திகழ்ந்த நடேசய்யர் மலையகத்தில் அரசியல், சமூக,இலக்கிய கரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறார். மலையகத்தின் முதல் தொழிற்சங்கவாதியாகவும், பத்திரிகையாளராகவும்,

www.tamilarangam.net

சட்டசபையில் இந்தியப் பிரதிநிதியாகவும், ஆற்றல் மிகுந்த எழுத்தாளராகவும் நடேசய்யர் திகழ்ந்தார். மலையகத்தின் எழுத்து வழி இலக்கியத்தின் மூலம், அதற்கு மூலவர் நடேசய்யரே ஆவார். "இராமசாமி சேர்வையின் சரித்திரம்' என்ற நடேசய்யரின் சிறுகதை தான், மலையகத்தின் முதலாவது சிறுகதை என்ற அந்தஸ்த்தைப் பெறத்தக்கது. நடேசய்யரைப்பற்றிய ஆய்வுகள் இப்போதுதான் முக்கியத்துவம் பெறுகின்றன. சாரல்நாடன், அந்தனிஜீவா ஆகிய எழுத்தாளர்கள் அவரது பணிகளை மக்கள் அறியச்செய்வதிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி உழைத்து வருகின்றனர்."இவ்வாறு ஜேர்மனியில் பெர்லினில் நவம்பர் 1991ல் நடைபெற்ற நடேசய்யர் நூற்றாண்டு நினைவுப் பேருரையில் விரிவுரையாளர் மு.நித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

மலையக ஆக்க இலக்கியத் துறைக்கு கோ.நடேசய்யர் வழிகாட்டலுடன் எழுத்துத் துறைக்கு சிலர் காலடி எடுத்து வைத்தாலும், கவிதைத் துறையில் காட்டிய ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் புனைக்கதைத் துறையில் காட்டவில்லை. தமிழகத்தில் மணிக்கொடியின் தாக்கத்தின் பின்னரே சிறுகதைத் துறையில் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தினார்கள். "மணிக்கொடி" சஞ்சிகையிலே தனது சிறுகதையை வெளியிட்ட பெருமை கே.கணேசுக்கு உண்டு. அவரின் 'ஆசாநாசம்' மணிக்கொடியில் வெளிவந்தது. அட்டணைச் சேர்ந்த பொ.கிருஷ்ணசுவாமி தமிழகப் பத்திரிகைகளில் எழுதினார். அவரைத் தொடர்ந்து ந.அ.தியாகராயன், ரபேல், மாத்தளை அருணேசர், சி.வி.வேலுப்பிள்ளை போன்றோர் தமிழகச் சஞ்சிகைகளில் தங்கள் படைப்புக்களை வெளியிண்டுள்ளனர்.

1950களுக்குப் பின்னரே மலையகத்தின் கல்வி எல்லோருக்குமுரிய சொத்தாக மாறியது. பெரியோர் ஈ.வே.ரா-வின் சுயமரியாதைக் கருத்துக்கள், திராவிடர் கழகம், திராவிடர் முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் ஏடுகள் மலையகத்திற்கு வரத் தொடங்கின. பாரதிதாசன் பாடல்கள் மலையக இளைஞர்களுக்கு பரிச்சயமாயிற்று. தூகிகுமேடை, இரத்தக்கண்ணீர் போன்ற நாடக நூல்கள் இதன் தாக்கம் மலையக இளந்தலைமுறையினரிடையே ஒரு மாற்றத்தையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

இதனைத் தொடர்ந்து மலையக இலக்கிய வளர்ச்சியில் ஓர் அபரிமிதமான இலக்கிய விழிப்புணர்வு அறுபதுகளில் ஏற்பட்டது. இலக்கிய உலகில் புதுமைப் பார்வையும், புதிய வீச்சும் உதயமாகின. பல புதியவர்கள் அதிக உற்சாகத்துடன் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டனர். அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியைச் சேர்ந்த இரட்டையர்கள் என்று வர்ணிக்கப்படும், எப்போதும் இணைபிரியாத நண்பர்களான இரா.சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோரும் இவர்களுக்கு உந்து சக்தியாக விளங்கினார்கள். இவர்களின் வழிகாட்டலுடன் இளைய தலைமுறையினர் எழுத்துலகிற்குக் காலடி எடுத்து வைத்தனர். அதற்கு உறுதுணையாக கண்டி க.ப.சிவம் வெளியிட்ட மலயகத்தின் மணிக்கொடி என்றழைக்கப்பட்ட 'மலைமுரசு' சஞ்சிகை துணைநின்றது. இந்தக் காலகட்டத்தில் கடல் கடந்த இலக்கியப் போட்டி ஒன்றில்'கல்கி' சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் சிறுகதைக்குப் பரிசு செந்தூரனுக்குக் கிடைத்தது. 'உரிமை எங்கே' என்ற சிறுகதைக்குப் பரிசு கிடைத்தது. இது பலரின் பார்வையை மலையகத்தின் பக்கம் திருப்பியது. இதனைத் தொடர்ந்து பலர் மலையகச் சிறுகதைத் துறையில் ஆற்றல் மிகுந்த படைப்புக்களைத் தந்தார்கள். இவாகளை மலையக இலக்கியங்களும், சஞ்சிகைகளும், தேசிய தினசரிகளும் உற்சாகமூட்டி உரமிட்டு வளர்த்தன. மலையகச் சிறுகதைத் துறையில் அட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி ஆசிரியரான திருச்செந்தூரனைத் தொடர்ந்து ஹைலண்ட்ஸ் கல்லூரி மாணவர்களான சாரல் நாடன், பி.மரியதாஸ், எம்.வாமதேவன், வனராஜன், மு.சிவலிங்கம் போன்றவர்கள் நல்ல சிறுகதைகளை எழுதினார்கள்.

மலையக சிறுகதை முன்னோடி என்றும், மலையக சிறுகதைக்கு உருவம் சமைத்தவர் என்றும் போற்றப்படும் என்.எஸ்.எம்.ராமையா மலையக மண்வாசனை கமழும் நல்ல சிறுகதைகளைத் தந்துள்ளார். வானொலி நாடகங்களை எழுதிக்கொண்டிருந்தவர், சிறுகதைத் துறைக்கு அப்பொழுது தினகரன் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கலாநிதி கைலாசபதியால் கொண்டுவரப்பட்டவர். இவர் எழுதிய ஒரு கூடைக் கொழுந்து சிறுகதை இலக்கிய உலகில் பலரின் கவனத்தை ஈர்ந்தது.

"மூன்று ஆண்டுகள் ஒரு தோட்டத்தில் பணி புரிந்துவிட்டு, அந்த உலகத்திற்கு நாம் லாயக்கில்லை என்ற பெருந்தன்மையான முடிவோடு கொழும்புக்குக் கிளம்பினேன். மூன்று ஆண்டுக்குள் ஒரு முப்பது ஆண்டு வாழ்வையே வாழ்ந்து முடித்தது போன்றிருந்தது எனக்கு. அந்த மூன்று ஆண்டுகளில் அதன் நினைவுகளையும் மறக்கக் கூடிய ஏதாவது ஒரு மாற்றம் அவசியமாக இருந்தது. பிரதேச மனம் என்ற இலக்கிய தர்மம், ஈழத்து இலக்கிய உலகில் கால்பரப்பி நிற்று கொண்டிருந்த அந்த சமயத்தில் மலையகம் மட்டும் இன்றும் குரல் எழுப்பாது இருந்ததை என்னால் உணர முடிந்தது. இந்நிலையில இலக்கியத்திற்கு சத்தியமே அடிப்படையாக இருக்க வேண்டும் என்ற கருத்து என்னைக் கவர்ந்து கொண்டது. அந்த வேட்கையோடு எழுதிய முதற் சிறுகதை தான் "ஒரு கூடைக் கொழுந்து" என்ற பிரச்சனைக் கதை. அது ஏற்படுத்திய பரபரப்பைக் கண்டு எனக்கு வியப்பு அல்ல, பயம் தான் ஏற்பட்டது." என்கிறார் என்.எஸ்.எம்.ராமையா.

இவரது சிறுகதைகளைத் தொகுத்து பதுளை மு.வித்தியானந்தன் வைகறை வெளியீட்டின் மூலம் 1980ல் வெளியிட்டார். இத்தொகுதிக்குச் சாகித்திய மண்டலப் பரிசும் கிடைத்தது. "மலையகச் சிறுகதைக்கு உருவம் கொடுத்தவர் என மலையக சிறுகதை ஆசிரியர்களாலேயே பாராட்டப்படும் என்.எஸ்.எம்.ராமையாவின் ஒரு கூடைக்கொழுந்து சிறுகதைகளைப் படித்துப் பார்த்தால் அவைகள் மலையக உழைக்கும் மக்களின் வாழ்க்கையில் இருந்து முகிழ்ந்திருக்கின்றது. இவரது சிறுகதைகளில் துயரமான சோக சம்பவங்கள் இழையோடுகின்றன.

வாழ்க்கையின் சாரளமே சிறுகதை என தமிழ்ச்சிறுகதைகளின்

www.tamilarangam.net

முன்னோடியான புதுமைப்பித்தன் எடுத்துரைத்தார். அதற்கு இலக்கணம் வகுத்தாற் போல் "ஒரு கூடைக்கொழுந்து" சிறுகதைத் தொகுதியில் கதாசிரியர் ராமையா மனிதாபிமானத்தோடு பாத்திரங்களைப் படைத்திருக்கிறார். இச்சிறுகதைகள் மூலம் கடந்தகால மலையகத்தை நம்மால் தரிசிக்க முடிகிறது. இந்தச் சிறுகதையில் காணப்படும் பாத்திரங்கள், சம்பவங்கள் வாழ்வோடு வரலாற்றலோடு பின்னிப் பிணைந்து விட்டது. இத்தொகுதியில் தலைப்புக்கு உரித்தான "ஒரு கூடைக்கொழுந்து" சிறுகதையில் நாம் சந்தித்து உறவாடும் லக்ஷமி பாத்திரம் நாம் என்றைக்கும் மறக்கமுடியாத பாத்திரம். லக்ஷமிக்கு கை வேகமாக விழத்துவங்கியது. பங்குனி மாதப் பச்சை பார்ப்பதற்கே ஒரு அழகு. எழுத்து வெறி கொண்டவர்களுக்கு அது போதை தரும் ஒரு விளையாட்டு. இளந்தளிர் சடசடவென ஒடிந்து கொண்டிருந்தன. இப்படி லக்ஷமி தேயிலைக் கொழுந்து பறிப்பதை ஆசிரியர் சித்திரிக்கிறார்.

"வேட்கை" சிறுகதையில் ரங்கையா கிழவனின் ஆசை எப்படி நிராசையாகிறது. ஒரு கை தேர்ந்த கலைஞன் தன் காமிராவால் படம் பிடித்துக் காட்டுவதைப் போல காட்டுகிறார். "முழங்காலைப் பிடித்துக் கொண்டு படிகளில் ஏறி வந்த ரங்கையாக் கிழவன் கடைசிப் படியில் நின்று வாயால் ஊதிக் கொண்டான். பத்துப் பதினைந்து படிகள் அவன் ஏறியதில் அவனுடைய கிழட்டுக் கால்கள் வெடவெடவென்று நடுங்கின." இப்படி ரங்கையாவை வர்ணிக்கிறார். தன்னுடைய ஆசையை நிறைவேற்றத் தள்ளாத வயதிலும் மண்ணோடு போராடும் ரங்கையாக் கிழவன், காடு எரிந்தால் மழை வரும் என்ற நம்பிக்கைக்காக தான் பாடுபட்ட சேனையை எரித்து விடும் மாணிக்கம், கை விரல்களில் தோல் கிழிந்து ரத்தம் கசிய கொழுந்தெடுத்து தனது சத்தியத்தை நிலை நாட்டும் லக்ஷமி இப்படிப் பற்பல பாத்திரங்களையதார்த்த பூர்வமான கலைத்துவ வடிவங்களை கதைகளில் சந்திக்கிறோம். கடந்த கால் நூற்றாண்டுகளாக எழுத்துத் துறையிலீடுபட்ட என்.எஸ்.எம்.ராமையாவை எண்ணிப் பார்க்கையில் இருபதுக்கும் குறைவான சிறுகதைகளையே எழுதியுள்ளார். எண்ணிக்கையைப் பொறுத்தவடிரயில் குறைவானவை என்றாலும், தரத்தில் உயர்வானவை. இவரது "வேட்கை" என்ற சிறுகதை வாசகர் வட்டம் "அக்கரை இலக்கியம்" என்ற நூலில் இடம் பெற்றுள்ளதை இவரது "கோவில்" என்ற சிறுகதை ஜேர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "வேட்கை" சிங்களத்தில் வெளிவந்துள்ளது. மலையக மக்களின் வாழ்க்கையைக் கருவாகக் கொண்டுள்ள இக்கதைகள் அம்மண்ணுக்கேயுரிய சிறப்பான தன்மையுடன் உரையாடுகின்றன. மலையகச் சிறுகதைகள் பற்றிப் பேசும் போது, ஒரு காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் ராமையாவின் கதைகள் வரலாற்று முக்கியத்துவம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மலையக எழுத்தாளர்களின் ஆற்றலை உணர்ந்த தேசிய தினசரிகளான வீரகேசரி, தினகரன் ஆகிய நாளிதழ்கள் இனங்கண்டு வாய்ப்பளிக்கத் தொடங்கின. வீரகேசரி மலைநாட்டு எழுத்தாளர்களுக்கு ஒரு சிறு கதைப்போட்டியை 1962ல் நடத்தியது. இதுவே மலையக எழுத்தாளர்களை படைப்பிலக்கியத் துறையில் அதிக ஆர்வமும், அக்கறையும் காட்டத் தூண்டியது. முதலாவது சிறுகதைப் போட்டியில் தெளிவத்தை யோசப்பின் "பாட்டி சொன்ன கதை",சாரல் நாடானின் "கால ஓட்டம்", தங்கப் பிரகாசின் "காயம்" என்ற சிறுகதையும் முதல் மூன்று பரிசைப் பெற்றது. இந்தச் சிறுகதைப் போட்டியினை நடத்துவதற்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் இரா.சிவலிங்கம், வீரகேசரித் துணை ஆசிரியர்களான எஸ்.எம்.கார்மேகம் பதுளை பெரி. கந்தசாமி, பொஸ்கொஸ் கருப்பையா ஆகியோர்கள்.

அந்த முதல் போட்டியிலேயே நமக்கென்று நடத்தப்படுகின்ற போட்டி என்ற உணர்வோடு நூற்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் பங்குபற்றினர். அதன் தொடர்ச்சியான இரண்டாவது மலைநாட்டுச் சிறுகதைப் போட்டியிலும் ஏராளமான எழுத்தாளர்கள் கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தனர். மூன்றாவது மலைநஏட்டுச் சிறுகதைப் போட்டியில் பரிசும் பாராட்டும் பெற்றவர்களை சேர்தது இருபது எழுத்தாளர்கள் வரை இந்த ஐந்தாண்டுகளில் மலை நாட்டு எழுத்தாளர்களாகப் போட்டிகள் மூலம் அறிமுகமாகி இருக்கிறார்கள். போட்டிகள் மூலம் என்று எழுதுவதற்குத் தனியான காரணம் உண்டு.

மலைநாட்டிலும் சிறுகதை எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதை இலக்கிய உலகு அறிய ஆரம்பித்தது. போட்டிகளில் கலந்து கொண்டு அவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொண்ட போது தான், பத்திரிகைகளை நம்பி மாத்திரமே சிறுகதைகளை நிர்ப்பந்தத்தில் வைத்திருக்கும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் பத்திரிகைகளின் போதிய ஆதரவு இல்லாமல் போனாலும் , தங்களை இனங் காட்டக் கூடிய அளவுக்குக் கிடைத்த சிறிய வாய்ப்புக்களையும் மலைநாட்டு எழுத்தாளர்கள் பாராட்டுக்குரியவர்களாகின்றனர். இப்பிரிசு சிறுகதைகள் ஒன்பது "கதைக்கனிகள்" என்ற பெயரில் நூலாக 1971ம் ஆண்டு வெளிவந்தது.

வீரகேசரிச் சிறுகதைப் போட்டிகள் மூலம் பரவலாக அறியப்பட்ட தெளிவத்தை யோசப்பின் சிறுகதைகள் "நாமிருக்கும் நாடே" என்ற தொகுப்பாக வெளிவந்தது. 1979ம் ஆண்டிற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. மலையக எழுத்தாளர்களில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர். இவரின் சிறுகதைகள் கடல்கடந்த தமிழகத்து "கலைமகள்" சஞ்சிகையிலும் இடம் பிடித்தது. அது ஊன்றுகோல், பாவசங்கீர்த்தனம் ஆகியன.

அறுபதுகளில் இலக்கிய விழிப்புணர்வுக் கூட்டத்தில் அரும்பிய வெளிவத்தை யோசப் இன்று ஈழத்துச் சிறுகதை உலகில் தனித்துவமான இடத்தைப் பிடித்திருக்கிறார்.இவரது கதைகளின் பகைப்புலன், கதை சொல்லும் திறன், வாழ்க்கை பற்றிய இவரது பிரத்தியேகமான பார்வை, கூர்மையான அவதானிப்போடு கூடிய நிகழ்ச்சிக் கோர்வை, கதைகளில் உணர்வுக் கோலத்திற்கேற்றதான தேர்ந்த சொற்பிரயோகம் என்பன இவான் தனித்துவமான எழுத்தின் அடிப்படைகளாகும். மலையக வாழ்க்கையில் சாதாரணமாக காணத்தவறிவிடுகிற சின்னஞ்சிறு அம்சங்களையும் கோடிட்டுக் காட்டுகிற லாவகம் ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களில் இவரை முன்னணிக்குக் கொணர்கிறது.

www.tamilarangam.net

இவரின் எழுத்தின் தரிசனம் பற்றி அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், இவர் வீச்சும் வளமும் மிக்க எழுத்தாளர் என்பதில் ஐயமில்லை.

“பெரிய கங்காணிக்குசாராயம் வாங்கிக் கொடுத்தாவது காலியாகும் காம்பிராவை பெற்றுக் கொள்ளத் துடியாய்த் துடித்தான். இறுதியில் தன் கை மீறிப்போவதைப் பார்த்து திகைத்துப் போவதை “மீன்கள்” கதை அற்புதமாகச் சித்திரிக்கிறது. இரண்டு நாளாவது கிழவியின் உயிரை நிறுத்தி வைத்து, அவளது ஓய்வுப் பணத்தைப் பெற்றுவிட ஓடித்திரிந்த வீரன் விக்கித்போய் நின்றான். பழம் விழுந்தது கதையில், இஸ்ரோரிலிருந்து இரவிரவாகத் தேயிலைத் தூள் மூட்டை மூட்டையாகக் கடத்தப்படும் நிலையில் குடித்துப் பார்க்க எடுத்த நாலு அவுன்ஸ் பெனிங்ஸ் நாளெல்லாம் நாயாகப் பாடுபடும் அவனை நடு வீதியில் நிறுத்திவிடுகிற முரண்பாட்டின் அவலத்தை “னல்” அநாயசமாகச் சித்திரிக்கிறது. இந்த சமூக அமைப்பிற்குள் நின்ற பிரயாசைகள் இறுதிக் கணக்கெடுப்பில் தோல்வியில் முடிகின்றன. ஏமாற்றப்பட்ட திகைப்பில் ஆழ்ந்து போகின்ற கதாபாத்திரங்கள் தன்னந்தனியாளாகும்படி முறையின் விளிம்பில் நமக்கு தரிசனம் தருகிறன.”- என்கிறார். நாமிருக்குக்ஷ நாடே முன்னுரையில் மு.நித்தியானந்தன்.

வீரகேசரிச் சிறுகதைப் போட்டி மூலம் அறிமுகமான எழுத்தாளர் சாரல் நாடன் இவர் ஒரு தொகுதி போடும் அளவுக்கு சிறப்பான சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரை இன்றய இளைய தலைமுறையினர் ஒரு ஆய்வாளராகத் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு இவரை ஒரு படைப்பிலக்கியவாதியாகத் தெரியாது. அறுபதுகளில் இவர் தினசரி, வாரமஞ்சரியில் எழுதிய “எவளோ ஒருத்தி” என்ற சிறுகதையின் மூலம் பலரின் பார்வைக்கு உள்ளானார். இந்தச் சிறுகதையைப் பிரசுரித்த பேராசிரியர் கைலாசபதி, அவரது ஆற்றலை இனங்கண்டு, தொடர்ந்து எழுதும்படி தம் கைப்படக் கடிதம் எழுதினார். என்.எஸ்.எம்.ராமையாவும், சாரல் நாடனும் மலையக இலக்கியத்தின் நம்பிக்கைகள் என்று சி.வி.வேலுப்பிள்ளையிடம் கூறியுள்ளார். இந்தக் கதையைப் பாராட்டி டாக்ரர் நந்தி, ரசிகமணி கனக செந்திநாதன் ஆகியோர் கடிதம் எழுதியுள்ளார்கள். எவளோ ஒருத்தி எனும் சிறுகதையில் தொழிலாளர்களுக்கிடையே அவ்வப்போது எழுகின்ற போராட்டங்களும், கிளர்ச்சிகளும், மறுதளிப்புகளும் இதன் அடிநாதமாக ஒலிப்பதைக் காணலாம். சாரல் நா னின் பிரதேச ஊர்வலம்(தினகரன் 1963) ஆறுகள் பின்னோக்கிப்பாய்வதில்லை(சிந்தாமணி 1973) சுயகௌரவம்(தினகரன் 1964) ஆகிய சிறுகதைகள் சிறப்பித்துக் கூறலாம்.

இன்னொரு மிகமுக்கிய படைப்பாளி மு.சிவலிங்கம். மலையக எழுத்தாளர்கழில் அங்கிதச் சுவையுடன் கூடிய நடை இவரது கதைகளில் விரவிக்கிடப்பதைக் காணலாம். அறுபதுகளில எழுதத் தொடங்கிய இவர், இருபத்தைந்து சிறுகதைகளுக்கு மேலாக எழுதியுள்ளார். இவரின் சிறுகதைத் தொகுதி மலைகளின் மக்கள் என்ற மகுடத்தில் வந்துள்ளது. இந்தத் தொகுதி 1991ம் ஆண்டுக்குரிய சாகித்தியப் பரிசைப் பெற்றுள்ளது.

மற்றும் குறிப்பிடக் கூடிய மூன்று எழுத்தாளர்கள் மாத்தளை சோமு, மலரன்பன், மாத்தளை வடிவேலன். மாத்தளை நகருக்கே பெருமை தேடித்தந்த படைப்பாளிகள். இவர்கள் ஒவ்வொருவரின் மூன்று கதைகளாக மொத்தம் ஒன்பது கதைகள் கொண்ட தொகுதி “தோட்டக் காட்டினிலே” (1980) என்ற பெயரில் வெளியாகியுள்ளது.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக தேசிய இலக்கியக் கோட்பாடு இயங்க வடிவம் பெற்றமையும், அவ்வுணர்வின் விளைவாகவும், வெளிப்பாடாகவும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அவ்வப்பகுதி மண்வாசனை கமழும் ஆற்றல் மிக்க ஆக்கங்கள் உருவாகி வந்துள்ளமையும், இவற்றின் உடனிகழ்ச்சியாக மொழி நடை இலக்கிய உத்திகள் முதலியவற்றிலே குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ளமையும் இப்பொழுது இலக்கிய வரலாறாகி விட்டன. பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புகளில், பொருள் தோட்டப்பயிர்ச் செய்கைக்கு களமாக உள்ள மலை நாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பனவற்றிற்குத் தனியிடமுண்டு. (தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெ.முருகபூபதி

ரோகம்



இலங்கையில் நீர் கொழும்பில் பிறந்து வாழ்ந்து அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்தவர். 1972ல் எழுதத் தொடங்கி முதல் சிறுகதை அதே ஆண்டில் மல்லிகை'யில் வெளியானதையடுத்து இலக்கிய உலகில் பிரவேசம், வீரகேசரி'யில் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். 1976ல்முதல் சிறுகதைத் தொகுதி சுமையின் பங்காளிகள்' சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. சமாந்தரங்கள்(சிறுகதைகள்), சமதர்ம பூங்காவில்(சோவியத் பயணக் கதை) ஆகியன இதர நூல்கள். எழுத்துப்பணியுடன் சில பொதுப்பணிகளையும் சுமப்பவர். அவுஸ்திரேலியாவில் இயங்கும் தமிழ் அகதிகள் கழகம், இலங்கை மாணவர் கல்வி நிதியம், தமிழர் ஒன்றியம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினர்.

மல்போர்ன் விமான நிலையத்தில், திருஞானசம்பந்தர் தரையிறங்கும் போது பகல் 12 மணியும் கடந்து விட்டது. சுங்கச் சோதனைகள் முடித்து வெளியேவர சீதளமான காற்று வருடியது.

வெளியே காத்து நின்ற மகள் சுபாஷினியை அடையாளம் கண்டு கொள்ளச் சிரமப்படவில்லை. கண்டதும் பயண அலுப்பும் கரைந்துவிட்டது.

"அப்பா...."

"சுபா...."

மகளை அணைத்துக் கொள்கிறார். சுமார் பத்தாண்டுகளுக்குப் பின்னல்லவா சந்திக்கிறார். செல்லமாக வளர்த்த ஒரே செல்வமகள். அவர் கண்கள் பனித்துவிட்டன. சுபாஷினிக்கும் தான்.

அம்மாவும் வந்திருந்தால்' என்ற ஏக்கம் அவளையும், அவவும் வந்திருந்தால்' என்ற பரிவுத் துயர் அவரையும் வாட்டியிருக்க வேண்டும்.

சுபாஷினியின் அம்மா திருஞானசம்பந்தரின் அருமைத் துணை மறைந்து மூன்றாண்டுகளும் ஓடி விட்டன.

சுபாஷினியால் தாயின் இறுதிச் சடங்கிற்குப் போக முடியவில்லையுத்தம்-தாமதமாகக் கிடைத்த தகவல்! அப்பாவுககு ஆறுதல் கடிதம் தான் அவளால் எழுத முடிந்தது.

வீட்டில் ஒரு வாரம் அழுது கொண்டிருந்தாள். தேநீருக்காக மாத்திரம் சமையலறையில் மினக்கெட' வேண்டியிருந்தது. குடும்ப நண்பர்களின் வீடுகளில் இருந்து துக்கவிசாரிப்பு'களுடன், பல வகைக்கறிகளுடன் உணவும் வந்தது; மிஞ்சியது!

உள்ளூர் வானொலிகளில் மரண அறிவித்தல் ஒளிபரப்பச் செய்து, கோவிலில் அம்மாவின் பெயரில் சாந்தி' பூசையும் வைத்து, வீட்டில் பெரிய' விருந்தும் கொடுக்க மாத்திரம் தான் சுபாஷினியாலும் அவள் கணவனாலும் முடிந்தது.

சுபாஷினியின் அழகான புதிய வீட்டில் சுவாமி அறையில் அம்மா' படமாகக் காட்சியளிக்கிறா- சந்தன மாலையுடன். இண்டியன் ஷொப்'பில் வாங்கப்பட்ட மாலை.

"எங்க..ரகு வரயில்லையே...பிள்ளைகள்"- திருஞானசம்பந்தர் ஆவலுடன்கேட்டார்.

"அவருக்கப்பா இண்டைக்கு ஒரு பார்ட்ரைம்' வேலை; மகன் சுதனுக்கு சுவிம்மிங் புரோகிராம்'... மகளுக்குத் ரமிழ் கிளாஸ்'."

www.tamilarangam.net

சம்பந்தருக்குக் கேட்கக்..கேட்க
பெருமையாக இருந்தது. பேரன்
வளர்ந்திருப்பதும், நீந்தச் செல்வதும்
தான் பெற்ற மகள்-தான் பெற்ற
மகள்-தமிழை மறக்காமல்-தன்
பேத்தியைத் தமிழ் வகுப்புகளுக்கு
அனுப்புவதும் அவருக்கு மன
நிறைவைத் தருகிறது.
இந்த அற்புதங்'களைப் பார்க்க
அவளுக்குப் பாக்கியமில்லாமல்
போய்விட்டதே'-பெருமூச்சை
உதிர்க்கிறார்.
அப்பாவின் பயணபேக்'
பொதிகளை ரொலி'யில் வைத்துத்
தள்ளியவாறு, அப்பாவுக்கு கார்
பார்க்கை' வழிகாட்டி அழைத்து
வந்தாள் சுபாஷனி.
"நடந்து போகிற
தூரமே....இல்லாட்டி...டாக்ஸி ஏதும்
கூப்பிடுவமே..?
"என்னப்பா...கார்...இருக்குக்...காால
போகலாம்."
"ஓமோம்...மறந்திட்டன்...நீயும்
இப்ப...கார் ஓடுறதாக...எழுதினது
ஞாபகம்...இந்த
சந்தோஷத்தையெல்லாம் பார்க்கக்
கொடுத்து வைக்காத அந்தப்
பாவியை
நினைச்சால்...வாழ்க்கையே
வெறுத்துப் போகுது சுபா..."
"சரி...சரி...கவலைப்படாதீங்க
அப்பா...எல்லோரும் ஒரு நாளைக்கு
அம்மா போன இடத்திக்கு போகப்
போகிறனாங்கள்தானே...முன்னால
ஏறுங்க"
கார் டிக்கியைத் திறந்து பொதிகளை
வைத்து மூடி விட்டு அப்பாவுக்காகக்
கதவு திறந்து தானும் ஏறி ஸ்ராட்'
செய்தாள்.
அவள் காரில் ஏறிய பாங்கையும்
பெல்ட்' அணிந்து ஸ்ராட் செய்த
லாவகத்தையும் அவர் வைத்த கண்
வாங்காமல் பார்த்தார்.
"அப்பா...பெல்டை போடுங்கோ..." -
பெல்ட் அணியும் முறை தெரியாமல்
சங்கடப்பட்டுக்
கொண்டிருந்தவருக்கு அவளே
பொருத்தி விட்டாள்.
"பிளேன்லயும்...அந்த ஏயார்
ஹோஸ்ரஸ்' பெட்டையள்தான்
பொருத்தி விட்டவளவை."
சுபாஷனி களுக்' எனச் சிரித்தாள்.
"உங்கட பேரப் பிள்ளைகளுக்கு
இதைச் சொல்லிச் சிரிக்க
வேணுமப்பா."
"இதில சிரிக்கிறதுக்கு என்ன கிடக்கு
பிள்ளை"- என்றவரும் சிரித்தார்.
"அப்பா...இங்க...பெல்ட்
அணியாமல் காரில போக முடியாது.
பைன்' தான் கட்ட வேணும்.
முன்னாள் பிரதமர் கூட ஒரு தடவை
பைன்' கட்டியவர் தான்."
அவுஸ்திரேலியாவின்
சட்டங்களையும் ஒழுங்கையும்
விதிமுறைகளையும் அப்பாவுக்கு
விஸ்தாரமாக விளக்கிக்கொட்டே
வந்தாள். இடையிடையே, ஊர்
புதினங்களையும் கேட்டுக்
கொண்டாள்.
அவுஸ்திரேலியாவில் இறங்கியதும்,
சொல்ல
நினைத்ததை...சொல்வோமா...வேண்டாமா
எனத் தீர்மானிக்க
இயலாமல்...இப்ப...என்னத்துக்கு
ஆறுதலாகப் பக்குவமாகச்
சொல்லலாம்" என மனதிற்குள்
அடக்கிக் கொண்டார்.
சொல்ல நினைத்தது' நெஞ்சுக்குள்
நெருடிக்கொண்டேயிருக்கிறது.
முக்கால் மணி நேரத்தில் வீட்டுக்கு
வந்தாயிற்று.
"இண்டைக்கு ஹொலிடே'
எண்டதால இவ்வளவு கெதியா
வந்திட்டம் அப்பா...
இல்லையெண்டால் ஒரு
மணித்தியாலத்திற்கும் மேல்
எடுக்குமப்பா... இன்றைக்கு...ட்ரபிக்'
குறைவு."
மகளின் தகவல்கள் அவருக்குச்
சுவாரிஸ்யமான கதைகளாகவே
தோன்றின.
"அடடா... 1.30மணியாகப்
போகுது...அப்பா... இருந்து
கொள்ளுங்கோ...சரண்யாவுக்கு
கிளாஸ்'
முடிஞ்சிருக்கும்...போய்...கூட்டியரவேணும்.
இன்னும் கொஞ்ச நேரத்தில அவரும்
வந்திடுவார். சுதன் ஸ்வும்மிங்கா'ல
வருவான். வந்ததும் ரி.வி.க்கு
முன்னால
உட்கார்ந்திடுவன்...முதல்ல போய்
குளிச்சிட்டு வந்து உட்காரச்
சொல்லுங்க..."
மகள் வேகமாகச் சொல்லிக்
கொண்டே போர்ட்டிக்கோவில்'
நிறுத்தியிருந்த கார நோக்கி
ஓடினாள்'
"மகள்...முதல்ல என்ர பேக்கை
எடுத்துத் தந்திட்டுப் போ... உடுப்பு
மாற்ற வேணும்"- அவர்
பரபரப்படைந்தார்.
"ஓமப்பா... வெறி சொறி ... சொறி
மறந்திட்டன்"
டிக்கியைத் திறந்து பொதிகளை
எடுத்துக் கொதுத்து, காரை வேகமாக
ரிவர்ஸ்' செய்து, தெருவில் விரையும்
மகளைப் பார்க்க அவருக்கு
வியப்பாக இருக்கிறது.
என்ன... சுறுசுறுப்பு... என்ன
வேகம்... ஊரில்... அவளிடம்
இப்படியொரு துடிப்பை' அவர்
கண்டதில்லை. எதற்கும் அம்மாவின்
உதவி தேடிவப்படும்.
சோம்பேறியாக வாழ்ந்த செல்ல...
செல்வ மகள் இன்று... இங்கு...
இப்படி... ஏன்...?
இவளும் இப்போது அம்மா'வாகி
விட்டமையால் ஏற்பட்ட மாற்றமா...
அல்லது வாழ்க்கையே இங்கு..
இப்படித்தானா... நேரத்தைப்
பார்த்து ஓடும் சீவியம்.
பத்தாண்டுகளுக்குப் பின்பு
அவளையும் குடும்பத்தையும் பார்க்க
வந்த இடத்தில், ஒரு சொட்டுத் தேநீர்
தயாரித்துத் தர நேரமில்லாமல்,
வந்ததும் வராததுமாக ஓடுகிறாளே...
மருமகன் ரகு வீட்டிலிருந்திருப்பின்...
இவள் ஏன் இப்படிப் பதைபதைக்க
ஓட வேண்டும். அவருக்கு
வேலையாம்... பார்ட்ரைம்'
வேலையாம்... லீவு நாளிலும்... அது
என்ன வேலை...?
திருஞானசம்பந்தர் யோசனையில்
ஆழ்ந்தார்.
வீட்டில் அமைதியின் ஆட்சி; இதைக்
கலைக்க வெளியே போயிருக்கும்
மகளும் மருமகனும்
பேரப்பிள்ளைகளும் வர வேண்டும்.
அழகான வீடு. அலங்காரப்
பொருட்கள்- உருவங்கள்- மலர்க்
கொத்துகளைத் தாங்கும் பெரிய
சிறிய வாஸ்'கள் வெண்கலத்திலும்
மட்பாண்டத்திலும்.
சுவரினதும், கார்
பட்டி'(தரைவிரிப்பு)னதும்
நிறத்துக்குப் பொருத்தமான சோபா
செட்.'
வீட்டினுள்ளே இதமான வாசனை.
வாசல் கதவைத் திறந்ததும் " என்ற
எழுத்துக்கள், கூப்பிய கரம்
பதிக்கப்பட்ட வெண் கலத்தகடு முன்
சுவரில் எதிர் கொண்டு
வரவேற்கிறது..
அருகே பரதம் ஆடும்
பருவமங்கையின் அழகுஏன முழு
உருவ வண்ணப்படம். வட இந்தியப்
பெண்ணாக இருக்க வேண்டும்.
ஹோலின் சுவரில் இடது புறம்
தேசியத் தலைவரும்- வலது புறம்
சாயிபாபாவும் கம்பீரமாகக்
காட்சியளிக்கின்றனர். இரண்மே
வண்ணப்படங்கள்.
ஆனால் இவ்விதம் இரண்டும்
ஓரிடத்திலிருப்பது
பொருத்தமற்றதாக அவருக்குத்
தோன்றியது.
ஏன் இப்படி.... மருமகனிடம் தான்
கேட்க வேண்டும்.
ஆதரவாளனாகவும் பக்தனாகவும்
இருக்கக் கூடும்.
சீதன வீடும் வளவும் கொடுத்து
விட்டுத்தான் பறப்பட்டேன் என்று
சொன்னால் ஆதரவை மாற்றப்
போகிறாரா... இல்லை...இதல்லாம்...
ஒரு... பஷன்'
ரெலிபோன்' ஒலிக்கிறது.
எங்கிருந்து...அவர் சுற்றும் முற்றும்
பார்க்கிறார். அடுத்த விசாலமான
அறை... என்ன... அறை...
பெமிலி ரூம்' - ஒரு மூலையில் ரி.வி.'

- டெக் சகிதம் , மறுபக்கம் சமையலறை - பிரிஜ்', மைக்ரோஅவன்', சாப்பாட்டு மேசை... சுத்தமாகக் கழுவித் துடைக்கப்பட்ட சிங்... கேஸ் அடுப்பு... வோல்அவன்'... சுபா வீட்டை நன்றாகத்தான் பராமரிக்கின்றாள்.
சம்பந்தருக்கு உள்ளூரப் பெருமையாக இருக்கிறது.
சுவரில் பொருத்தியுள்ள ரெலிபோனின் ரிசீவரை எடுக்க ஒலி' நின்றது.
/ஹலோ...ஹூ... ஈஸ் ஸிபீக்கிங்..."
(சம்பந்தருக்கு ஆங்கிலமும் பேசத் தெரியும்)
"மாமாவா... வந்திட்டியளா... எங்க... சுபா...?" மருமகன் ரகுநாதன் மறுமுனையிலிருந்து பேசுகிறான்.
"யார்... ரகுவோ... சுபாஷனியும் நானும் இப்பத்தான் வந்தனாங்கள்... அவ... பேத்தியை கூட்டிவரப் போயிருக்கிறா... ஏதோ... கிளாஸாம்..."
"சுதன் நிற்கிறானோ..."
"அவனும் இல்லை... எங்கயோ நீந்தப் போயிட்டானாம்... இன்னும் வரயில்லை..."
"அட அப்ப மாமா மாத்திரமே... தனிய நிக்கிறியள்... நான் இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவன்... இருங்கோ... எப்படிப் பயணமெல்லாம்..?"
சம்பந்தர் இடுப்பில் கையூன்றிக் கொண்டு சொல்லத் தொடங்கினார்.
ரகு நாதன் மறு முனையில் இருந்து "யெஸ்... யெஸ்..." என்று மாத்திரம் சொல்லி அலுத்திருக்க வேண்டும்; அல்லது வேலையை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடர வேண்டிய அவசரம் இருந்திருக்க வேண்டும்.
"மாமா... எல்லாம்... நான் வந்த பிறகு ஆறுதலாகக் கதைப்பம்... எனக்கு இன்னும் கொஞ்ச வேலை கிடக்கு... ஓகே..."
"என்ன வேலை" என்று அவர் கேட்பதற்கிடையில் மறு முனை துண்டிக்கப்பட்டமை அவருக்கு ஏமாற்றம் தான்.
பாவம் மருமகன். குடும்பத்திற்காக அயராமல் லீவு நாட்களிலும் உழைக்கிறார். மருமகனின் உபயத்தில் தானே... இப்படியொரு உற்சாகமான பயணம். சிங்கப்பூரில் உலாத்தல்- ஷொப்பிங்' மகள், மருமகன், பேரப்பிள்ளைகளைப் பார்க்கப் புறப்பட்டு வந்த பயணம்.
சம்பந்தர் உடை மாற்றி சிரமபரிகாரங்களை முடித்துக் கொண்டார்.
உடைமாற்றுவதற்கு எந்த அறைக்குள் போவது என்பதில் சற்று யோசனையும் தடுமாற்றமும். முடிவில் தனியறையிலேயே மாற்றிக் கொண்டார்.
பெற்ற மகளின் வீடாயிருப்பினும் - அதன் அமைப்பும் நவீனமான சூழலும் அந்நிய இடத்தில் நிற்கும் உணர்வையே ஏற்படுத்துகிறது.
தனது வருகையை எதிர்பார்த்து தனக்குத் தங்குவதற்கென்று மகளும் மருமகனும் தனியாக ஓர் அறையை ஒதுக்கியிருக்கலாம்...
ஆனால்... எந்த அறை? அவரால் நிதானிக்க முடியவில்லை.
இப்ப என்ன அவசரம்'- பேக்கை மீண்டும் ஷோலுக்கு எடுத்து வந்து சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்த பரிசுப் பொருட்களை தனியாக எடுத்து வைத்தார்.
மருமகனுக்காகக் கொழும்பு புறக்கோட்டையில் ஒரு பட்டிக் சாரம்' வாங்கியிருந்தார்.தனக்கும் ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். அதனையே இப்போது குளித்த பின்பு எடுத்து அணிந்து கொண்டார்.
பேரன் சுதனின் வயதையும் உயரத்தையும் மனதிற்குள் அனுமானித்து சிங்கப்பூரில் ஒரு சூட்' வாங்கியிருந்தார். அது பேரனுக்கு அளவாக இருக்குமா என்ற கவலையும் மனதை அரித்தது.
பேரன் அவுஸ்திரேலியாவுக்குப் பெற்றோருடன் புறப்படும் போது தவ்வல் குழந்தை. பின்பு அவ்வப்போது வந்த பிறந்த நாள் பார்ட்டி' வண்ணப் படங்கள் பார்த்தே... பேரனின் வயதையும் உருவத்தையும் உயரத்தையும் அவர் தீர்மானித்தார்.
பேத்தி - அவளை இனித்தான் பார்க்கப் போகிறார்..
எலிலோரையும் விமான நிலையத்தில் எதிர்பார்த்தார்; ஏமாற்றம்தான்! மகளிடம் காட்டிக் கொள்ளாது மறைத்தார்.
பேத்தி அவுஸ்திரேலியாவில் பிறந்தவள்.செய்தியும் தாமதமாகத் தான் மெல்போர்ன் ஆஸ்பத்திரி'யில் எடுக்கப்பட்ட வண்ணப்படத்துடன் வந்தது. பிறகு பிறந்த நாள் படங்கள் வந்தன. ஊரில் மின்சாரம் இல்லாமையால் தானோ என்னவோ மகள்... பிறந்தநாள் கொண்டாட்ட வீடியோ கஸற்' அனுப்பவிலலை. அனுப்பியிடிந்தால், ஜெனரேட்டர்' வைத்திருப்பவர்களின் உதவியால் பார்த்து ரசிக்க முடிந்திருக்கும்... இனியென்ன... கவலை..? இங்கு ஆறுதலாக யாவும் அமைதியாக உற்சாகமாகப் பார்க்கலாம் தானே!
மனதில் தெம்பு பிறந்தது.
அவுஸ்திரேலியாவுக்குப் புறப்பட்ட அயலூர்வாசி ஒருவர் மூலம் பேத்திக்காகப் புத்தாகச் செய்து கொடுத்தனுப்பிய மோதிரத்தை பேத்தி இப்பொழுதும் அணிந்து கொண்டிருப்பாளா?
இதென்ன நினைப்பு... அவள் வளர்ந்திருப்பாள்... இன்னுமா குழந்தை... ரமிழ் கிளாஸிக்கும்' போகிறாளாம்.
தன் சிந்தனைகள் மீது அவருக்கே சிரிப்பு வந்தது.
மனைவி மறைந்த பின்பு அவருக்கு எஞ்சியுள்ள ஒரே சந்தோஷம் இந்த இரண்டு பேரப்பிள்ளைகளும் தான்.
ஊரில், வெளிநாடுகளுக்குச் சென்ற - வெளிநாடுகளில் பிறந்த பேரப்பிள்ளைகளைப் பார்க்கக் கொடுத்து வைக்காமல் - கதுதங்களையும் அவற்றுடன் வரும் வட்டப்படங்களையும் காத்திருந்து பெற்று அகம் மகிழ்ந்து, மழலைக் குரலைக் கேட்டு இன்புற முடியாமல் ஏங்கித் தவித்து யுத்த அறிவுகளில் மரணித்துப் போன ஆத்மாக்களுக்கு நேர்ந்த கதி தனக்கும் நேர்ந்துவிடக் கூடாது... அதற்கு முன்பு ஒரு தடவையாவது போய் வந்துவிட வேண்டும் - என்று அவுஸ்திரேலியா தூதகத்தில் பல தடவை கால்கடுக்க நின்று பெற்றுக் கொண்ட இரண்டு மாத விஸா'வில் புறப்பட்டவர் சம்பந்தர்.
கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது.
ஓடி வந்து வாசல் கதவைத் திறந்தார்.
சுபாஷனி இரண்டு பிள்ளைகளுடனும் வருகிறாள்.பேரனும் பேத்தியும் அடையாளம் தெரிய முடியாதபடி வளர்ச்சி. பேத்தியின் கண்கள் அவரைக் கலந்தன.
"அம்மாவைப் போல இருக்கிறாள்... உன்ர அம்மாவுக்கும் கண் இப்படித்தான்... அவள் தான் திரும்பவும் உன்ர வயிற்றில வந்து பிறந்தாவோ..." -சம்பந்தர் உற்சாகம் மேலிடச் சொல்கிறார்.
சரண்யா அம்மப்பாவை விழித்து விழித்துப் பார்க்கிறாள்.
சுதன் அலட்சிய புன்னகையுடன் "ஹவ்... ஆர்... யூ.. கிராண்ட்பா..." — என்றான்.
சம்பந்தர் பதிலேதும் சொல்லாமல் பேரப்பிள்ளைகளை அணைத்து முத்தமிட்டார்.
கிராண்ட்பா, "குட்... தாங்ஸ்" - பதிலுக்குச் சொல்லாதமை சுதனுக்கு ஏமாற்றமாய் இருந்திருக்க வேண்ருடும்... அவன் உள்ளே போய்விட்டான்.
"எப்படியப்பா வீடு... குளிச்சனீங்களே... பிளைட்ல'யும் வடிவாச் சாப்பிட்டிருக்கமாட்டியள்... பேரப்

www.tamilarangam.net

பிள்ளைகளுடன் கதைச்சுக் கொண்டிருங்கோ... ஒரு மணித்தியாலத்தில் சமைச்சுப் போடுவன்..."
மகள் மீண்டும் துரிதமானாள்.

*　　*　　*

மாலையில் மருமகனின் குடும்ப நண்பர்கள் என்ற அறிமுகத்துடன் சில குடும்பங்கள்' வந்தன. ஹோல் நிரம்பி விட்டது.
சாப்பாட்டு மேசைக் கதிரைகளும் ஹோலுக்கு வந்து விட்டன.
சுபாஷனி சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருக்கிறாள்.
வந்த குடும்பத்துப் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் விளையாடத் தொடங்கிவிட்டமையால், அவர்களுடன் கதைத்துப் பொழுது போக்கும் சந்தர்ப்பமும் சம்பந்தருக்குக் கிட்டவில்லை.
வந்தவர்கள் யாவரும் சம்பந்தரிடம் ஊர்ப்புதினம் கேட்பதற்காகவே வந்திருப்பதாகத் தோன்றியது.
உரையாடலில், அவருக்குத் தெரியாத பல விடயங்கள் இவர்களுக்குத் தெரிந்து இருக்கிறது! இவர்கள் அறியாத - அறியமுடியாத பல தகவல்கள் அவரிடமிருந்தன.
சுபாஷனி வந்தவர்களை உபசரித்தாள். பிஸ்கட், கட்லட், ரோல்ஸ், கேக் யாவும் வந்தன.
அவற்றுடன், ஊர் புதினங்களும் அரசியல் கலப்படமுடன் பரிமாறப்பட்டன.
பருவகாலம், விலைவாசி உயர்வு, பொருள் தட்டுப்பாடு, பயணத்தில் எதிர்படும் கெடுபிடிகள், ஷெல்லடி, குண்டு வீச்சு, திருவிழாக்கள், கலியாண வீடுகள், போக்குவரத்து, மரணங்கள் மலிந்த வாழ்வு.. யாவும் தாராளமாக அலசப்பட்டன.
கருத்து முரண்பாடுகளும் தலை காட்டின. ரகுநாதன் பேச்சுக்களைத் திசை மாற்றிக்கொட்டிருந்தான்.

"மாமா... இவர்... எங்கட... நல்ல நண்பர். இங்குள்ள பல சங்கங்களுடன் இவருக்கு நிறைய தொடர்புகள் இருக்கு... எல்லாச் சங்கங்களையும் ஒரு குடை'க்குக் கீழ் கொண்டு வருவதற்கும் பிரயாசைப் படுகிறவர்... கன்பரா'வில் நடந்த மனித உரிமைகள் கருத்தரங்குகளிலும் பேசியவர்... உங்களிடமிருந்து ஒரு பேட்டி' எடுத்து இங்குள்ள வானொலியில் ஒலிபரப்ப விரும்புகிறார்..." - என்றான் ரகுநாதன்.

"நான்... என்னத்தைப் பேசக்கிடக்குத் தம்பி... எல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சவை தானே சொல்ல வேணும்... நான் இஞ்ச... வந்ததே... என்ர பேரப்பிள்ளைகளைப் பார்க்கத்தான்... எப்படியும் இரண்டொரு மாசத்தில போக வேணும்... நான் திரும்பி வரமாட்டன் எண்டு நினைத்து மகளின்ர சீதன வீட்டையும் வளவையும் எடுத்துப் போட்டான்கள்... திரும்பி வருவன்' என்று எழுத்தில கொடுத்திட்டுத்தான் வந்தனான். ஒரு சங்கதி தெரியுமே... அவங்கள் மாத்திரம் இல்ல... கொழும்பில்... அவுஸ்திரேலியா எம்பஸி' கூட நான் திரும்ப மாட்டன் எண்ட சந்தேகத்திலதான் விஸா' தருவதிலும் வருடக்கணக்காக இழுத்தடிச்சாங்கள். இப்ப... நாங்கள் வெளியில புறப்படுவதாயிருந்தால்... எல்லா இடத்திலும் விஸா' எடுக்கத்தான் வேணும்." என்றார் சம்பந்தர். சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன. வீட்டைக் கொடுத்து விட்டுத்தான் புறப்பட்டிருக்கிறார் என்ற உண்மை அப்போது தான் மகளுக்கும் மருமகனுக்கும் தெரிந்தது.
வந்தது முதல் நெஞ்சிலே நெருடிக் கொண்டிருந்ததை சந்தர்ப்பம் பார்த்து கொட்டிவிட்டதில், சம்பந்தருக்குப் பெரிய சுமை இறக்கி வைத்த நிம்மதி.
அந்த நெருடல் தரையிறங்கவில்லை - மகள், மருமகன் நெஞ்சமதில் ஏறிக் கொண்டது.
"அதுவும் அப்படியா?" என்று மட்டுமே அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் இருவராலும் கேட்க முடிந்ததே தவிர, மேற்கொண்டு விசாரிக்க மனம் இருந்தும் முடியவில்லை.
"ஓம்... அங்கிள்... இதெல்லாம் பொதுவான பிரச்சனைகள் தானே... நீங்கள் திரும்பிப் போனவுடன் கொடுத்து விடுவார்கள்... அது நிச்சயம். ஒரு நாளைச் சொல்லுங்கோ... நாங்களே... உங்களை வந்து அழைத்துப் போகிறோம்... நல்லதொரு விரிவான பேட்டி தர வேணும்... நீங்கள் திரும்பவும் போகவிருப்பதனால்... புனர்வாழ்வு' சம்பந்தமாகக் கருத்துக்களைச் சொல்லலாம்." - என்றார் மருமகன் ரகுநாதனின் அந்த உறவு நண்பர்.
"மரணம் மலிந்த பூமியிலிருந்து புத்துயிர் பெற்று வந்தவர், புனர்வாழ்வுக்குக் குரல் கொடுக்கிறார். - என்ற தலைப்பில் இந்தப் பேட்டியை அமைக்கலாம் என்ன மச்சான்..."- என்றார் இன்னுமொருவர்.
யாவரும் ஆமோதித்தனர்- சம்பந்தரைத் தவிர.
"என்ன... அங்கிள் யோசனை... " ஒருவர் சம்பந்தரின் மௌனத்தைக் கலைத்தார்.
"நான் வந்ததிலிருந்து ஒரு விடயத்தை எங்கட பிள்ளைகளிட்ட கேட்க வேணும் எண்டு நினைச்சனான்... இந்த சுவரில இருக்கிற இரண்டு படங்களும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் இருக்குது."
சம்பந்தர் சுட்டிக்காட்டிய சுவரை எல்லோரும் பார்க்கின்றனர்.
ஒரு பறத்தில் தேசியத் தலைவர், மறு புறத்தில் சாயிபாபா.
"ஏன் மாமா பொருத்தமில்லை... ஒருவர் இன விடுதலைக்கு... மற்றவர் ஆன்மீக விடுதலைக்கு..."
மருமகனின் புத்திசாலித்தனமான பதில் சம்பந்தரை மாத்திரமல்லாது மற்றவர்களையும் வியப்பில் ஆழ்த்தியது.
"இரண்டு பேருக்கும் எதிரிகள் குறிவைச்சுக் கொண்டிருக்கிறான்கள்... ஆனால்... முடிஞ்சுதே... ஒரு நாளும் முடியாது..." - மருமகன் சற்று உணர்ச்சியுடன் உரத்துச் சொல்கிறார்.
இந்த ஒப்பீடு முரணாக இருப்பதாகவே சம்பந்தரின் மனதுக்குப் பட்டது.
விவாதிக்க விரும்பவில்லை.
பால் தேநீர் அனைவருக்கும் வந்தது.
தேநீர் வருமுன் சுபாஷனி வந்து, ஒவ்வொருவரிடமும் எத்தனை ஸ்பூன் சுகர்'- எனக் கேட்டது தான் சம்பந்தருக்கு விநோதமாகப் பட்டது.
"இங்கு அரசியல் ரோகத்துடன் சலரோகமும் இருக்கிறதோ" என்று யோசித்தார்.
பேரப்பிள்ளைகளுடன் இனிமையாகக் கழியவேண்டிய ஒரு பொன்னான பொழுது வீணாகிக் கொண்டிருப்பதாக அவர் உணரத் தொடங்குகிறார்.
சா... போகட்டும்... நாளை ஒரு நாள்... அதற்குப் பிறகும்... பேரப்பிள்ளைகளுடன்தான்...
வந்தவர்கள், தத்தம் பிள்ளைகளுடன் "பை...பை..." சொல்லி விடை பெற்றார்கள். வந்த கார்கள் யாவும் திரும்பி விட்டன.
மருமகன், பிஸ்கட், கட்லட், ரோல்ஸ், கேக் வந்த எவர்சில்வர் தட்டங்களை எடுத்துச் சென்றார்.
மகள், வக்கூம் கிளீனரை' கொண்டு வந்து, தரை விரிப்பில் சிதறிக்கிடந்த பிஸ்கட், கட்லட் துகள்களை அகற்றி துப்பரவு செய்தாள்.
"எல்லாம் ஒரே மெஸ்'ஸாகிப் போட்டுது."-மகள் அலுத்துக் கொண்டாள்.மகள் இப்படிச் சொன்னதுக்கு இரண்டு அர்த்தம் இருக்குமோ?
சம்பந்தர் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்த்து

Gratulerer med 6-års dagen - Tamilsk/norsk forening!

I 6 år har Tamilene vært en naturlig del av Bymisjonssenteret i Tøyenkirken.

Dere kom som fremmede fugler, og brakte med dere sterkere farger og andre dufter enn det vi nordmann omgir oss med. Og dere har ved flere anledninger invitert til fest der vi har fått tatt del i deres glede og vennskap, musikk, dans og mat.

Men dere kom også erfaringer og historier om undertrykkelse og vold I hjemlandet deres - og dere viser oss et engasjement og pågangsmot i arbeidet for å bidra til endring på disse forholdene på Sri Lanka som vi beundrer dere for.

Et møte mellom to så ulike kulturer er alltid spennende - vi har mye å lære og tilføre hverandre. Om og om igjen erfarer vi at det å snakke sammen - og å lytte til hverandre - er en forutsetning for samarbeid. Bare gjennom en slik dialog kan vi utvikle en forståelse for både hva vi har felles og hva som er forskjellig i våre to kulturer - og gjennom dette bygge et sant vennskap.

Takk for at dere viser oss tillit ved å bruke Bymisjonssenteret som base for arbeidet- og la oss håpe at samarbeidet framover vil bidra til å styrke vennskapet mellom oss.

Med hilsen
for Bymisjonssenteret i Tøyenkirken

Inge-Ma Ekblad
fung. daglig leder

www.tamilarangam.net

சுவடுகளின் தடங்கள் பற்றி........

சுவடுகள்
சுவடுகள் 60: கார்த்திகை 1994: ஒஸ்லோ
ஆசிரியர் குழு: துருவபாலகர்

மனிதன் ஓர் அரசியற் பிராணி என்று கூறப்படுவதுண்டு. பொதுவாக மனிதனின் வாழ்வை அரசியல் பாதித்தே வந்துள்ளது. நேரடியான பாதிப்புகள் மாத்திரமன்றி, மறைமுகமான பாதிப்புகளையும், மனித வாழ்வில் அரசியல் ஏற்படுத்தத் தவறுவதில்லை.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழரது வாழ்வில் அரசியல் மிகவும் நெருக்கமாகவும், தவிர்க்க முடியாததாகவும் உள்ளது. எமது கலைகளும், இலக்கியங்களும்கூட இன்று தவிர்க்கமுடியாத அரசியற் பிரதிபலிப்பைக் கொண்டுள்ளன. இனவாத அரசியல் ஈழத்தமிழர் வாழ்வை நேரடியாக எல்லா மட்டங்களிலும் துரத்துகிறது. அத்தோடு தமிழ்ச் சமூகத்தினுள்ளே சமூக, பொருளாதார ரீதியான சமத்துவமின்மை நிறுவனமயப்பட்டுள்ளது.

இத்தகைய காலகட்டத்தில் கருத்துரீதியான தமிழ்ப் பத்திரிகை ஒன்று என்ன செய்யமுடியும் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது இயல்பானதே. இந்திய, இலங்கை அரசுகள், தமிழ் மக்களது விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் போராளிக் குழுக்கள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுடன் அப்பட்டமான ஜனநாயக மறுப்பையும் புரிந்து வருகின்றன. இத்தகைய பாரதூரமான மக்கள்விரோத நடவடிக்கைகளை நடத்திக்கொண்டு, தமது தவறுகளை மறைப்பதற்காகப் பொய்ப் பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மக்களைச் சார்ந்து அவர்களது உண்மையான நலன்களுக்காகக் குரல் கொடுப்பது அவசியமாகிறது. உண்மைகளை மூடிமறைக்கப் பத்திரிகைகள் துணைபோகுமெனில் அவை, மக்களுக்கு எதிரானவை என்றே கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே, தமிழ் மக்களது உரிமைகள் தொடர்பாக மாத்திரமன்றி, ஏனைய இன மக்களது உரிமைகள் நசுக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் அவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கும் உறுதியைக் கொண்டிருத்தல் அவசியம். எனவே சுவடுகள், ஈழத்தமிழர்கள் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைக் கொண்டவர்கள் என்பதை உறுதியாகவும் உரத்தும் சொல்லும் அதேவேளை, இலங்கை ஒரு பல்லின நாடு என்பதையும், அங்கு வாழும் அனைத்துத் தேசிய இனங்களும் தமது சுயநிர்ணய உரிமையைக் கொண்டன என்பதையும் கூறிவருகிறது. இந்த நிலைப்பாட்டில் சுவடுகள் உறுதியாகவே உள்ளது.

இலங்கையின் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் சரியான முறையில் தீர்க்கப்பட உள்ள வேறொரு முக்கிய தடையையும் சுவடுகள் கவனத்திற் கொண்டுள்ளது. ஒவ்வொரு இனத்தினதும் பாரம்பரியப் பிரதேசம் அரசாலோ ஏனைய இனங்களாலோ அபகரிக்கப்படுவதை சுவடுகள் எப்போதும் கண்டிக்கிறது. எல்லா மக்களும் தமது பாரம்பரியப் பிரதேசங்களில் ஏனைய இனங்களின் இடையூறின்றி வாழ்வது உறுதி செய்யப்பட வேண்டும். இலங்கையின் சகல இன மக்களதும் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல்களைக் கண்டிக்கச் சுவடுகள் ஒருபோதும் பின்னிற்பதில்லை. மனித உரிமை மீறல்கள் சுவடுகளால் கண்டிக்கப்படும்போது அவற்றின் பின்னணியில் இருக்கும் குழுக்கள், அந்தக் குறிப்பிட்ட மனித உரிமை மீறல்பற்றி விளக்கம் கொடாமல் அல்லது பொய்யான விளக்கத்தைக் கொடுத்துப் பிரச்சனையை மழுங்கடிக்க முயல்கின்றன. அதைவிடவும், கோழைத்தனமான முறையில் சுவடுகளைப் பற்றிப் பொய்ப் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்துவிடுவதிலும் இவர்கள் தீவிரமாக ஈடுபடுகின்றனர். இவர்களது உண்மையான நோக்கங்கள் எவை என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளமுடியும். நியாயபூர்வமானதும், விவாதத்துக்குரியதும், வாசகர்களது சிந்தனையைப் பயனுள்ள வகையில் தூண்டும் விதத்திலுமான படைப்புகளுக்கு சுவடுகள் எப்போதும் போலவே இனியும் முன்னுரிமை தரும். வாசகர்கள் தமக்கிடையேயான ஆரோக்கியமான விவாதங்களை வளர்க்கவும் எப்போதும் போலவே சுவடுகள் களம்தரும்.

ஈழத்தமிழர்களின் வாழ்வில் முக்கிய அம்சமாக மாறிவிட்ட புலம்பெயர் வாழ்வுக்கும், அதிலேற்படும் பிரச்சனைகட்கும், இவற்றைக் கருக்கொண்டு படைக்கப்படும் இலக்கியங்கட்கும் சுவடுகள் தொடர்ந்தும் இடம்தரும் அதேவேளை, புலம்பெயர்ந்தோர் இலக்கியத்துக்குத் தன்னாலான காத்திரமான பங்களிப்பைத் தொடர்ந்து வழங்க விரும்புகிறது.

புலம்பெயர்ந்த மக்களின் - வாசகர்களின் - ஆதரவில், குறிப்பாக நோர்வேத் தமிழர்களின் ஆதரவில் சுவடுகள் தனது ஆறு வருடங்களை நிறைவு செய்கிறது.

வாசகர்களது ஆதரவு இவ்வாறே தொடருமெனில் இன்னும் நீண்ட தடங்களைப் பதிக்கமுடியும் எனச் சுவடுகள் நம்புகிறது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமயந்தி

எனது கிராமம்

பனிப்போர்வையுள்
நடுங்கிக் கிடந்த
எனது
பலகை அறையுள்
இன்னொரு போர்வையுள் நான்
கண்ணயர்ந்த சற்று நேரம்

கனவில்
எனது கிராமம்
கால்மாட்டில் வந்து குந்தியிருந்தது.
அதன் முகம் கிழிந்துபோயிருந்தது.
ரேகைகள் போலோடிய
அதன் வீதிகள்
அழிந்து கிடந்தன.
பசுந்தரையான அதன் ஆடை
காய்ந்து, தூசுபடிந்து
கசங்கிக் கிடந்தது -
இடையிடையே கிழிசல்கள்.

அதன்
மடியிலிருந்த குடிசைகள்
செத்து, சிதைந்து
சிந்திக் கிடந்தன.
கால்மாட்டில் வந்திருந்து
எனது கிராமம்
கண்ணீர் விட்டது.

"போனாரே போனாரே
என் மக்கள் பரதேசம்
போனவர் வருவாரோ
இந்த
போக்கத்த பூமி மீண்டும்...?

கிராமத்துக் கோடியில்
முளைவிட்ட
பனம் விதைகளிடையே
பாதியிலும் பாதியான
உயிரைக் காவியபடி
கிழவியொருத்தி பாடுகிறாள்.

அவள் பாடல்
என்னிரு கன்னங்களிலும்
மாறி மாறி அறைந்தது.
என் நெஞ்சில்
கால்களால்
ஓங்கி உதைத்தது.

விழித்தேன்.
கனவு போனது
ஆனால்
கால்மாட்டில் அழுதிருந்தது
எனது கிராமம்.

பானுபாரதி

வலிவுடைய மனுக்கள்

விமானம் நங்கூரமிட்டது
என் தலைமேல் வந்து.

அச்சுகள் சறுகிய
இரத்த எழுத்துகளில்
நாட்காட்டி கூறிய
நல்ல நேரமொன்றில்
பனங்கூடையுள் நான்;
பேரீச்சைப் பழங்கள்
பிதுங்கியதைப் போல்
உணர்வுகளும், கனவுகளும்
பிதுங்கிப் பீறிட.

எனைச் சுமந்த,
பனங் கூடையைச் சுமந்த
விமானம்
மாட்டு முதுகில் குந்திய
கரிக்குருவி போல்
பனிமுதுகில் குந்தியது வந்து.

பனங்கூடையுள்ளிருந்து
ஒழுகிய
எனது கனவுகளை
மதுக் கோப்பையிலிட்டு
சுவைத்துக் குடித்தா னொருவன்.

சக்கையாய் கொட்டுண்ட
எனது உணர்வுகளை
பனிக்குவியலுக்குள்
போட்டு மிதித்தான்.

எருச் சாம்பலுக்குள்
நடப்பட்டிருந்த
நத்தார் மரமொன்றுடன்
மஞ்சள் தடவிய கயிற்றால்
நான்
கட்டப்பட்டேன்.

ஆரூடமல்ல,
ஆணித்தரமானது.
எனது
கனவுகளும் உணர்வுகளும்
வலிவுடையன.
அவற்றையேந்தி
நானெழும்போது
பிரபஞ்சம் அறியும்
நானும் மனுவென்று,
வலிவுடைய மனுவென்று.



www.tamilarangam.net



நினைத்துப் பார்க்கிறோம்

சுவடுகள் ஆறு வருடங்களைக் கடந்துள்ளது. வெளிநாட்டு நெருக்கடி வாழ்வின் மத்தியில் இது ஒரு மகத்தான சாதனை எனச் சிலர் வியக்கின்றனர். நேரமின்மை, நிதிப் பிரச்சனைகள், படைப்புகளைப் பெறுவதிலுள்ள சிரமம் என்ற பிரதான தடைகளை ஆறுவருடங்கள் கடந்திருப்பது சாதனையாக இருக்கலாம். வாசகர்களே - அதுவும் சுவடுகளின் நோர்வே வாசகர்களே - சுவடுகளின் தூண்கள். அதேவேளை சுவடுகளின் வேர்களாக இருந்து சிலர் செய்த பங்களிப்பே இந்த நீண்ட வெளியீட்டுச் சாதனைக்குக் காரணமாயமைந்தது எனத் துணிந்து கூறலாம்.

இவர்களது பட்டியல் ஜெயபாலன், பிரேம்ராஜ், ரவிக்குமார், முருகேசு, நடராஜன், இராஜதுரை, கிரிசாந்த், கண்ணன், ஜெயானந்தன், ரவீந்திரன், கோணேஸ், மோகன், காந்தன், செல்வகுமார், கிருஷ்ணபிள்ளை, சிவலிங்கம் என மிக நீண்டது.

ஆறு வருடங்களையும் கடந்த இத்தருணத்தில் இவர்கள் அனைவரையும் நன்றியுடன் சுவடுகள் நினைவுகூர்கிறது. சுவடுகள் வாசகர்களும் எப்போதும் போலவே நன்றிக்குரியவர்கள்.

முன்னட்டை ஓவியம்:
ஓவியர் புகழேந்தி
(ஓவியத் தலைப்பு: ஈழத் தமிழ் அகதிகள்)
பின்னட்டைப் புகைப்படம்:
க.இரத்தினராஜசிங்கம்

சுவடுகள்

Suvadugal
Herslebs gt 43, 0578 Oslo
Norway

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணணி உபகரண வாத்தகத்திலும் நம்மவர்கள்!

புதிய கணனிகள், பிரின்டர்கள், நெற்வோர்க், ஸ்கானர்கள், சொவ்ற்வெயர், ஹார்ட்வெயர் தரமுயர்த்தல், திருத்த வேலைகள், மற்றும் கணனி தொடர்பான சேவைகள்



Serendip International

Grønland, 0188 Oslo 1 Tlf: 22 17 97 55

www.tamilarangam.net

தலைநகரில் தரமான புத்தம்புதிய
வீடியோ, ஓடியோ பிரதிகள் சீ.டி மற்றும்
இலங்கை இந்திய தமிழ் சிங்கள, ஆங்கில
பத்திரிகைகள், சஞ்சிகைகள், மற்றும்
பலசரக்கு சாமான்களைப்
பெற்றுக்கொள்ளவும், உங்கள்
இல்லங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை
சிறந்த முறையில் வீடியோ படம்
பிடிக்கவும், மணவறை அலங்காரப்
பொருட்களை வாடகைக்கு
பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய
இடம்



SVS

VIDEO, FOOD & SILK CENTER

MOTZFELDTS GT 1, 0187 OSLO TLF: 22 17 34 0[illegible] 5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறுாறுாட் தேபான்
நிலையத்தில் புதிதாக ஒரு தமிழ்
வர்த்தக நிலையம்



உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய
உணவுப்பொருட்களை சிரமின்றிப் பெற்றுக்கொள்ளவும்,
(டிசம்பரிலிருந்து) தமிழ் வீடியோப் படங்களின்
பிரதிகளைப் பெற்றுக்கொள்ளவும்

YARL

BUTIK

TLF: 22 16 50 96

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை, சிங்கப்பூர், இலண்டன் வெளிவரும்
நவீன ஆடை அலங்காரங்கள்

விளையாட்டு உபகரணங்கள்

வீட்டு அலங்காரப பாவனைப் பொருட்கள

ஒரே இடம்

தரமான பொருட்கள்

நியாயமான விலை

COLOMBO TEX

Grønland, 0188 Oslo 1 Tlf: Fax: 22 17 63 63

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

New Galaxy

Gullsmed A/S

பழைய நகைகளைப்
புதுப்பித்துக்கொள்ளவும், நகைகளின்
திருத்த வேலைகளுக்கும் ஒஸ்லோவில்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

TØYEN BEKKEN - 12.0188 OSLO

Tlf:22 17 23 03

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலங்கை, இந்தியப் பொருட்களின்
இறக்குமதியாளர்கள்,
மொத்த, சில்லறை வர்த்தகர்கள்

THANGARATNA TRADERS
BREIGT 9 (GRØNLAND) OSLO
TLF: 22 17 96 26 FAX: 22 17 96 26
NORWAY

THANGARATNA TRADERS
VESTERGADE - 24 7400 HENNING
TLF: 97 21 22 58 FAX: 97 21 22 58
DENMARK

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

VIKNA TRAFFIK SKOLE A/S

ஒஸ்லோ மாநகரத்திற்கு அண்மையில்
தரமான பயிற்சி

அதி நெருக்கடியான போக்குவரத்துச்
சாலைகளில்
சாரத்தியப் பயிற்சி

விதிமுறைகள் தொடர்பான
சந்தேகங்களுக்கு தமிழில் விளக்கம்

தமிழர்களுக்கெனத் தனிச் சலுகைக்
கட்டணம்

அதிசொகுசான ஹொண்டா
மேர்சன்டர்ஸ் வாகனத்தில் சாரதிப்
பயிற்சி

உங்கள் தகுதிக்கேற்ப நிர்ணயிக்கப்பட்ட
கட்டணம்



Vikna Traffik Skole
O.H.Bangs Vei 56
1322 HØVIK
TlF: 67 12 38 85 (Office) Mobl: 94 24 40 28

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைநகரில்
தரமான
தங்க நகைகளுக்கு

உங்களுக்குத் தேவையான தங்க நகைகளை நவீன
டிசைன்களில் பெற்றுக் கொள்ளவும்

அரச தங்க நகைக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின்
அங்கீகாரம் பெற்ற 22 காரட் தங்கத்திற்கான
உத்தரவாதத்திற்கும்



CITY TRADERS

GRØNLAND T-BANE STASJON OSLO 1.

TLF& FAX :22 17 22 56

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவடுகள் ஆறாண்டு நிறைவுமலரில் சில பிழை திருத்தங்கள்

சுவடுகள் ஆறாண்டு மலரை உரிய காலத்தில் நாம் வெளியிட வேண்டியிருந்த நிர்ப்பந்தம் காரணமாக, அனேக எழுத்துப் பிழைகள் இதழில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இயன்றவரையிலான தவறுகளை இங்கு திருத்தியுள்ளோம். தவறுகளுக்காகப் படைப்பாளிகளிடமும், வாசகர்களிடமும் மன்னிக்கக் கோருவதோடு, இவற்றைத் திருத்தியபின் வாசிக்குமாறு பணிவோடு வேண்டுகிறோம்.

– சுவடுகள் –

பக்கம்	பந்தி	வரி	பிழை	திருத்தம்
உள்ளட்டை	2	10,11	உதவி:ரவிக்குமார்	உதவி: ரவிக்குமார், திலீபன்
உள்ளட்டை	2	36	முரளிதரன்	ரவிக்குமார்
உள்ளட்டை	3			‘த றூட்ஸ்’ இசைக்குழுவினர்
5	1	3	போராசிரியர்	பேராசிரியர்
	2	18	எண்ானம்	எண்ஞானம்
		23	எழுத்தானரின்	எழுத்தாளரின்
		25	ஆபூர்வமே	அபூர்வமே
		26	எழுத்தானர்களுக்குக்	எழுத்தாளர்களுக்குக்
		31	மனோரதிய்	மனோரதியப்
		35	மட்மே	மட்டுமே
	3	15	இலக்கியச்சொல்	இலக்கியச்செல்
6	1	2	வோகளைத்	வேர்களைத்
		11	வனமும்	வளமும்
		46	பிடாதிபதி	பீடாதிபதி
	3	24	மலர்	மலர்
7	1	8	பின்னெரு	பின்னொரு
7	2	10,13,15,17	முற்	முன்
		12	தவிர்தாலும்	தவிர்த்தாலும்
		19	புஈகப்படம்	புகைப்படம்
		32	துஏக்க	தூக்க
7	3	3,5,9	முற்	முன்
8	1	2	போராதனை	பேராதனை
		17	குறிப்பிடதக்க	குறிப்பிடத்தக்க
9	1	30	மக்களைக்	மக்களைக்
	2	5,6	நூலூா	நூலு
		8	இன்னெரு	இன்னொரு
		27	நுறுக்க	நுணுக்க
	3	3	பௌத்	பௌத்த
12	3	3	மழபடி	மறுபடி
13	3	29	சுரண்டல்கரருக்கு	சுரண்டல்காரருக்கு
14	3	39	பட்ருப்பபூக்	பட்டிருப்பதைக்
17	2	16	புறித	புனித
	3	12	ஜவாலை	ஜ்வாலை
22	1	5	ஏற்பட்பது	ஏற்பட்டது
		8	முறிபோக்கு	முற்போக்கு
		24	மாதுசேதுங்	மா ஓ சேதுங்
		26	படைப்பதற்	படைப்பதன்
	2	15	சுதந்திரங்களை	சூத்திரங்களை
		25	அதற்	அதன்
	3	36	சீரளிவைத்	சீரழிவைத்
23	1	25	இலக்கியங்களிலான	இலக்கியங்களிலான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

23	2	1	நிராகரிந்ந	நிராகரிக்க
	3	19	எற்ற	என்ற
		34	லெவ்லாம்	லெல்லாம்
24	1	5	புத்தியீவிகள்	புத்திஜீவிகள்
		18	வதுவங்கள்	வடிவங்கள்
	3	6	இருப்பபையே	இருப்பதையே
25	2	41	சிறிறேடுகளைத்	சிற்றேடுகளைத்
	3	24	எகே	எங்கே
26	1	21	மலயக	மலையக
	2	19	பிரிட்டிஷ	பிரிட்டிஷ்
		25	கரலாற்றில்	வரலாற்றில்
27	2	2	தூகிகுமேடை	தூக்குமேடை
		18	இரட்டையர்கழ்	இரட்டையர்கள்
		29	மலயகத்தின்	மலையகத்தின்
	3	26	நிற்று	நின்று
		42	வித்தியானந்தன்	நித்தியானந்தன்
28	1	47	ஙங்கையாக்	ரங்கையாக்
	2	2	பொறுத்தவடியில்	பொறுத்தவரையில்
		56	மலைநரட்டுச்	மலைநாட்டுச்
		58	சேர்தது	சேர்த்து
	3	21	இப்பிரிசு	இப்பரிசுச்
		52	இவான்	இவரின்
		54	அடிப்படிட	அடிப்படை
29	1	25	அநாயசமாக	அநாயாசமாக
		24	தருகிற்றன	தருகின்றன
		25	நாமிருக்குக்ஷ	நாமிருக்கும்
	2	2	இன்றய	இன்றைய
		39	எழுத்தாளர்கழில்	எழுத்தாளர்களில்
			அங்கிதச்	அங்கதச்
30	2	26	துணை	துணைவி
			முடியவில்லெ	முடியவில்லை.
	3	15	ஒளிபரப்பச்	ஒலிபரப்பச்
31	2	60	தேடிவப்படும்	தேவைப்படும்
	3	39	அழகரன	அழகான
		45	இரண்மே	இரண்டுமே
		56	பறப்பட்டு	புறப்பட்டு
		58	இதல்லாம்	இதெல்லாம்
32	1	14	ஹீ	ஹ
	2	16	ஷோலுக்கு	ஹோலுக்கு
		43	எலிலோரையும்	எல்லோரையும்
	2	19	கதுதங்களை	கடிதங்களை
	3	29	தூதகத்தில்	தூதகரத்தில்
		58	வேண்ருடும்	வேண்டும்
33	1	15	குகும்பத்துப்	குடும்பத்துப்
		24	அவருகிகுத்	அவருக்குத்

பக்கம் 31, பந்தி 3, வரி 33இல்" என்றிருக்கும் இடத்தில், "More things are wrought by prayer than this world dreams of......" *என இருந்திருக்க வேண்டும்.*

www.tamilarangam.net

ஒஸ்லோவில், ஒரு தமிழர் நிறுவனம் உங்கள் விமானப் பயணங்களை
இலகுவாக்கிறது!. நியாயமான கட்டணமே அதன் தனித்துவம்
நம்பிக்கையான சேவையே அதன் இலட்சியம்!

சுபயாத்ரா



சுபயாத்ரா

SHUBHA YATRA REISEBYRÅ

Grønland T-banestasjon, 0188 Oslo. Tel: 22 17 26 70 Fax: 22 17 26 71

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாராணம்மாள்புரம் அகதி முகாம், நெல்லை, தமிழ்நாடு